

# சிரியாவின் கிழக்கு கூதா: பூமியில் ஒரு நரகம் 09



"முஸ்லிம்கள் எமக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள், ஆனால் வாக்களிப்பதில்லை" 07

விஜித ஹேரத் (ஜேவிபி எம்.பி)





# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 389 • 02 மார்ச் 2018 வெள்ளிக்கிழமை • ஜமாதுல் ஆகிர் 1439 • விலை 40.00







# மாகாண எல்லை நிர்ணயத்திலும் அநீதி

- கலாநிதி ஹஸ்புல்லாவும் கைச்சாத்து
- முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அவசர சந்திப்பு


முன்வைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களுக்கான எல்லை நிர்ணயம் முஸ்லிம்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ற வகையில் நடைபெறவில்லை என அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் செயலாளரும் தேசிய சூறா சபை ஒருங்கிணைப்பாளருமான சட்டத்தரணி அஜ்வதீன் சுட்டிக் காட்டியுள்ளார்.

1976 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் போது இலங்கையில் 160 தொகுதிகள் காணப்பட்டன. அப்போது இலங்கையில் முஸ்லிம்களின் சனத் தொகை வீதம் 7.5 ஆக (பக். 02)



## சட்டம் ஒழுங்கு அமைச்சு பிரதமரிடம் இருந்து மீட்கப்படும்

அமைச்சரவை மாற்றம் ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைக்கே செய்யப்பட்டது. பிரதமர் சில நாட்களுக்கே சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவியை வகிப்பார். விரைவில் அந்த இடத்துக்கு வேறு ஒருவர் நியமிக்கப்படுவார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் அமைச்சர் துமிந்த திசாநாயக்க ஊடகச் சந்திப்பின் போது தெரிவித்தார். (பக். 02)



## சிங்கள இளைஞர்களின் மூட நம்பிக்கையின் விளைவு

**சட்டம், ஒழுங்கு இதுவரை நிலைநாட்டப்படவில்லை**

சாப்பிடுவதன் மூலம் கருத்தடை செய்யலாம் என்ற மூட நம்பிக்கையினால் உந்தப்பட்ட சில சிங்கள இளைஞர்களினால் அம்பாறை நகரில் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் தொடர்பில் புதிதாக நியமிக்கப்பட்ட சட்டம் ஒழுங்கு அமைச்சர் மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது தொடர்பில் முஸ்லிம் சமூகத் தலைமைகள் பலரும் கவலை தெரிவித்து வருகின்றனர். (பக். 02)

## பிரதமரிடமிருந்து மற்றுமொரு பொறுப்பு நீக்கம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பொறுப்பில் இயங்கி வந்த பொருளாதார முகாமைத்துவக் குழுவை கலைப்பதற்கு ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தின் போது பரிந்துரைத்துள்ளார். பிரதமர் தலைமையிலான இந்தக் குழு கடந்த காலங்களில் எடுத்த முடிவுகள் தோல்வியில் முடிவடைந்தமை குறித்து ஜனாதிபதி அவர்கள் இந்தக் கூட்டத்தில் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளதோடு, (பக். 02)

## ஜெருசலத்திலிருந்து கிறிஸ்தவர்களை அப்புறப்படுத்தும் திட்டத்துக்கு கண்டனம்

கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது வரி அறவிடுவதற்கும் பிரதேசத்திலுள்ள தேவாலயங்களை கையகப்படுத்துவதற்குமான ஜெரூஸலத்தின் தீர்மானங்களை ஆழ்ந்து அவதானித்து வருவதாக இலங்கை பலஸ்தீன நட்புறவுச் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, (பக். 02)

## கோத்தபாயவை பிரதமராக்க ஜனாதிபதி முயற்சி



கோத்தபாய ராஜபக்ஷவை பிரதமராக்கி தொடர்ந்தும் ஜனாதிபதி அதிகாரத்தை தக்க வைப்பதற்கே மைத்திரிபால சிறிசேன முயற்சித்தார் என மக்கள் விடுதலை முன்னணி யின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க பி.பி.சி.க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். (பக். 02)



## சிரியா நாட்டு மக்களுக்காக பிரார்த்திக்க ஜம்மியதுல் உலமா வேண்டுகோள்

தற்பொழுது சிரியாவில் நடைபெற்று வரும் மனிதப் படுகொலைகள் தொடர்பில் முஸ்லிம்கள் பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டுமென அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.ஏ. முபாரக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உங்களுக்கு வலிக்கவில்லையா?

5 நாட்களுக்குள் 400 இற்கும் அதிகமானோர் சிரியாவில் கொல்லப்பட்டுள்ளனர். அதில் 150 பேர் சிறுவர்கள். நாடு வேறாகலாம், வலிகள் வேறுபடுவதில்லை.

## என்ன நடக்குது சிரியாவுல?

- கவிஞர் அஸ்மின்



என்ன நடக்குது சிரியாவுல -நாம
உம்மென்னிருப்பது சரியா புள்ள..
ஒன்னும் வெளங்கல துனியாவுல-
நாங்க இன்னுமொறங்கிறம் கொல்ல
கொல்ல...

என்ன நடக்குது சிரியாவுல -நாம
உம்மென்னிருப்பது சரியா புள்ள..

பிஞ்சு குழந்தைகள் நஞ்சுக்கணைபட்டு
செத்துக்கிடக்குதடா...
நெஞ்சு துடிக்குது ரத்தம் கொதிக்குது
என்ன கொடுமையடா..

உலகம் அழிகையில்
உம்மென்றிருப்பவன்
நல்ல மனிதனாடா..?
சாதிமதங்கள தூக்கி எறிந்திடு
அவனும் மனிதனடா..

பச்சக் கொழந்தைய எச்சிப்பய மகன்
வெட்டித் தெருவிலே போடுகிறான்
நச்சுக் கணைகளை வச்சு திரிபவன்
உச்சக் கொடூரத்த மூடுகிறான்


யுத்தம் வெடிக்கையில் பித்தம்
பிடித்தவன்
ரத்தக் கதகளி ஆடுகிறான்..
மொத்த சனத்தையும் கொன்னுப்புட்டு
அவன்
செத்த பொணத்தையா ஆண்டிடுவான்

என்ன நடக்குது சிரியாவுல -நாம
உம்மென்னிருப்பது சரியா புள்ள.. ?

ஏக இறைவனே எங்க இருக்கிற
இன்னுமா நீஇத பாத்திருக்க ..?
போகவழியில்ல நெஞ்சு துடிக்குது
பாவிப்பயலுடன் போர்தொடுக்க..

சவூதிஅரேபியா கண்ணமூடிக்கிட்டு
சாத்தான் அவனிடம் பால்குடிக்க
தோழா வருவியா தோளத்தருவியா
அழியும் சிரியாக்கு
தோள்கொடுக்க...

என்ன நடக்குது சிரியாவுல -நாம
உம்மென்னிருப்பது சரியா புள்ள..




அனிஸ் அப்பாஸ்



-ஸப்ராஸ் புஹாரி

ATM இல் பணம் எடுத்து விட்டு அவசியம் இல்லாமல் ரிஸீப்ட் பிரிண்ட் பண்ணுவதைத் தவிர்ப்பதன் மூலமும் சூழல் பாதுகாப்புக்குப் பங்களிக்கலாம்.

## தடமே இல்லாத ரோஹிங்கியா



மியான்மாரில் ரோஹிங்கியாக்கள் வாழ்ந்து வந்த கிராமங்கள் அடியோடு அழிக்கப்பட்டது செயற்கைகோள் படங்களின் மூலம் தெரியவந்துள்ளதாக பிரசார குழுவான 'ஹியூமன் ரைட்ஸ் வாட்ச்' தெரிவித்துள்ளது

ஏற்கனவே கலவரத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 55 கிராமங்கள், புல்டோசர் கொண்டு அடியோடு அழிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

- சா ஸுபையன்

## பேரிளைஞர்

- ரிம்ஸான் அமானுல்லாஹ்

புதிய அமைச்சரவையில் இளைஞர் விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் திருவாளர் பியசேன கமகேவுக்கு 69 வயதாம். அதையொட்டி சமூக வலைதளங்களில் கடும் கண்டனங்களையும், கலாய்த்தல்களையும் காணக்கூடியதாகவுள்ளது.

அய்யா மகானுபாவர்களே, அமைச்சரவை வரைக்கும் எதற்குப் போவானேன். உங்களைச் சுற்றிலும் இயங்கிவரும் அத்தனை இளைஞர் அமைப்புகளையும் கொஞ்சம் கவனியுங்கள்: YMBA, YMCA, YMHA, YMMA, மற்றும் பழைய மாணவர் சங்கங்கள், பட்டதாரிகள் சங்கங்கள் - அனைத்திலுமே ஆயுட்கால தலைவர்/செயலாளராக பேரிளைஞர்கள்தாம் பதவி வகித்துக் கொண்டிருப்பதைக் காண்பீர்கள்.

## வார்த்தை



- மொஹமட் முனவ்வர்

உள்ளே தள்ளும் உணவு
ருசியாக இருக்க வேண்டும் என
நினைக்கும் நாவு வெளிய தள்ளும்
வார்த்தையில் மட்டும் எதையும்
நினைப்பதில்லை.




- சில்மி

சிரிக்கவே
முடியாத
நாட்டுக்கு
சிரியா என்று
பெயர்..

## சிரியயாவின் மரண மணம்!

- முஜீப் இப்ராஹீம்

மரணத்திற்கு நிறமில்லை
மரணத்திற்கு மணமிருக்கிறது!

எங்களூர் பள்ளிவாயல்களில்
கொத்துக்கொத்தாக
மனிதர்கள் மரணித்துப்போன
போது
ஊர் முழுக்க பல நாட்கள் வீசிய
வாசம்...

அது மரண வாசம்!

அதை விடக்கொடிய வாசம்
முள்ளிவாய்க்காலிலும்
வீசியிருக்கும்.

அது எஞ்சிய உறவுகளின் நாசித்
துவாரங்களுக்குள்
இன்னும் தேங்கிக்கிடக்கிற வாசம்.

மரண வாசமென்றால் சாம்பிராணி
புகையிலும்
மணக்குச்சியிலும் எழுந்து
வருகிற வாசமென்றா அறிந்தாய்
குழந்தாய்...?

இல்லை.... ஒரு போதும் இல்லை!

காத்தான்குடிப்பள்ளிகளில்
அரந்தலாவையில்
முள்ளிவாய்க்காலில்
முகரக்கிடைத்த வாசமெல்லாம்
இதன் முன்னே
தோற்றுப்போய் கை கட்டி
நிற்கிறதே!

அந்த வாசத்தை அறிந்தாயா?

ஆயிரமாயிரம் மைல்கள் கடந்தும்
நமது நாசித்துளைகளை தகர்த்து
உயிரின் கடைசித்துளியில்
ஒட்டிக்கொண்டு ஊசலாடுகிற
சிரிய தேசத்துக்குழந்தைகளின்
மரண வாசத்தை அறிந்தாயா?

நமது ஆடைகளில்
நமது உணவுப்பருக்கைகளில்
நமது படுக்கையில்
எங்கும் பரவி அது மணக்கிறது.

## மாகாண எல்லை... (01 ஆம் பக்கத் தொடர்)

இருந்தது. இருந்தபோதிலும் முஸ்லிம்களுக்கு அப்போது 12 (7.5%) தொகுதிகள் கிடைத்தன. தற்போதைய மாகாண எல்லை நிர்ணயத்தின் படி 222 தொகுதிகளாக மாகாணங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் 13 தொகுதிகளே முஸ்லிம்களுக்குக் கிடைப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகை 9.7 வீதமாக அதிகரித்த போதிலும் முஸ்லிம்களுக்கான பிரதிநிதித்துவம் 5.8 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது.

தமிழர்களுக்கு அவர்களது 11 வீத சனத்தொகைக்கேற்ற தொகுதிகளும் மலையகத் தமிழர்களுக்கு அவர்களது 4.5 வீத சனத்தொகை வீதத்துக்கேற்ப 9 தொகுதிகளும் கிடைத்துள்ளன. ஆனால் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டு அதற்குப் பதிலாக பெரும்பான்மைச் சமூகத்தின் பிரதிநிதித்துவம் அவர்களது சனத்தொகை வீதத்துக்கும் அதிகமான வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த அநீதியை முஸ்லிம் சமூகம் ஏற்றுக் கொள்ளவோ விட்டுக் கொடுக்கவோ முடியாது என சட்டத்தரணி அஜ்வதீன் மேலும் குறிப்பிட்டார்.

மாகாண எல்லை நிர்ணயக் குழுவினர் தமது பணியை ஆரம்பிக்க முன்பிருந்தே அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியும் தேசிய ஷூறாவும் இணைந்து நாடு முழுவதும் விஜயம் செய்து மக்களுடன் கலந்துரையாடி அறிக்கைகளை குறித்த குழுவினருக்கு சமர்ப்பித்த போதும், அவற்றை உள்வாங்குவதில் குழுவினர் போதுமான கவனம் செலுத்தவில்லை என்று தெரியவருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாகாண எல்லை நிர்ணயக் குழுவில் கலாநிதி ஹஸ்புல்லாஹ்வும் இடம் பெற்றிருந்த போதிலும், குழுவின் அறிக்கை முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருப்பது தொடர்பிலும், அறிக்கை முஸ்லிம்களுக்குப் பாதகமாக இருப்பது தெரிந்த போதிலும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் கைதூக்குவது போல இந்த அறிக்கையில் கலாநிதி ஹஸ்புல்லாவும் கைச்சாத்திட்டிருப்பது தொடர்பிலும் முஸ்லிம் சமூகத்திலிருந்து கண்டனங்கள் வெளிவந்தமுள்ளன. குறித்த அறிக்கை முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கும் வகையில் அமைந்துள்ளதால் தன்னால் அதில் கைச்சாத்திட முடியாது என்று குழுவின் அங்கத்தவரான கலாநிதி ஹஸ்புல்லா மறுத்திருந்தால் இந்த அறிக்கை வறிதாகிவிடும் எனப் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

தற்பொழுது மாகாண எல்லை நிர்ணய அறிக்கை உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்க்கப்படவுள்ளது. அதற்கு முன்னர் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து இது தொடர்பில் அவர்களது ஒத்துழைப்பை வேண்டும் வகையில் மார்ச் 06 ஆம் திகதி விஷேட கூட்டமொன்றை தேசிய ஷூறா சபை ஏற்பாடு செய்துள்ளது.

## சட்டம், ஒழுங்கு... (01 ஆம் பக்கத் தொடர்)

சட்டம், ஒழுங்கு அமைச்சை சுதந்திரக் கட்சி பொறுப்பேற்பது தொடர்பாக ஐ.தே.க தரப்புடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. சு.கவுக்கும் ஐ.தே.கவுக்கும் இடையில் பகிரப்பட்ட அமைச்சு பொறுப்புகளுக்கு அமையவே இந்த அமைச்சு ஐ.தே.கவுக்கு வழங்கப்பட்டது. சட்டம், ஒழுங்கு அமைச்சை இரு தரப்பும் கைமாற்றுவது குறித்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த அமைச்சினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கையேற்பது சம்பந்தமாக பேசப்பட்டு வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

நடந்து முடிந்த அமைச்சரவை மாற்றம் ஐ.தே.க.வின் தேவைக்கேற்பவே நடந்தது. அதற்கு அவர்கள் தான் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## சிங்கள இளைஞர்களின்... (01 ஆம் பக்கத் தொடர்)

அம்பாறை டி.எஸ். சேனாநாயக்க வீதியில் அமைந்துள்ள ஜும்ஆப் பள்ளிவாசல், அதனை அண்டியுள்ள நான்கு முஸ்லிம் வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் என்பனவும் இதன்போது சேதமாக்கப்பட்டுள்ளன. தாக்குதல் திடீர் சம்பவம் அல்ல எனவும், ஏலவே திட்டமிட்ட விதமாகவே தாக்குதல் நடந்துள்ளதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

காசாளருடனான பிரச்சினை ஆரம்பிக்கும் பொழுதே அதனை வீடியோ எடுத்தமையும், கடையில் பொருத்தப்பட்டிருந்த சீசீடீவி கமராவினதும் அதனுடைய ரிசீவரினதும் 'சிப்' ஏற்கனவே அகற்றப்பட்டிருந்தமையும், 50 மோட்டார் சைக்கிள்களிலும் ஒரு பஸ் வண்டி முழுவதுமாகவும் குண்டர்கள் குவிக்கப்பட்டமையும் ஏற்கனவே இதற்கான திட்டமிடல் ஒன்று இருந்திருப்பதைக் காட்டுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாரை வார்க்கச் செய்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், இது விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூப்பாடு போட்ட போதும் அவரது குரலுக்கு எந்தவித மதிப்பும் அளிக்கப்படவில்லை.

அத்தோடு அம்பாறை மாவட்ட மு.கா. பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சர் ஹரீஸ் பிரதமரை உடனடியாகத் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அவரது தொலைபேசி அழைப்புக்கு அவர் பதிலளிக்கவுமில்லை எனவும் தெரியவருகிறது. பின்னர் அவர் தொலைநகல் மூலமாக பிரதமருக்கு விடயத்தை அறிவித்திருப்பதாகவும், அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவரைத் தேடிச் சென்று சந்தித்து விடயத்தை விளங்கப்படுத்தியதாகவும், இதன் பின்னர் நாளை (03) அவர் அம்பாறைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 3 நிமிடத்தில் வந்து சேரக் கூடிய 500 மீட்டர் தூரத்திலேயே பொலிசார் நிலைகொண்டிருந்த போதும் சம்பவம் நடந்து முடிந்து ஒன்றரை மணித்தியாலங்களிலேயே அவர்கள் ஸ்தலத்துக்கு வந்து சேர்ந்தமை தொடர்பில் சட்டம் ஒழுங்கு அமைச்சர் வகை கூற வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. இந்த விவகாரம் தொடர்பில் இதுவரை எவரும் கைதாகவில்லை.

## பிரதமரிடமிருந்து... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்தக் குழுவினால் எந்தப் பயனும் இல்லை என்பதனால் அதனைக் கலைத்து விடும் பரிந்துரையை முன்வைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பொருளாதாரம் தொடர்பான விஷேட முடிவுகளை எடுக்கும் சிறப்புரிமை இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டிருந்தது. தற்போது இந்தக் குழுவின் நடவடிக்கைகளை ஜனாதிபதியின் தலைமையின் கீழ் இயங்கும் தேசிய பொருளாதார சபைக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக பொருளாதார நடவடிக்கைகள் தன் கையில் இருக்கவில்லை என்றும் அதனைத் தனது பொறுப்பில் எடுக்கவிருப்பதாகவும், உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரங்களின் போது ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருந்தார்.

## கோத்தபாய... (01 ஆம் பக்கத் தொடர்)

அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வாக்குகள் மஹிந்த ராஜபக்ஷவிடம் உள்ளன என்பதை ஜனாதிபதி நன்கு அறிவார். அதனால் தான் மீண்டும் அவர்களை இணைத்துக் கொண்டு அதிகாரத்தை தக்கவைக்க முயற்சித்து வருகின்றார் என்பது தெளிவாகத் தெரிவிகின்றது.

ராஜபக்ஷ குடும்பத்தின் சிலரை, குறிப்பாக கோத்தபாய ராஜபக்ஷ போன்றவர்களை தன்னுடன் இணைத்துக் கொண்டு செல்லவே அவர் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். கோத்தபாய ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து ஆட்சியைக் கொண்டு செல்ல அவர் திட்டமிடுகின்றார் என்றும் அவர் அந்தப் பேட்டியின் போது தெரிவித்துள்ளார்.

## ஜெரூசலத்திலிருந்து... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்த நடவடிக்கைகள் சியோனிசத்தின் குறிக்கோள்களை அடைவதற்காக யூதர்களுக்கான தனியான இனவாத அரசை நிறுவுவதற்கான ஒரு நடவடிக்கையாகவே நாங்கள் இதனை காண்கிறோம். பலஸ்தீன முஸ்லிம்களினதும் கிறிஸ்தவர்களினதும் மதச் சுதந்திரத்தை குறைத்து மதிப்பிடும் வகையில் கடந்த வருடம் அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் ஜெரூஸலத்தை இஸ்ரேலின் தலைநகராகப் பிரகடனப்படுத்தியதால் வந்துள்ள துணிச்சலை நாம் அச்ச உணர்வுடன் நோக்குகிறோம்.

புதிய வரிகளையும் தேவாலயத்துக்குச் சொந்தமான உடைமைகளைப் பறிமுதல் செய்தலையும் எதிர்த்துப் போராடும் வகையில் புனித அடக்கஸ்தலத்தை மூடி வைத்துள்ள பலஸ்தீன கிறிஸ்தவ தேவாலயத் தலைவர்களுக்கு நாங்கள் எமது ஆதரவினைத் தெரிவிக்கிறோம். அத்தோடு கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது வரி விதிப்பதையும் தேவாலயங்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதையும் கைவிடுமாறும் நாம் ஜெரூஸலம் நகர அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரணில்-மைத்திரி கூட்டணியின் இயலாமையே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றி

• லத்தீப் பாரூக்



இந்த நாட்டு மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் இயலாமையே நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அவர்களுக்கு பாரிய சரிவை ஏற்படுத்தியுள்ளது. நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இருவரும் தோல்வி கண்டுள்ளனர்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் குறுகிய காலப் பகுதிக்குள் நாட்டில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடிகள் என்பனவும் இந்தத் தோல்விக்கு இன்னொரு பிரதான காரணம் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவை தான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் (SLPP) மலர் மொட்டு பூத்துக் குலுங்க முக்கிய காரணங்களாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி இந்தத் தேர்தலில் சொற்பளவான சபைகளைக் கைப்பற்றி இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கட்சியின் நிலை மிகவும் பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் என SLPP மொத்தம் 222 உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி 41 சபைகளையும், இலங்கை தமிழ் அரசுக் கட்சி 34 சபைகளையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏழு சபைகளையும் கைப்பற்றியுள்ளன.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நிலவிய அராஜகம், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, குற்றச் செயல்கள் தலைவிரித்தாடியமை, ஊழல் மோசடி என்பன இன்னமும் மக்கள் மனங்களில் இருந்து நீங்காத நினைவுகளாக அப்படியே உள்ளன. அந்த நிலையிலும் அவரது தலைமையிலான புதிதாக உருவாக்கப்பட்ட SLPP ஐ மக்கள் ஆதரித்திருக்கின்றார்கள் என்றால் அது அவருக்கு கிடைத்துள்ள மீள்அங்கீகாரம் அல்ல. தற்போதைய தலைமைகள் மீது ஏற்பட்டுள்ள வெறுப்பையும் அதிருப்தியையும் கோபத்தையுமே மக்கள் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளனர் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் இடம்பெற்ற அட்டூழியங்கள், நாட்டின் சொத்துக்கள் பாரிய அளவில் சூறையாடப்பட்டமை, இனங்களுக்கு இடையில் ஏற்படுத்தப்பட்ட முறுகல் நிலை என்பனவற்றால் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள் இந்தத் தீய சக்திகளின் பிடியில் இருந்து இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் மீட்டெடுப்பதற்காக ரணில்-மைத்திரி கூட்டணிக்கு மிகவும் நம்பிக்கையோடு வாக்களித்தனர்.

உண்மையில் ரணில் மைத்திரி கூட்டணி நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதியும் இதுவாகத்தான் இருந்தது. தொந்தரவுகளுக்கு உள்ளான மக்கள் அவர்களை நம்பினர். ஆனால் மூன்று வருடங்கள் கழிந்துள்ள இன்றைய நிலையில் இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இருவருமே தவறி விட்டனர். இந்த அரசு நிறுவப்பட்ட ஆரம்பம் முதலே குழப்பங்கள் சூழ்ந்திருந்தன. ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான முன்னாள் அரசின் அமைச்சர்கள் பலர் மீண்டும் இந்த அரசில் இணைத்துக் கொள்ளப்பட்டமையே இந்தக் குழப்ப நிலைக்கு முக்கிய காரணம். இதே ஊழல் பேர்வழிகளைக் காப்பாற்ற நீதித்துறையில் தலையீடுகள் இடம் பெற்றுள்ளதாகக் கூட குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

மக்களால் அளிக்கப்பட்ட தீர்ப்பை துச்சமெனக் கருதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களால் தோற்கடிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டவர்களை தன்னோடு இணைத்து அவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவிகள் வழங்கி அமைச்சரவையிலும் அமரச் செய்தார்.

ஏற்கனவே பல ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தவர்கள் மீது எந்த நடவடிக்கையும் முறையாக மேற்கொள்ளப்படாததால் அவர்கள் எதிர் தரப்பில் இருந்து கொண்டே அரசுக்கு சால் விடுக்கும் நிலை உருவானது. இந்த ஊழல் பேர்வழிகள் மீது சரியான நடவடிக்கைகள் எடுக்காமல் அவர்களைப் பாதுகாக்கும் வகையில் நீதித்துறை சுதந்திரத்தில் தலையிட்டார்கள் என்ற குற்றச்சாட்டு நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரி ஆகிய இருவர் மீதும் உள்ளன.

தேசிய ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு பிரதி அமைச்சர் ரஞ்ஜன் ராமநாயக்க அளித்துள்ள பேட்டியில் இதனை பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

"பொதுச் சொத்தை சூறையாடியவர்களுக்கு எதிராக முறைப்படி நடவடிக்கை எடுங்கள் என்று மக்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். கடந்த ஆட்சி காலத்தில் பாரிய அளவில் பொதுச் சொத்தை சூறையாடிய எவரையும் இந்த மூன்றாண்டு காலத்தில் அரசு இதுவரை கைது செய்யவில்லை. மத்திய வங்கி பிணை முறி ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர். ஆனால் அது காலம் கடந்த நடவடிக்கையாகவே இருந்தது.

நடந்து முடிந்த தேர்தல் பிரசாரத்தின் கடைசிக் காலத்தில் தான் அவர்கள் கைது செய்யப்பட்டனர். பொதுச் சொத்தை சூறையாடியவர்கள் மீது உரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுத்து பாரபட்சம் இன்றி அவர்களை சிறையில் அடைத்திருந்தால் இந்த முடிவுகள் இவ்வாறு அமைந்திருக்காது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் விரக்தியின் உச்ச நிலைக்கு வந்தனர். நல்லாட்சி அரசின் மீது தொடர்ச்சியாக சுமத்தப்பட்ட ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களால் மக்கள் நலிவுற்று களைப்படைந்தனர். பிணை முறி மோசடித் தொகையால் முழு நாடும் அதிர்ச்சியடைந்தது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அதில் தொடர்பு உள்ளது என்ற குற்றச்சாட்டு மிகவும் வெட்கக் கேடானதாக மாறி நிலைமையை மேலும் மோசமாக்கியது.

கொழுந்து விட்டெரியும் மக்கள் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைக் காண்பதற்கு பதிலாக நாட்டின் தலைவர்கள் அமெரிக்காவால் வரைந்து கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை அமுல் செய்வதில் பெரும் ஆர்வம் காட்டினர். உதாரணத்துக்கு உள்நாட்டு இறைவரி திருத்தச் சட்ட வரைபு சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்பட்டது. உள்ளூரில் பல பிரச்சினைகளை கிடப்பில் போட்டு விட்டு ஜனாதிபதியும் பிரதமரும் நாடுகளுக்கு இடையில் இரு தரப்பு உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதற்காக உலகை வலம் வந்தனர்.

(பக்.14)

• நேசன்

# எழும்பத் தூண்டுவதற்கு வாக்களித்தவர்களும் எலும்புத் துண்டுகளுக்கு வாக்களித்தவர்களும்




உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தொடர்பில் வெளிவந்து கொண்டிருக்கும் மயிர்கூச்செறியும் அலசல்கள் இதுவரை நடந்து முடிந்திருக்கலாம். அல்லது கடந்த காலங்களில் போராட்டங்கள் நடத்தியவர்கள் எல்லாம் தத்தமது போராட்டங்கள் பற்றி ஞாபகிக்கும் போதெல்லாம், தேர்தல் முடிவுகளுக்கு இது தான் காரணம் என்று சாக்குச் சொல்வதற்காக அவ்வப்போது தேர்தல் முடிவுகள் மீளவும் அசை போடப்படலாம். எவ்வாறாயினும் போதுமான அளவுக்கு தேர்தல் முடிவுகள் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்பது அமைச்சரவை மாற்றம் என்ற வெளிப்படுத்தல் ஊடாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம்.

இறுதியாக ஒரு அலசல். வகுப்பிலே விஷமத்தனம் புரியும் சக மாணவன் தொடர்பில், நெருங்கிப் பழகும் பள்ளித் தோழன் ஒருவன், அவனுடன் சகவாசம் வைத்துக் கொள்ளாதே, அவன் மிக மோசமானவன் என்று எச்சரித்தானாம். இவனும் அதனை நம்பி அன்று முதல் அவனிடமிருந்து விலகி இவனுடன் சகவாசம் வைத்துக் கொண்டானாம். போகப் போக இவனுக்கும் அவனுக்கும் எந்த வித்தியாசமுமில்லை என்று உணர்ந்து கொண்டதோடு, அவன் மோசமானவன் என்பதை இவன் நம்புமளவுக்கு அவன் எந்தவிதமான சான்றுகளையும் இவனுக்குக் காட்டவுமில்லையாம். ஏமாந்து போன அவன் தருணம் பார்த்துக் காத்திருந்து, உரிய வேளை வந்ததும் இவனை ஏமாற்றி விட்டு மீண்டும் அவனுடனேயே சேர்ந்து கொண்டானாம்.

நாட்டின் பெரும்பான்மை வாக்காளர்களின் தீர்ப்பு இப்படித் தான் அமைந்திருக்கிறது. ஊழல்தான் முன்னைய தலைவரை மாற்றுவதற்கான முக்கிய காரணமாகச் சொல்லப்பட்ட போதும் இந்த ஆட்சியில் அது இதுவரை நிரூபணமாக்கப்படவில்லை என்பதோடு, இந்த ஆட்சியும் அதற்கு விதிவிலக்காக நடந்து கொள்ளவுமில்லை. இது தான் மக்களின் தீர்ப்புக்கு காரணம் என்று சிலர் சொல்கிறார்கள்.

கடந்த மூன்று வருடங்களில் எதனையும் புதிய ஆட்சி செயது காட்டவில்லை என்பதும் 100 நாள் வேலைத் திட்டமே இன்னும் பூர்த்தியாக்கப்படாமல் தொடர்கிறது என்பதும் இன்னொரு தரப்பு சொல்லும் நியாயம்.

அரசியலமைப்பு மாற்றத்துக்கு ஆதரவு தாருங்கள் என்று தேர்தலின்போது விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு மக்கள் தமது எதிரிடையான ஆணையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்கிறது இன்னொரு தரப்பு.

எது எப்படிப் போனாலும் பெரும்பான்மை வாக்காளர்கள் இந்தத் தேர்தலின் ஊடாக அரசாங்கத்தின் மீதான தமது அதிருப்தியை தெளிவாக வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இரண்டு கட்சிகளும் மக்கள் வெளிப்படுத்திய கருத்துக்களுக்குச் செவிசாய்த்து தம்மைத் திருத்திக் கொள்வதாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

தமிழர்களுடைய தேர்தல் வெளிப்பாடும் தெளிவாக இருக்கிறது. தமது பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியான தீர்வினைப் பெற்றுத் தருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை காலமும் காட்டிக் கொண்டு வந்த இலவம் பழத்தை நம்பி இனியும் காத்துக் கொண்டிருக்க முடியாது என்ற நிலைப்பாட்டை அவர்கள் தேர்தல் முடிவுகள் ஊடாக வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

இந்தத் தேர்தலின் ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 38 சபைகள் கிடைத்துள்ள போதிலும் வடக்கில் ஒரு சபையிலும் கிழக்கில் ஒரு சபையிலுமாக இரண்டே சபைகளில் மாத்திரமே தனித்து ஆட்சியமைக்கும் வகையிலான பலத்தைப் பெற்றிருக்கிறது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்வைத்து நல்லாட்சி அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கியது. இதன் மூலம் புதிய அரசியலமைப்பை வரைந்து தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என தமிழ் மக்களுக்கு மனப்பால் ஊட்டியது. அதுவரை மக்களைப் பொறுமையாக இருக்கும்படியும் இலங்கைத் தமிழரசுக் கட்சியை தலைமையாகக் கொண்ட கூட்டமைப்பு வேண்டியது.

ஆனாலும் அரசாங்கத்துடன் இணைந்து தேனிலவு கொண்டாடியதைத் தவிர இந்த மூன்று வருட காலப்பகுதியிலும் உருப்படியாக எதுவும் நடக்கவில்லை என்பதற்கான அதிருப்தியை மக்கள் தேர்தலின் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். மக்களது ஆணையை மதித்து தமது தவறுகளை சரிசெய்து நடந்து கொள்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருப்பதோடு, தமிழர்களுக்கான தீர்வு விடயங்களை விரைவுபடுத்தும் நோக்கிலான கலந்துரையாடல்களிலும் முன்னரை விட காத்திரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளது.

மலையகத்தைப் பொறுத்தவரையிலும் புதிய தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு மக்கள் தமது செய்தியை தேர்தலினூடாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். மைத்திரி தரப்பின் தயவால் வாக்குக் கேட்டு, பின்னர் மஹிந்த தரப்புக்கு மாறுவதாகத் தெரிவித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு அடுத்த தரப்பாக தமிழ் முற்போக்குக் கூட்டணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டது. நுவரெலியா மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சி சபைகளை புதிதாக உருவாக்குவதில் தமிழ் முற்போக்குக் கூட்டணி வெற்றி கண்டது. ஆனால் தேர்தலின் போது மக்கள் கூடுதலான வாக்குகளை மஹிந்த தரப்புக்கே வழங்கியிருந்தனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி இணைந்து போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி 24 வட்டாரங்களை வென்ற போதும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 20 வட்டாரங்களை வென்றெடுக்கும் அளவுக்கு மக்களது வாக்களிப்பு அமைந்திருந்தது. அரசாங்கத்துடன் இணைந்து பிரதேச சபை வெல்வது என்பதும் மக்களின் வாக்கை வெல்வது என்பதும் வேறு வேறு விடயங்கள் என்பதனை மக்கள் இந்தக் கூட்டணிக்கு உணர்த்தியுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் பிணைமுறி விவகாரமும் ஊழியர் சேமலாப நிதி விவகாரமும் அவர்களுடன் இணைந்து போட்டியிட்டதால் தமக்கும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக அமைச்சர் திகாம்பரம் தெரிவித்திருந்தார்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



EDITORIAL
49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## ராஜ தந்திரிகளைத் தேடும் நாடு

அரசியல்வாதி அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திப்பான். ராஜதந்திரி அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திப்பான் என்று சொல்லுவார்கள். ஜனவரி 08 இல் உருவாக்கப்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து நாடு புதிய பாதையில் பயணிக்கப் போவதாக புதிய தலைமுறை கருதியது. இரண்டு கட்சிகளதும் கூட்டாட்சி, அடுத்த தேர்தலை விட நாட்டின் அடுத்த சந்ததியைப் பற்றிச் சிந்திக்கும் என்று நினைத்தது. ஆனால் நடந்து முடிந்த தேர்தலில் இரண்டு கட்சிகளும் அடுத்த தேர்தலை நோக்கியே நாட்டை ஆட்சி செய்து வருகின்றன என்பதை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.

இதன் மூலம் பாடம் படித்து விட்டு இதற்குப் பின்னராவது ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கலாம் என்றால் அமைச்சரவை மாற்றம் என்ற பூச்சாண்டியை விட்டு மக்களை இந்த அரசு தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டு வருகிறது. ஆட்சித் தலைவர்கள் எவரிடமும் தத்தமது கட்சிகளைப் பாதுகாப்பதன்றி நாட்டை முன்னேற்றுவதற்கான செயற்திட்டங்கள் இல்லை என்பதைத் தான் அமைச்சரவை மாற்றங்கள் தெளிவுபடுத்தியுள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள அமைச்சரவை மாற்றம் நிச்சயமாக நாட்டுக்கு நல்ல விளைவைக் கொண்டு வரப்போவதில்லை என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். நாட்டின் முதுகெலும்பான இளைஞர் விவகாரம் தொடர்பில் இந்த மாற்றத்தில் போதிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பது, ஐக்கிய தேசியக் கட்சியில் பல இளம் வாரிசுகள் இருக்கின்ற நிலையிலும் அவர்களுக்கு இளைஞர் விவகாரமோ அல்லது புதிதாக அமைச்சுக்களோ வழங்காமை தெளிவாக்குகிறது. குறிப்பாக பிரதமரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களே அமைச்சரவை மாற்றத்தின் போது மேலெழுந்திருக்கின்றன என்பதனை இளமை துடிப்புள்ள புத்திக பதிரணவுக்கு பதவி வழங்கப்படாததனை வைத்து மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

அர்ஜுன் மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநனராக நியமிப்பதற்கு எழுந்த எதிர்ப்பின் போது, அவரினால் ஏதும் பிழைகள் நடந்தால் தான் அதனைப் பொறுப்பெடுப்பதாக பிரதமர் ஜனாதிபதிக்கு அவ்வேளை வாக்குறுதியளித்திருந்தார். இலங்கை மத்திய வங்கியில் அவர் ஆளுநனாராக இருந்த வேளையில் நாட்டின் சொத்து கோடிக் கணக்கில் கொள்ளையடிக்கப்பட்டதாக அறிக்கைகள் வெளியான பின்னரும் அவர் தொடர்பான பொறுப்புக் கூறலில் பிரதமர் இன்னும் அசட்டையாகவே இருந்து வருகிறார். புதிய அமைச்சரவை மாற்றத்தில் பிரதமருக்கு சட்டம், ஒழுங்கு அமைச்சு கொடுக்கப்பட்டிருப்பது அவருக்கு ஆதரவானவர்களைப் பாதுகாக்கவே உதவும் என இந்த விடயத்தினை வைத்து மக்கள் அச்சம் தெரிவித்து வருகின்றனர். அத்தோடு மஹிந்த ராஜபக்ஷவைப் பாதுகாப்பதிலும் பிரதமருக்குப் பெரும் பங்குண்டு என பொதுவாக நாட்டில் நிலவுகின்ற கருத்துப் போக்கும் சட்ட ஒழுங்கு அமைச்சை பிரதமர் பொறுப் பெடுத்ததன் மூலமாக இன்னும் உறுதியாகி விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னர் சட்டம் ஒழுங்கு அமைச்சராக இருந்த திலக் மாரப்பன, அவன்கார்ட் நிறுவனத்தின் சட்ட ஆலோசகராக இருந்தவர். பின்னர் அவரது பதவி சாகல ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்டு திலக் மாரப்பன வெளிநாட்டமைச்சராக்கப்பட்டார். இப்படி சுற்றிச் சுற்றி சுப்பனின் கோட்டையில்தான் என்பது போல தத்தமது ஆதரவுத் தளங்களைத் தக்க வைத்துக் கொள்ளவே இலங்கையின் அமைச்சரவை மாற்றங்களும் அரசியலும் பயன்படுகின்றதே அன்றி நாட்டை முன்னகர்த்திச் செல்லும் ராஜதந்திரத்தை நாட்டின் எந்தத் தலைவரிடமும் காணமுடியாமல் இருக்கிறது.

ஜனாதிபதியும் கூட தமது தேர்தல் வெற்றியின் பின்னர் தான் கட்சியை விட நாட்டுக்கே முன்னுரிமை கொடுத்துச் செயற்படுவதாக அறிவித்தார். ஆனால் இன்றுவரை தனது கட்சியைப் பாதுகாப்பதற்கே அவர் முன்னுரிமை வழங்கி வருவதோடு, அந்த முயற்சியிலும் படிப்படியாக தோல்வியையே கண்டு வருகின்றார். இந்த நிலையில் ஜனாதிபதி அடுத்ததாக முன்னெடுக்கவிருக்கின்ற அமைச்சரவை மாற்றமும் தமது கட்சியைப் பலப்படுத்துவதற்காகவே அமையப் போகிறது என்பது தான் பலரதும் எதிர்பார்ப்பு.

மாறி மாறி தத்தமது கட்சிகளைப் பலப்படுத்துகின்ற அரசியல்வாதிகளை விட, நாட்டின் அடுத்த தலைமுறை பற்றிச் சிந்திக்கின்ற ராஜதந்திரிகள் கண்ணுக்கெட்டும் தூரத்தில் இல்லை என்பது நாடு பெற்ற அபாக்கியமாகும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல: 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி: 011-5353635
பெக்ஸ்: 011-5335500
ஈமெயில்: [illegible]
இணையத்தளம்: www.pccsl.lk

# மஹிந்தவின் மொட்டு வெற்றிபெற்றது எப்படி?

• ராஜித ரத்நாயக்க

2018 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பெறுபேறுகள் குறித்து சமூக மட்டத்தில் பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இம்முறை வெளியான பெறுபேறுகள் சிறியதொரு தேர்தலின் பெறுபேறாக அல்லாமல், அதற்கப்பால் பல்வேறு சிறப்பம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருந்ததனால் அது தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்ள நேரிட்டது.

இலங்கையின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் பல்வேறு நிலைகளிலுமுள்ளோர் குறிப்பாக மதத் தலைவர்கள், அரசாங்க ஊழியர்கள், ஓய்வுபெற்ற அதிகாரிகள், விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள் என சகல இனத்தவர்களிலுமுள்ள பெருமளவான மக்களை கடந்த 10 நாட்களாக சந்தித்தும் தொலைபேசியினூடாக தொடர்பு கொண்டும் தகவல்கள் திரட்டப்பட்டன.

இந்தத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பெற்ற எதிர்பாராத வெற்றிக்குரிய நிஜக்காரணிகள் என்ன? 2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொண்ட வாக்குகள் கடந்த 2 வருட காலத்தில் குறைந்திருப்பதற்கான காரணங்கள் என்ன? அதாவது தற்போதைய அரசாங்கம் இம்முறை தேர்தலில் மக்கள் அதிருப்தியை பெறுவதில் தாக்கம் செலுத்திய உண்மையான காரணிகளை கண்டறிவதே இந்த ஆய்வின் மிக முக்கிய குறிக்கோளாக அமைந்தது.

இங்கு பிரஜைகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் மற்றும் அந்தத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வெற்றிக்கு மஹிந்த ராஜபக்ஷ என்னும் தனிமனிதனை சூழ செயற்கையாகக் கட்டியெழுப்பப்பட்ட சிங்கள பௌத்த சக்திகளின் செயற்பாடுகளே அதிகம் தாக்கம் செலுத்தியிருப்பது தெரிய வந்துள்ளது.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் படி, இலங்கையின் பெரும்பாலான பௌத்த விகாரைகளை மையப்படுத்தி பொதுஜன பெரமுனவின் தலைவர்களினால் பௌத்த தேரர்களுக்கூடாக மறைமுக பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிங்கள பௌத்தர்களையும் இராணுவ வீரர்களையும் பாதுகாப்பதற்கு கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பம் இது வென்பதால் பொதுஜன பெரமுனவிற்கு வாக்களித்து, பெடரல் அரசியலமைப்பு உருவாக்கும் முயற்சியை தோற்கடிப்பதற்கு சிங்கள பௌத்த மக்கள் முன்வர வேண்டும் என கட்டியெழுப்பப்பட்ட இன, மதவாத கருத்தியலே இந்த நிலைமைக்கு பிரதானமாக தாக்கம் செலுத்தியிருப்பது ஊர்ஜிதமாகியுள்ளது.

இதன் பிரகாரம், பொதுஜன பெரமுனவின் சிறப்பான வெற்றிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகள் பெருமளவில் குறைவதற்கும் பின்வரும் விடயங்கள் மற்றும் அவற்றுக்கு முன்னாலுள்ள சதவீதங்களின் அடிப்படையில் தாக்கம் செலுத்தியிருப்பது எமது ஆராய்ச்சி பெறுபேறுகளினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (பார்க்க: அட்டவணை 01)

அத்துடன் சைட்டம் பிரச்சினை தேர்தல் பெறுபேறுகளில் எவ்வித தாக்கங்களையும் உண்டுபண்ணவில்லை என்கின்ற விடயமும் உறுதியானது. இதன் பின்னர் எமது குழுவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுடன் ஒவ்வொரு பிரதேசங்களிலும் வாக்குகள் அளிக்கப்பட்டுள்ள அளவு மற்றும் அப்பிரதேசங்களில் இன, மத அடிப்படையில் மக்கள் குடிப் பரம்பலின் படி ஒப்பிட்டுப் பார்த்து ஒவ்வொரு கட்சிக்கும் அந்தந்த மதத்தவர்களால் வாக்குகள் அளிக்கப்பட்டுள்ள முறை தொடர்பிலான மாதிரியொன்று அமைக்கப்பட்டது. (பார்க்க அட்டவணை 02)

மதம் மற்றும் இன ரீதியிலான அடிப்படையில் வாக்களிக்கப்பட்டிருப்பதும் எமது ஆய்வில் தெரிவந்துள்ளது. இவ்வாறான விடயங்களின் அடிப்படையில் அதிகாரத்தை கட்டியெழுப்புவது ஒரு நாட்டிற்கு பாதிப்புக் [illegible]

## ஓர் ஆய்வு

2010 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் வரையான காலப்பகுதியில் இலங்கையின் எந்தவொரு அரசியல் கட்சியும் குறிப்பாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி போன்றன இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் பிளவுகளை ஏற்படுத்தி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது தங்களது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள எவ்வித முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கவில்லை. (ஒரு சில விடயங்களைத் தவிர இந்த விடயம் அரிதாகவே காணப்பட்டது.)

இதன் விளிம்புநிலை பெறுபேறொன்றாகவே இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பெறுபேறுகள் அமைந்திருந்ததுடன், இந்நிலைமையானது மென்மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் இலங்கைக்கு மிகவும் மோசமான, இருள் யுகமொன்றுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்பது திண்ணம்.

வடக்கின் தேர்தல் பெறுபேற்றை அவதானிக்கும் போது LTTE இற்கு சார்பான மற்றும் மதவாத குழுக்கள் பெரும்பாலும் 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளதை காண முடிகிறது. எனினும் எதிர்வரும் காலத்தில் தெற்கின் இந்த நிலைமை விருத்தியடையும் பட்சத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும்

| இல | விடயம் | தேர்தல் பெறுபேறுகளில் ஏற்படுத்திய தாக்கம் % |
|---|---|---|
| 1 | நாட்டை காப்பதை இறுதிச் சந்தர்ப்பமாக கருதி சிங்கள பௌத்தர்கள் உடனடியாக முன்வந்து, மஹிந்த ராஜபக்ஷவுக்கு அரச ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொடுத்து, இராணுவ வீரர்களை பாதுகாத்து, நாட்டையும் இனத்தையும் மதத்தையும் காப்பாற்றுவதற்கு முன்வர வேண்டும் என்பதற்கான மக்கள் ஆதரவு | 68% |
| 2 | ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதாக கூறி 2015 ஜனவரி 08ஆம் திகதி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் அவற்றை நிறைவேற்றவில்லை, புதிய அரசாங்கத்தின் கீழாலும் பிணைமுறி ஊழல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றமை | 7% |
| 3 | பெரும்பாலும் ஆளும் கட்சிகளிடையே பொது இணக்கப்பாட்டினை மீறும் வகையிலான மோதல்கள் ஏற்படல் மற்றும் அரசாங்கத்திற்குள் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசியமையினால் ஏற்பட்ட நெருக்கடியான நிலைமைகள். | 5% |
| 4 | ஐக்கிய தேசியக் கட்சியில் ஊழல் பேர்வழிகள் இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியல் மேடைகளில் தெரிவித்து வந்த ஆக்ரோஷமான கருத்துக்கள். | 4% |
| 5 | வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் அதற்கு வெற்றிகரமான முறையில் அரசாங்கத்துக்கு முகம்கொடுக்க முடியாமல் போனமை | 6% |
| 6 | கடந்த காலப்பகுதியில் நிலவிய உரப் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை | 5% |
| 7 | ரணில் விக்ரமசிங்கவின் மோசமான தலைமைத்துவம் | 4% |
| 8 | ஏனைய காரணிகள் | 1% |

அட்டவணை: 01

எனினும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மஹிந்த ராஜபக்ஷவினை முதன்மையாகக் கொண்ட அணியினர், இழந்த தமது அதிகாரத்தை மீளப்பெற்றுக் கொள்வதற்குரிய ஒரே வழிமுறையாக இன, மத ரீதியில் மக்களை கூறுபோடும் திட்டத்தைக் கையாண்டார்கள். இதன் மூலம் மக்களது உணர்வுகளைத் தூண்டி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தீர்மானம் எட்டப்பட்டிருப்பது நிரூபணமாகியுள்ளது. எனவே இதனடிப்படையில் மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் நடவடிக்கைகள் மற்றும் பிரச்சார நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இன, மத அடிப்படையிலான கட்சிகள் பலம் பெரும் சாத்தியங்கள் உள்ளன. அவ்வேளையில் நாடு மீண்டும் இரத்தம் சிந்தும் போராட்டம் வரையில் பயணிப்பதை யாராலும் தடுக்க முடியாது போகும்.

அதனால் இன்றைய தினம் மதகுருமார், நடுத்தர சிந்தனை படைத்தவர்கள், அறிவு ஜீவிகள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட மாணவர் அமைப்புக்கள் முன்வந்து நாடு பயணிக்கும் இத்தகைய பயங்கர நிலைமையிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது மிக முக்கிய பொறுப்பாகவும் கடமையாகவும் உள்ளது.

**வாக்களிக்கப்பட்டுள்ள முறை தொடர்பில் ஒரு மாதிரி உருவாக்கப்பட்டது. அதனை பின்வரும் அட்டவணையினூடாக தெளிவுபடுத்தலாம்.**

| இல | விடயம் | மதம் (சதவீதம் %) | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | பௌத்தம் | இந்து | முஸ்லிம் | கத்தோலிக்கம் | |
| 1 | இலங்கையின் சனத்தொகை மத அடிப்படையில் பிரிந்துள்ள விதம் | 70 | 12.7 | 9.7 | 7.6 | 100 |
| 2 | கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன பெரமுன பெற்றுக்கொண்ட 44% வாக்கிற்கு ஒவ்வொரு மதத்தவரும் வழங்கிய பங்களிப்பு | 41.5 | 0.7 | 1.0 | 0.8 | 44 |
| 3 | ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொண்ட 32% வாக்கிற்கு ஒவ்வொரு மதத்தவரும் வழங்கிய பங்களிப்பு | 17.0 | 5.5 | 4.5 | 5.0 | 32 |
| 4 | ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் அதனோடு இணைந்த கட்சிகள் பெற்றுக் கொண்ட 12% வாக்கிற்கு ஒவ்வொரு மதத்தவரும் வழங்கிய பங்களிப்பு | 7.0 | 2.2 | 2.0 | 0.8 | 12 |
| 5 | மக்கள் விடுதலை முன்னணி பெற்றுக் கொண்ட 6% வாக்கிற்கு ஒவ்வொரு மதத்தவரும் வழங்கிய பங்களிப்பு | 4.5 | 0.3 | 0.2 | 1.0 | 06 |
| 6 | தமிழ் கட்சிகள் - 4% | - | 4.0 | - | - | 4.0 |
| 7 | முஸ்லிம் கட்சிகள் - 2% | - | - | 2.0 | - | 2.0 |
| | மொத்தம் (100%) | 70.0 | 12.7 | 9.7 | 7.6 | 100 |

அட்டவணை: 02


தமிழில்: நுஸ்ரத் நிலாம், நன்றி: ராவய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை முட்டாளாக்கும் அமைச்சரவை மாற்றம்



றவூப் ஸெய்ன்




உள்ளூராட்சித் தேர்தலில் மைத்திரியின் சுதந்திரக் கட்சியும் ரணிலின் ஐக்கிய தேசிய கட்சியும் படுதோல்வியடைந்ததைத் தொடர்ந்து நாட்டில் ஒரு அரசியல் பரபரப்பு ஏற்பட்டதை யாவரும் அறிவர். அடுத்த கூட்டம் ஏதோ ஒன்று அதிரடியாய் நிகழப் போகின்றது என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் பரவியிருந்தபோது மக்களுக்கு ஏமாற்றமளிக்கும் அரசியல் நகைச்சுவையொன்று அரங்கேறியுள்ளது. அதுதான் அமைச்சரவையில் ஏற்பட்ட மாற்றம். இதற்கும் மக்களின் எதிர்பார்ப்புக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. அமைச்சரவையிலுள்ள சில அமைச்சர்களே இதனை நகைச்சுவை நாடகம் என்று கூறியிருப்பதுதான் பெரிய நகைச்சுவை.

இலங்கை அரசியல் இப்போது ஆசியாவின் அதிசயங்களாலும் அபத்தங்களாலும் சூழ்ந்துள்ளது. எமது சர்வதேச விமான நிலையத்தில் விமானங்கள் தாமதிக்கின்றன. விலைவாசியோ தலைக்கு மேல் விமானம் போல் உயர்கிறது. வாழ்க்கைச் செலவீனம் நிறுத்தி வைக்க முடியாமல் சீறிப் பாய்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் வேறு. உயர்கல்வித் துறை ஆயிரத்தெட்டு பிரச்சினைகள். ஒவ்வொரு பிரஜையும் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன்தொகை 4.5 இலட்சம். திண்மக் கழிவுகளை முகாமை செய்வது எவ்வாறு என்ற திணறல். நாணயப் பெறுமதி இறக்கம்.

அரசாங்கத்திலுள்ளவர்கள் மத்தியில் கடும் ஊழல் மோசடி. நீதிமன்றத்தில் தேங்கி நிற்கும் வழக்குகளின் எண்ணிக்கை பல இலட்சம். இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு 29 ரூபாயால் அதிகரிப்பு. தேங்காயின் விலை 95 ரூபாய். சுதந்திரமாய் சுற்றி வரும் முன்னைய ஊழல் ஆட்சியாளர்கள் நல்லாட்சி அரசாங்கத்தை நோக்கி ஊழல் குற்றச்சாட்டு. ஜெனீவாவில் இலங்கையில் காணாமற் போனோர் குறித்து அலுவலகம் திறக்குமாறு கோரிக்கை. இத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியில் ஒன்றுக்கும் தீர்வு காணத் திராணியற்ற அரசாங்கம், அமைச்சரவையை மாற்றி, யாரை ஏமாற்ற முயல்கின்றது. இந்த மாற்றத்திற்கும் மக்கள் அரசிடம் எதிர்பார்த்ததற்கும் என்ன சம்பந்தம்?

தேர்தல் காலத்தில் சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்துவிட்டால் மக்கள் தமக்கு வாக்களித்து விடுவார்கள் என்று கணக்குப்போடும் அரசியல்வாதிகள், மக்களைத் தொடர்ந்தும் மடயர்கள் என்றே கணித்து வைத்துள்ளனர். இதற்கு சமீபத்திய உதாரணமே இந்த அமைச்சரவை மாற்றம்.

இதன் நோக்கம் என்ன? உள்ளூராட்சி தேர்தல் முடிவுக்கும் அமைச்சரவை மாற்றத்திற்கும் பகுத்தறிவு ரீதியாக எந்தத் தொடர்புமே இல்லை. நாடு இன்று எதிர்கொண்டுள்ள இத்தனை பிரச்சினைகளில் ஏதேனும் ஒன்றுக்கேனும் அமைச்சரவை மாற்றம் தீர்வு சொல்லுமா?

கடந்த மூன்றாண்டுகளாக வாய் வீரத்தாலும் அறிக்கைப் போராலும் காலத்தை ஓட்டிய நல்லாட்சி, தேர்தலில் தோற்ற கையோடு, மீண்டும் ஒருமுறை மக்களின் கண்களில் மண்ணைத் தூவியுள்ளது. வாழ்க்கைச் செலவீனம் உயர்ந்ததே நாம் தோற்றதற்குக் காரணம் என்று ஜனாதிபதி சிறிசேன ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கடந்த மூன்றாண்டுகளாக வாழ்க்கைச் செலவீனத்தைக் குறைக்க அவரும் அவரது அரசாங்கமும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை அவரே ஏற்றுக்கொண்டுள்ளார். அப்படியானால் நல்லாட்சி என்று அவர்கள் முழங்கும் ஆட்சியின் அர்த்தம் என்ன? முன்னைய அரசாங்கத்திடமிருந்து இன்றைய ஆட்சியாளர்கள் எந்தப் பாடத்தையும் கற்கவில்லை. மொத்தத்தில் இங்கு நடைபெறுவது கூட்டாட்சியா அல்லது காட்டாட்சியா என்ற சந்தேகம் மக்களுக்கு எழுகின்றது.

எந்த அரசியல் செயலூக்கமுமின்றி காலத்தைக் கடத்துகின்ற அரசாங்கம், இன்னும் இரண்டு ஆண்டுகளில் வீட்டுக்கு விரட்டப்படுவார்கள் என்பதையே தேர்தல் முடிவுகள் நிறுவியுள்ளன.

இன்றைய அமைச்சரவை மாற்றம் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினையில் ஒரு வீதத்திற்கேனும் தீர்வுசொல்லப் போவதில்லை. தேர்தலுக்குப் பின்னரேனும் வாழ்க்கைச் செலவீனத்தைக் குறைக்கின்ற திட்டமொன்றை அரசு அறிவிக்கவில்லை. அபிவிருத்தித் திட்டங்களில் முதன்மைப்படுத்தலொன்றை அரசு கையாளவுமில்லை. குறைந்தபட்சம் கடந்த மூன்று ஆண்டுகளில் முன்னைய அரசாங்கத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டோரைத் தண்டிப்பதற்கும் தேசிய சொத்துக்களை மீட்பதற்கும் வசதியான சட்ட மாற்றமொன்றை பாராளுமன்றில் நிறைவேற்றியிருக்கலாம். ஆயினும் அதைக்கூட நல்லாட்சி அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. 2015 தேர்தல் வாக்குறுதிகள் குறித்து முற்றிலும் பிரக்ஞையற்ற நிலையிலேயே அரசு செயல்பட்டது.

தேர்தல் பிரச்சாரத்தின்போது எடுப்போம் கவிழ்ப்போம் என்று பிரதமரும் ஜனாதிபதியும் வாய் வீரம் பேசினார்களே ஒழிய, நடைமுறையில் எதனையும் சாதிக்கவில்லை. ஐந்து ஆண்டுகளில் 10 இலட்சம் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவோம் என்று அறிக்கை விட்ட பிரதமர், மூன்றாண்டுகள் முடிவில் குறைந்தது 50,000 தொழில் வாய்ப்புக்களையேனும் உருவாக்கவில்லை.

நாடு எத்தனையோ தேவைகளையும் மாற்றங்களையும் கொள்கைத் தீர்மானங்களையும் அவற்றின் நடைமுறைகளையும் வேண்டி நிற்கும் ஒரு தருணத்தில், அமைச்சர்களின் முகங்களை மாற்றி அரசு மக்களை ஏமாற்றுகின்றது, மக்களை மந்தைகளாக்கும் ஒரு வினோதமான அரசியல் நாடகமே இன்றைய நாட்களில் அரங்கேறி வருகின்றது.

இலங்கையில் உண்மையான மக்கள் நல அரசையும் நல்லாட்சியையும் உருவாக்குவது ஒரு தொலைதூரக் கனவாகும். நாட்டில் ஊழல் மோசடியற்ற, நல்லாட்சியை உருவாக்குவதில் சிங்கள சிவில் சமூகத்தின் பங்கே முதன்மையானது. சிங்கள சமூகத்திலுள்ள கல்விமான்கள், மதகுருக்கள், செல்வாக்குள்ள சமூகத் தலைவர்கள், கட்சிச் சார்புடன் இயங்கும்வரை இலங்கையில் நல்லாட்சி சாத்தியப்படப் போவதில்லை.

சிங்கள சிவில் சமூகத்தின் நல்லாட்சி குறித்த கருத்தொருமைப்பாடும், அதற்கான செயலூக்கமுமே இன்றைய உடனடித் தேவையாகும். தவறும்பட்சத்தில் அரசியல்வாதிகள் மக்களை முட்டாளாக்குவது தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

# வெளிநாட்டுக் கடன்தொகை அதிகரிப்பும் அரசாங்கங்களின் அசமந்தப் போக்கும்


2016 இன் முடிவில் இலங்கைப் பிரஜை ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன்தொகை 417 913 ரூபாய்களாக இருந்தது. 2017 ஆம் ஆண்டில் அத்தொகை மேலும் அதிகரித்துள்ளது. 2015 டிசம்பரில் இருந்ததை விட தனிநபர் வெளிநாட்டுக் கடன் தொகை 45,000 ரூபாவினால் அதிகரித்துள்ளது என இலங்கையின் பிரதான கணக்கியலாளர் தெரிவித்துள்ளார்.

2015 ஐ விட இத்தொகை 12%இனால் 2016 இல் அதிகரித்துள்ளது. பொதுக் கடன் முகாமை எனும் பெயரிலான அறிக்கையில் பிரதான கணக்கியலாளர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கையின் நாணயப் பெறுமதி இறக்கத்தினால் 2017 ஆம் ஆண்டில் இத்தொகை மேலும் அதிகரித்திருக்கும் எனவும் அவர் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

மொத்த நாணயப் பெறுமதி இறக்கத்தினால் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் தொகை 40 வீதத்தால் அதிகரித்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அவர், இதனால் ஒவ்வொரு பிரஜையும் சுமந்துள்ள கடன்பழு அதிகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டிய வெளிநாட்டுக் கடன் தொகை 2016 டிசம்பர் 31 இல் 8.9 ட்ரில்லயனாக (8,860,770 மில்லியன் ரூபா) ஆகக் காணப்பட்டது. இலங்கை அரசாங்கம் இக்கடனைச் செலுத்துவதற்கு குறுங்கால அடிப்படையில் தொடர்ந்தும் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று வருவதனால் மொத்தக் கடன் தொகையின் அளவு அதிகரித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்தைக் கையேற்ற போது காணப்பட்ட வெளிநாட்டுக் கடன்தொகையை விட தற்போதைய அளவு அதிகரித்துள்ளது. இது அரசாங்கத்தின் முறையற்ற நிதிக்கொள்கையையே எடுத்துக் காட்டுவதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஏற்கனவே சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்தின் முக்கிய நிறுவனங்கள் சிலவற்றை விற்பனைக்கு விடுமாறு ஆலோசனை வழங்கியிருந்தது. இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஆட்சேபனையைத் தெரிவித்த போதும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இவ்வாலோசனையை ஆதரித்தனர்.




**2016 இன் முடிவில் இலங்கைப் பிரஜை ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன்தொகை 417 913 ரூபாய்களாக இருந்தது. 2017 ஆம் ஆண்டில் அத்தொகை மேலும் அதிகரித்துள்ளது. 2015 டிசம்பரில் இருந்ததை விட தனிநபர் வெளிநாட்டுக் கடன் தொகை 45,000 ரூபாவினால் அதிகரித்துள்ளது**

சர்வதேச கடன் தொகையின் அளவு எல்லை மீறிச் செல்லும் போதே உலக வங்கியோ சர்வதேச நாணய நிதியமோ இத்தகைய ஆலோசனைகளை வழங்குவது வழக்கம். உலக வங்கி மற்றும் நாணய நிதியத்தின் தேவையற்ற தலையீடுகளுக்கும் இது வழிகோலுவதுண்டு. இலங்கையின் இறைமையைக் கேள்விக்குறியாக்கும் அளவு நாட்டில் வெளிநாட்டுக் கடன்தொகை அதிகரித்துச் செல்கின்றது. இதற்கு முழுப் பொறுப்பும் முன்னைய அரசாங்கமே என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தி வருகின்றார்.

ஆனால், பொருளாதார அபிவிருத்திக்குத் தடையாகவுள்ள ஊழல் மோசடி, முறைகேடான நிதிநிர்வாகம் [illegible] யம் என்பன நல்லாட்சி அரசாங்கத்திலும் நீடிப்பது மக்கள் எதிர்பார்ப்பை கேள்விக்குள்ளாக்கி இருக்கின்றது.

பிரதமர் தலைமையில் இயங்கும் பொருளாதார அபிவிருத்தி சபை அமைச்சரவை அந்தஸ்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களை மாத்திரமே உள்ளடக்கியிருப்பதாக அரசாங்கத்தின் பங்காளிகளாக உள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சித்து வருகின்றனர்.

இவ்வாறு மாறி மாறி ஒருவரையொருவர் விமர்சித்து வருகின்றனரே ஒழிய பொருளாதமார நெருக்கடிக்குத் தீர்வு காணும் நிலையில் அரசாங்கம் இல்லை. வெளிநாட்டுக் கடன் தொகையை மென் மேலும் அதிகரிக்கும் சட்டமூலம் ஒன்றைப் பாராளுமனறத்தில் இயற்றுவதற்குப் பிரதமர் பிரேரணை ஒன்றை முன் வைத்துள்ளார். இது ஜனாதிபதியின் [illegible]

அபிவிருத்தித் திட்டங்களில் முன்னுரிமைக்குரியவை இனங்காணப்படாமையும் வெளிநாட்டுக் கடன்தொகை அதிகரிப்பதற்கு மற்றொரு காரணமாகும். இதற்கு மிக எளிய உதாரணம் பிரதமர் கொண்டுவந்துள்ள பாடசாலை மாணவர்களுக்கு மடிக்கணணி வழங்கும் திட்டமாகும். வளர்ச்சியடைந்த மேற்கு நாடுகளில் மேட்டுக்குடி அரசியல் தலைமைகள் தேர்தல் மேடைகளில் வாக்குறுதி அளிப்பது போல் பிரதமர் ரணில் இது போன்ற வெளிப்பகட்டான திட்டங்களை அதிரடியாக அறிவிக்கின்றார். ஆனால், இலங்கையின் ஒட்டுமொத்தக் கஜானாவும் காலியாக இருக்கும் தருணமொன்றில் இதுபோன்ற பகட்டான திட்டமொன்று அவசியமா என ஜனாதிபதி சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையிலுள்ள 10,200 அரச பாடசாலைகளில் மேசைகள், கதிரைகள் போன்ற தளபாடங்கள், போதுமான கட்டிடங்கள், ஆய்வு கூடங்கள், விளையாட்டு மைதானங்கள் இல்லாத பாடசாலைகள் ஆயிரக்கணக்கில் இருக்கின்ற போது மாணவர்களுக்கு இப்போது மடிக்கணனிகள்தான் முக்கியமா என்று பிரதமரின் திட்டம் காரசாரமான விமர்சனத்திற்கு உட்பட்டுள்ளது. இதில் சில நியாயங்கள் இருக்கவே செய்கின்றன. அபிவிருத்தித் திட்டங்களில் முதன்மைப்படுத்தல் இல்லை என்பதையே இது காட்டுகின்றது. பிரதமரின் மடிக் கணினித் திட்டத்திற்குச் செலவாகும் தொகை 5 பில்லியன் (5000 கோடி) என்பது கவனிக்கத்தக்கது.

இலங்கை நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுள் ஒன்று. நாட்டின் மொத்த சனத்தொகையில் 20 வீதத்திற்கும் அதிகமானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர். Oxfam International இன் 2017 அறிக்கையின் படி இலங்கையின் இரண்டு மில்லியன் பேரிடம் உள்ள செல்வத்தின் அளவு இரண்டு கோடிப் பேரிடமுள்ள செல்வத்தின் அளவுக்குச் சமமாகும். தெற்காசிய நாடுகளில் இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்குமிடையிலான இடைவெளி பிரமிக்கச் செய்யும் வகையில் அதிகரித்துச் செல்லும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இணைந்து பல ஆண்டுகளாகி விட்டன.

மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்லத் திராணியற்ற அரசாங்கங்கள் தேர்தல் காலங்களில் காகித வளர்ச்சியைக் காண்பித்தே மக்களை எய்த்துப்பிழைத்து வருகின்றன. இதற்கு இலங்கை ஒன்றும் விதிவிலக்கல்ல: கட்சி அரசாங்கங்களின் அரசியல் தவறுகளுக்கு இங்கு விலை கொடுப்பவர்கள் சாதாரண மக்கள்தான் என்பது மிகுந்த சோகத்திற்குரியது. இப்போது தனிநபர் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன்தொகை ஒவ்வொரு பிரஜையினதும் முதுகை முறித்துக் கொண்டிருக்க, அரசியல்வாதிகள் இப்படி பகட்டான திட்டங்களை அமுல்படுத்தியே ஆகுவோம் என்று ஒற்றைக் காலில் நிற்பது எவ்வளவு விநோதமான அரசியல் துரோகம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தேர்தலில் மக்கள் கற்பித்த பாடங்களையேனும் புரிந்து கொள்ளாமலேயே அரசியல்வாதிகள் செயற்படுகின்றனர். இது தேசிய நலனில் ஓர் ஆரோக்கியமான அறிகுறியல்ல. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பக் கட்டமைப்பு பலப்படுத்தப்படுவது முக்கியமானது



இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## அமெரிக்க துப்பாக்கிக் கலாசாரம்:

### தேவை ஒரு மாற்றம்

கடந்த மாதம் அமெரிக்காவின் பிளோரிடாவில் 14 பாடசாலை மாணவர்களும் 3 ஆசிரியர்களும் அதே பாடசாலையில் கற்ற பழைய மாணவரொருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளனர். இது போன்ற பல்வேறு சம்பவங்கள் தொடர்ந்தேர்ச்சியாக அமெரிக்காவில் இடம்பெற்று வந்திருப்பதை நாம் ஊடகங்கள் வாயிலாக அவதானித்துள்ளோம்.

அமெரிக்காவில் துப்பாக்கிகளை எல்லையற்ற வகையில் கையிருப்பில் வைத்துக்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரமே இது போன்ற மிலேச்சத்தனமான சம்பவங்களுக்கு காரணமாக அமைந்துள்ளது. இந்தச் சுதந்திரத்திற்கு எதிராக பாடசாலை மாணவர்கள் இன்று உரத்த கோஷங்களை எழுப்பி வருகின்றார்கள். பிளோரிடாவில் அமைந்துள்ள பாக்டன் சதுக்கத்தில் மாணவர்கள் இந்தச் சம்பவத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளார்கள்.

பாடசாலை மாணவர்களின் மனநிலையே இது போன்ற சம்வங்களுக்கு காரணம் என்றும் அதற்கு மனநல மருத்துவர்களின் சேவைகள் வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் இந்தச் சம்பவத்திற்கு பின்னர் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் டுவீட் செய்துள்ளார். இதற்கு எதிராக பாடசாலை மாணவர்கள் பாரிய எதிர்ப்புக்களை தெரிவித்து வருகின்றனர். அவர்கள் வீதிக்கிறங்கியுள்ளார்கள்.

எமா கொன்சாலிஸ் (Emma Gonzalez) எனும் சிறுமியின் உணர்ச்சிபூர்வமான குரல் இன்று சமூக வலைத் தளங்களில் வைரலாகி வருகின்றது. அமெரிக்காவின் தேசிய ரைபல் ஒன்றியத்திடமிருந்து (National Raifel Association) ஜனாதிபதி ட்ரம்ப் பணம் பெற்றிருக்கிறார் என அந்தச் சிறுமி உரையாற்றியிருக்கிறார்.

அமெரிக்க அரசியலில் பல்வேறு அமைப்புகள் தத்தமது நோக்கங்களுக்காக வேண்டி அரசியல்வாதிகளுக்கு நிதி வழங்குவதை நாம் காண்கிறோம். இவர்கள் அமெரிக்க அரசியலில் தாக்கம் செலுத்தும் குழுக்களாகக் காணப்படுகின்றனர். துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ள அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் குழுக்கள் உள்ளன. இவர்கள் அரசியல்வாதிகளுக்கு மாத்திரமல்ல, ஊடகங்களுக்கும் அழுத்தம் பிரயோகிக்கும் குழுக்களாகவும் காணப்படுகின்றனர்.

அமெரிக்காவில் பலம்பொருந்திய நிலையில் உள்ள வலதுசாரி ஊடகங்கள் துப்பாக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு கோருகின்ற மாணவர்களின் குரலை மூடி மறைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதைக் காண முடிகின்றது.

இந்த ஊடகங்கள் சில மாணவர்களை இலக்கு வைத்து தூற்றியும் வருகின்றன. எனினும் சமூக வலைத்தளங்களில் இவற்றுக்கெதிராக பலமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. கடந்த மாதம் 24ஆம் திகதி எமது உயிர்களைப் பாதுகாப்பதற்கான ஊர்வலம் எனும் பெயரில் வொஷிங்டன் உள்ளிட்ட அமெரிக்காவின் பல்வேறு நகரங்களில் மாணவர்கள் பாத யாத்திரை மேற்கொண்டார்கள்.

இது எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்றால் அன்றைய தினம் மாலையில் தன்னை வந்து சந்திக்குமாறு ஜனாதிபதி இவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்தச் சந்திப்பு ஜனாதிபதி அலுவலகம் செவிமடுக்கும் அமர்வு என்பதாகப் பெயரிட்டது.

இந்த மாணவர்கள் சமூக வலைத்தளங்களில் முன்னெடுக்கின்ற கோஷங்களைப் பார்க்கும்போது அவை உணர்வுபூர்வமானதென்பது புலப்படுகின்றது. ''நாங்கள் சிறுவர்கள் நீங்கள் பெரியவர்கள். ஆனால் நீங்கள் சிறுவர்களைப் போன்று நடந்து கொள்கின்றீர்கள்'' என்பதாக ஒரு சுலோகம் உள்ளது. அமெரிக்காவில் துப்பாக்கிப் பாவனை தொடர்பான சட்டங்கள் மாற்றங்களுக்கு உட்பட வேண்டும் என்றும் அந்தச் சிறுவர்கள் கூறி வருகின்றார்கள்.

அமெரிக்காவில் பெருமளவிலான நிதித்தொகைகள் அரசியல்வாதிகளுக்காக வேண்டியும் ஊடகங்களுக்காக வேண்டியும் பயன்படுத்தப்படுவதன் மூலம் ஏற்பட்டுள்ள இந்த அபாயகரமான நிலைமைகள் உலகத்திற்கு மிகப்பெரும் செய்தியை வழங்கியுள்ளது. அமெரிக்க அரசியல் மற்றும் ஊடகங்களுக்கு பின்னால் பணபலமே ஆதிக்கம் செலுத்துகிறது.

அமெரிக்காவில் சிறந்ததோர் சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்கின்ற பெரும்பாலானவர்களின் தேவையை சிறியதொரு தரப்பினர் மழுங்கடித்து வரும் செயலாகவே இதனை நோக்க வேண்டியுள்ளது.

---

யுத்தம் முடிந்த பின்னர் தேசத்தைக் கட்டியெழுப்புவதைப் பற்றிச் சிந்திக்காமல் நாட்டை முன்னகர்த்திச் செல்வதற்கு அப்போதைய ஜனாதிபதி முயன்றதனால் நாடு அராஜகத்தை நோக்கித் தள்ளப்பட்டது. முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்கு அவர் எடுத்த முயற்சியினால் இந்த வீழ்ச்சி தவிர்க்கப்பட்டு புதிய ஜனாதிபதியும் புதிய அரசாங்கமும் தோன்றும் நிலை ஏற்பட்டது.

இதனால் மக்கள் நிம்மதியை உணர்ந்தாலும் புதிய அரசாங்கத்திடமும் நாட்டை முன்னகர்த்திச் செல்வதற்கான தொலைநோக்கு காணப்படாததனால் நாடு மீண்டும் அராஜகத்தை நோக்கித் தள்ளப்படும் நிலைக்கு மாறியது. நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் மக்களின் நன்மதிப்பை இழக்கும் நிலைக்கு மாறினர். இருவருமே தூரநோக்கு பற்றியும் நாட்டுக்குத் தேவையான நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது பற்றியும் பேசினாலும் முன்னைய தலைமையை பின்தள்ளும் அளவுக்கு உறுதியான தொலைநோக்கோ, நல்லிணக்க வேலைத்திட்டங்களோ அவர்களிடம் இல்லை என்பது தேர்தலுக்குப் பின்னர் பட்டவர்த்தனமாகியது. இது தோல்வியடைந்த தலைமையை மேலும் பலப்படுத்தியது. ஆனாலும் அரசாங்கத்தை தோற்கடித்து அதி காரத்துக்கு வரக்கூடிய சக்தி அவரிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

மறுபுறத்தில் நடப்பு அரசாங்கமும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான பனிப்போரினால் ஸ்திரமற்றிருக்கிறது. இவற்றைத் தாண்டிச் செல்லக் கூடிய மூன்றாவது சக்தியும் நாட்டிலே இல்லை. இந்த நிலையில் அராஜகம் மீண்டும் தலைதூக்குவதற்கான வாய்ப்பு தான் அதிகமாக இருக்கிறது. அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள 19 ஆவது திருத்தமும் அராஜகத்தை பலப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. பாராளுமன்றத்தில் அரசியல் அதிகாரம் நிலை மாறும் போது அதனைக் கலைக்கக் கூடிய அதிகாரம் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர யாருக்கும் இல்லை. தன்னிச்சையாகப் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருபோதும் விரும்பப் போவதில்லை. இது மேலும் அராஜகத்துக்கே இட்டுச் செல்லும்.

இவ்வாறு நாடு அராஜகத்தை நோக்கிச் செல்வதை தடுக்கும் வகையிலும் அதனால் வரக்கூடுமான தீயவிளைவுகளைக் குறைக்கும் வகையிலுமே மறுமலர்ச்சி இயக்கத்தின் கோட்பாடுகள் வரையப்பட்டுள்ளன. சமூகத்தின் அரசியல் ஞானத்தை அதிகரிப்பதன் மூலம் இதனைச் சாத்தியப்படுத்த முடியும். இதற்கென மறுமலர்ச்சி இயக்கம் வகுத்துள்ள திட்டத்தின்படி 2018 ஆகஸ்ட் ஆகும்போது 1,250,000 அங்கத்தவர்களை இந்த இயக்கத்தில் அங்கத்தவர்களாக உள்வாங்க முடியும். இவர்கள் இதனை விட இருமடங்கான மக்களில் (25 இலட்சம்) தாக்கம் செலுத்த முடியும். குறிப்பிட்ட காலத்துக்குள் இந்த இலக்கை அடைய முடிந்தால், நாட்டிலே தாக்கம் செலுத்தக் கூடிய தீர்மானிக்கும் சக்தியாக இந்த இயக்கம் அமையும்.

இணைகின்ற அங்கத்தவர்களின் சிந்திக்கும் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே மறுமலர்ச்சி இயக்கம் இந்த இலக்கை அடைய நாடுகிறது. நீதியான, தர்க்க ரீதியான, அறிவு ரீதியான, பன்மைத்துவச் சிந்தனை கொண்டவர்களாக இவர்கள் உருவாக்கப்படுவார்கள். இன, மத, ஜாதி பேதங்களுக்கு எதிராக வன்முறையின்றிச் செயற்பட்டு மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக இவர்கள் மாறுவார்கள். இவர்கள் இலங்கையின் அலங்கோலமான நிலையை மாற்றியமைப்பார்கள்.

முப்பது வருடங்களாக நாட்டில் நிலவிய பயங்கர யுத்தத்தின் காரணமாக விறைத்துப் போயுள்ள மக்களின் உள்ளத்தை விழிப்படையச் செய்து அவர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது அல்லது உறைந்து போயுள்ள அவர்களது ஆத்மார்த்தமான உணர்வுகளை கிளறிவிடுவது மறுமலர்ச்சி இயக்கத்தின் பிரதான இலக்காகும்.

தீயவற்றின் பால் மக்கள் பழக்கப்படுத்தப்பட்டுள்ள ஒரு சமூகத்திலேயே நாங்கள் வாழ்கிறோம். கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டால் அவர்களுக்கு உணவு, தங்குமிடம், போக்குவரத்து எல்லாம் வழங்கப்பட்டு கடைசியில் போகும் போது அலவன்ஸ் ஒன்றும் கூட வழங்கப்படும் நிலைமைக்குத் தான் NGOக்களும் அரசியல் கட்சிகளும் மக்களை மாற்றி வைத்திருக்கிறார்கள்.

மறுமலர்ச்சி இயக்கம் தனது முக்கிய அங்கத்தவர்களை அழைத்து நடத்திய கூட்டமொன்றுக்கு நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து 60 பேரளவில் கலந்து கொண்டிருந்தார்கள். அதில் அனுராதபுரத்தில் இருந்து கலந்து கொண்ட முஸ்லிம் அதிபர் ஒருவர் [illegible]




கொண்ட அனைத்துக் கூட்டங்களிலும் உணவு, தங்குமிடம், போக்குவரத்து அனைத்து வசதிகளும் இலவசமாகக் கிடைத்ததாகவும் கூட்டம் முடிந்து செல்லும் போது ஒரு கவரும் கிடைப்பதாகவும், ஆனால் இந்தக் கூட்டங்கள் அவற்றுக்கு மாற்றமாக தமது சொந்தச் செலவிலேயே அனைத்தையும் மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

மறுமலர்ச்சி இயக்கம் தமது அங்கத்தவர்களிடம் தமது அறிவு, உழைப்பு என்பவற்றையும் அதற்கு அப்பால் தமது அர்ப்பணம், செலவழித்தல் என்பவற்றையும் சுயமாக வழங்க வேண்டும் என்று தான் எதிர்பார்க்கிறது. அப்படித்தான் அது கட்டி எழுப்பப்பட்டுமிருக்கிறது.

வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி உதவியைப் பெறுவதனால் அந்த நிறுவனங்களின் மீதான கடப்பாடுகளுக்கு தலைசாய்க்க வேண்டி வருவதனாலும் வெளிச்சக்திகளை விட சுயமாக நிதியில் தங்கியிருப்பது தான் நிலையான பயணத்துக்குச் சிறந்தது என்பதனாலும், இவர்களிடமிருந்து வருகின்ற அளவுக்கதிகமான நிதியைக் கையாள்வது அங்கத்தவர்களை தீய விடயங்களுக்குத் தூண்டும் என்ற அச்சம் இருப்பதாலும் இவ்வாறான நிறுவனங்களிடமிருந்தும், கறுப்புப் பணம் உழைப்பவர்களிடம் இருந்தும் நிதி உதவிகள் பெறுவதில்லை என்ற தீர்மானம் இந்தக் கூட்டத்திலே எடுக்கப்பட்டது.

கறுப்புப் பணம் உழைப்பவர்களது நிதியைப் பெற்றுக் கொண்டால் அவர்களது இரகசிய நிகழ்ச்சி நிரலுக்கு வேலை செய்ய வேண்டி இருப்பதால் அதனையும் தவிர்த்துக் கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது. இது கஷ்டமான தெரிவாக இருந்தாலும் இதுதான் சரியான தெரிவு. ஆகவே ஒவ்வொரு அங்கத்தவரிடம் இருந்தும் வருடசந்தாவாக 1000 ரூபா எடுக்கத் தீர்மானித்தோம். அத்தோடு மாதாந்தம் 5000 ரூபா தரக் கூடிய 500 பேரைத் திரட்டிக் கொண்டால் எங்களுக்கு மாதாந்தம் 25 இலட்சம் ரூபா கிடைக்கும்.

அமைப்பின் ஒழுங்கு தொடர்பான அடிப்படைகளும் வரையப்பட்டன. அங்கத்தவர்கள் இன, மத, குல பேதமற்றவர்களாக இருக்க வேண்டும். மூட நம்பிக்கைகள் அற்றவர்களாக, நல்ல பண்பாடுள்ளவர்களாக, குடும்ப அங்கத்தவர்களினதும் அயலவர்களினதும் நம்பிக்கையை வென்றவர்களாக, நீதியானவராக, தமது தொழில் தர்மத்தைப் பேணுபவர்களாக, சமூகத்துடன் கலந்து வாழ்பவராக அங்கத்தவர்கள் இருக்க வேண்டும்.

தேசத்தைக் கட்டியெழுப்புதல் என்ற விடயத்தில் மட்டும் அனைத்து அங்கத்தவர்களும் இயக்கத்தின் உத்தியோகபூர்வக் கருத்தில் ஒன்றுபட்டிருக்க வேண்டும். ஏனைய விடயங்களில் இயக்கத்தின் கருத்துக்கு மாற்றமான கருத்தைக் கொண்டிருக்கவோ, தமது ஆலோசனைகளை இயக்கத்துக்கு வழங்கவோ அனைவருக்கும் பூரண உரிமை உண்டு. இயக்கத்தின் பூரண அதிகாரம் அங்கத்தவர்களிடமே. அங்கத்தவர்களின் கூட்டமைப்பு (Federation) இயக்கத்தின் உயர்பீடமாக அமையும்.

இயக்கத்தின் ஒழுங்கமைப்பு பல சபைகளால் உருவாக்கப்பட்டிருக்கும். அதன் கீழ்மட்டமாக கிளைகளும் உயர்மட்டமாக சம்மேளனமும் (கூட்டமைப்பு) அமையும். இரண்டு சம்மேளனங்களுக்கிடையிலான காலப்பிரிவில் தெரிவு செய்யப்படும் மத்திய சபை உயர்ந்த சபையாகக் கருதப்படும். கிளைகளால் எடுக்கப்படும் விஷேட தீர்மானங்கள் பிரதேச செயலக சபைக்கு அறிவிக்கப்பட்டு அது அடுத்து நடைபெறும் கலந்துரையாடலின் நிகழ்ச்சி நிரலில் உள்வாங்கப்படும்.

குறித்த தீர்மானம் அல்லது பரிந்துரை பிரதேச செயலக மட்டத்திலேயே ஏற்கப்படவோ மறுக்கப்படவோ முடியும். இவ்வாறு அது ஏற்கப்படுமானால் குறித்த தீர்மானம் அல்லது பரிந்துரை தேசிய மத்திய சபைக்கு முன்வைக்கப்பட வேண்டும். மத்திய சபை அதனை தனது அடுத்த கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரலில் உள்வாங்க வேண்டும். மத்திய சபை கூட்டத்தில் குறித்த பிரேரணை மறுதலிக்கப்படுமானால் அது சம்மேளனத்தின் கூட்டத்தின் போது முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படும். அங்கு குறித்த பிரேரணைக்குரிய அங்கீகாரம் கிடைத்தால் அது இயக்கத்தின் உத்தியோகபூர்வ [illegible]

மறுமலர்ச்சி இயக்கத்தில் இணைகின்ற அனைவரும் தமது குடும்பத்தினரையும் இயக்கத்தில் இணைக்க வேண்டும். மறுமலர்ச்சி இயக்கத்தைப் பலப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானமாக இதனை கருதக் கூடாது. இலங்கையில் நீண்ட காலமாக நிலவிய யுத்தம் குடும்பக் கட்டமைப்பை சிதைப்பதில் தாக்கம் செலுத்தியிருக்கிறது. பெரும்பாலான குடும்பங்களில் ஆரோக்கியமான உரையாடல்கள் நடைபெறுவதில்லை. குடும்ப வாழ்வு இயந்திரமயமாகியுள்ளது. எந்த இலக்கும் முன்னேற்றமும் இல்லாதது. எந்த உயிரோட்டமுமின்றியே வாழ்க்கை கழிகிறது.

எந்த ரசனையுமில்லாமல் சில குடும்பங்கள் காலம் கடத்துகின்றன. சர்வாதிகாரியொன்றின் பாத்திரத்தில் தந்தை கருதப்படுகிறான். தந்தையின் பாலியல் தேவையை நிறைவுசெய்யவும் பிள்ளைகளைப் பராமரிக்கவும் வீட்டு வேலைகள் செய்யவுமான இயந்திரத்தின் பாத்திரத்தை தாய் வகிக்கிறாள். அறிவுரீதியான கலந்துரையாடல்களுக்குப் பொருத்தமில்லாத வீட்டு வேலைகளுக்கு மட்டுமே உரியவளாகவே பெண் கருதப்படுகிறாள். படிப்பதற்கு மட்டுமெனவே பிள்ளைகளின் காலம் கழிகிறது. கல்வியைத் தவிர வேறெந்த புத்தாக்கமும் அவர்களுக்குத் தடை செய்யப்பட்டிருக்கிறது. பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையில், கணவன்-மனைவிக்கிடையில் சுமுகமான கலந்துரையாடல்கள் நடப்பதுமில்லை.

இலங்கையின் கல்வி குறுகிய சட்டகத்துக்குள் சுருங்கியிருக்கிறது. படிக்கும் மாணவர்களில் பெருந்தொகையானோர் கல்விசார் கற்கைகளை விரும்புவதில்லை. பாடசாலைப் பரீட்சைகளில் ஆர்வம் காட்டாத இவர்களை பெற்றோரும் பொருட்படுத்துவதில்லை. 08 ஆம் வகுப்புடன் திசைமாறும் இவர்களை தொழில்நுட்பக் கல்விகளில் ஈடுபடுத்த வேண்டும். அரசாங்கம் இதில் போதிய கவனம் எடுக்க வேண்டும். டியூஷன் பற்றியும் போதிய அறிவு பெற்றோருக்கு இல்லாததனால் தேவையற்ற டியூஷன்களுக்கும் பிள்ளைகளை அனுப்புகிறார்கள். இதனால் பிள்ளைப் பருவத்தின் பெரும்பாலான பகுதி கல்வியிலும் டியூஷனிலும் கழிகிறது.

பிள்ளைகளின் கல்வித் துறையையும் தொழிலையும் கூட பெற்றோரே தீர்மானித்து விடுகிறார்கள். இதன்போது இலக்கு வைக்கப்பட்ட தொழிலுக்குரிய அங்கீகாரமும் அதனால் கிடைக்கும் வருமானமும் நோக்கப்படுகிறதேயன்றி பிள்ளையின் இயலுமையும் விருப்பமும் கவனத்தில் எடுக்கப்படுவதேயில்லை. இதுபோன்ற விடயங்களில் பெற்றோருக்கு வழிகாட்டுவதற்கான அமைப்புக்கள் இலங்கையில் இல்லை. இதனை மறுமலர்ச்சி இயக்கத்தினால் நிவர்த்திக்க முடியும்.

இலங்கையின் பாடசாலைப் பிள்ளைகளில் பலர் கணித, விஞ்ஞான பாடங்களில் தோல்வியடைகிறார்கள். இதற்கு குடும்பங்களில் நிலவுகின்ற மூடக் கொள்கைகளையும் காரணமாக எடுத்துக் காட்ட முடியும். குடும்பத்தின் அனைத்து விடயங்களும் சகுணம் பார்த்தே நிகழ்த்தப்படுகின்றன. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் நேர்ச்சைகளுக்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். மனநலம் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை மந்திரவாதிகளிடம் அழைத்துச் செல்கிறார்கள். இவை அப்பாவித்தனமாக இருந்தாலும் பிள்ளைகளிடம் இவை பாரிய தாக்கம் செலுத்துகிறது. பிள்ளைகளின் தர்க்க ரீதியான அறிவு இதனால் மழுங்கடிக்கப்படுகிறது. இந்த அழிவு நிலையிலிருந்து பிள்ளைகளை மீட்கும் வகையில் பாடசாலைக் கல்வி முறையை மறுசீரமைக்க வேண்டியிருக்கிறது.

திருமணம் செய்து கொடுக்கும் போது ஜாதகம் பார்ப்பது தவிர்க்க முடியாத விடயமாகியிருக்கிறது. பிறப்பின் போதான ஒருவரின் நட்சத்திர நிலை அவரின் முழு வாழ்க்கையிலும் பாதிப்புச் செலுத்துகிறது என்று படிக்காதவர்கள் மட்டுமன்றி படித்தவர்களும் நம்புகிறார்கள். மனிதன் கற்காலத்தில் இருந்தபோது தோன்றியவைகளாக இந்த நம்பிக்கைகள் இருக்கலாம். மகளின் இராசி பலனில் புருஷமரணயோகம் இருந்தால் அவள் திருமணம் முடிக்கும் கணவன் இறந்து அவள் இளம் விதவையாகிவிடுவாள் என்று பெற்றோர் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கையினால் திருமணத்தைத் தவிர்த்து வாழும் கன்னியர் அனேகர் இருக்கிறார்கள்.

மறுமலர்ச்சி இயக்கத்தின் அங்கத்தவர்களின் குடும்பங்களையும் இணைத்துக் கொள்வதனூடாக குடும்ப அலகில் நுழைந்துள்ள இவ்வாறான மூட நம்பிக்கைகளைக் களைவதும் முக்கிய நோக்கமாகும். குடும்பங்களை தர்க்க ரீதியாகச் சிந்திக்க வைப்பதன் மூலம் அவற்றை இலக்கு நோக்கி முன்னேறுகின்ற குடும்பங்களாக மாற்ற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “முஸ்லிம்கள் எமக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள், ஆனால் வாக்களிப்பதில்லை”

## விஜித ஹேரத் (ஜேவிபி எம்.பி)



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள், கட்சியின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் மற்றும் சமூக பொருளாதார அரசியல் விவகாரங்கள் குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மீள்பார்வை பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

**நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி**

- ***நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி பெற்றுக்கொண்ட வாக்குகள் தொடர்பில் உங்களால் திருப்தியடைய முடிகின்றதா?***

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி 7 இலட்சத்து 12 ஆயிரம் வாக்குகளைப் பெற்றது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 5 இலட்சத்து 40,000 வாக்குகளே எமக்குக் கிடைத்திருந்தது. இம்முறை தேர்தலில் நாம் ஒரு இலட்சத்து 68,000 வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றுள்ளோம்.

மஹிந்த ராஜபக்ஷ 2 லட்சம் வாக்குகளை மாத்திரமே அதிகம் பெற்றுள்ளார். 6.3 சதவீத வாக்குகளை நாம் பெற்றுள்ளோம். அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களில் இது வரையில் எமக்கு 74 உறுப்பினர்களே காணப்பட்டார்கள். தற்பொழுது அவ்வெண்ணிக்கை 434 ஆக அதிகரித்துள்ளது.

நாம் எதிர்பார்த்த அளவில் வாக்குகளைப் பெறாவிட்டாலும் கூட மக்கள் எமது வாக்குப் பலத்தை அதிகரித்துள்ளார்கள். எனவே நாம் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியை பதிவுசெய்துள்ளோம்.

- ***தேர்தல் ஆரம்பிக்கின்ற காலப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணிக்கு சாதகமான நிலைமைகள் காணப்படுகின்ற போதிலும் வாக்களிப்பின் பின்னர் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ளாத நிலைமைகளை கடந்த காலத் தேர்தல்களினூடாக அவதானிக்க முடிந்தது. இந்த நிலையை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?***

உண்மையில் நல்லாட்சி அரசாங்கம் திருடர்களைப் பிடிக்கவுமில்லை. திருடர்களுக்கு தண்டனை வழங்கவுமில்லை. களவுகளை நிறுத்தவுமில்லை. மக்கள் விடுதலை முன்னணி ராஜபக்ஷ திருட்டுக் கும்பலுக்கு எதிராக அடிக்கடி குரல் எழுப்பி வந்தது. எனினும், இந்த அரசாங்கத்தினால் அவர்களுக்குத் தண்டனை வழங்க முடியாமல் போனது. இதனால் மக்கள் விடுதலை முன்னணி கூறுவது பொய்யென மக்கள் நினைக்கலானார்கள்.

மறுபக்கத்தில் நல்லாட்சியின் வாக்குறுதிகள் அனைத்தையும் இந்த அரசாங்கம் பச்சை பச்சையாக மீறி வந்தது. நாட்டு வளங்களை விற்பனை செய்ய ஆரம்பித்தது. மீண்டும் சில இடங்களில் இனவாதப் பிரச்சினைகள் மேலெழ ஆரம்பித்தன. இதனால் மக்கள் இந்த அரசாங்கத்துடன் கடுமையான கோபத்துடன் இருந்தார்கள். அந்தக் கோபத்தை வெளிக்காட்டும் வகையிலேயே மக்கள் இம்முறை தேர்தலில் வாக்களித்தார்கள். இதன் மூலம் மக்கள் விடுதலை முன்னணி கூறியது ஒன்றும் பொய்யல்ல என்பது நிரூபணமாகியுள்ளது.

ஜேவிபியின் கருத்துக்கள் பிழையான கருத்துக்கள் என யாரும் கூறுவதில்லை. எனினும், மக்கள் அரசாங்கத்தின் மீது கொண்ட கோபத்தை வெளிக்காட்டுவதற்கு 2015இல் ஆட்சிமாற்றத்திற்கு பங்களித்த அணியை தெரிவுசெய்தது. பழைய திருட்டுக் கும்பல் இந்தச் சந்தர்ப்பத்தில் பிரயோசனம் பெற்றது. எமது போராட்டம் புதிய திருடர்களுக்கு எதிராகவும் பழைய திருடர்களுக்கு எதிராகவுமே முன்னெடுக்கப்பட்டு வந்தது. ஊழலுக்கு எதிராக மிகப்பெரும் மக்கள் சக்தியை நாமே கட்டியெழுப்பினோம். இதன் வெற்றி எமக்கே உரியது. ஆனால் வாக்களிப்பின்போது மக்கள் அந்தச் சந்தர்ப்பத்தை மாத்திரம் கருத்திற்கொண்டு வாக்களித்தார்கள். எதிர்வரும் காலத்தில் அவர்கள் இந்த விடயத்தின் மூலம் படிப்பினை பெறுவார்கள்.

- ***உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதற்கு கட்சிகள் அழைப்பு விடுக்கும் பட்சத்தில் மக்கள் விடுதலை முன்னணி எத்தகைய நிலைப்பாட்டைக் கைக்கொள்ளும்?***

பழைய திருடர்களுக்கு ஆதரவு வழங்குவதுமில்லை. புதிய திருடர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுமில்லை. உள்ளூராட்சி மன்றங்களில் நாம் தனித்து நின்று சுயேட்சையாக இயங்கவுள்ளோம். உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெறும் ஊழல் மோசடிகளுக்கு எதிராகவும் செயற்படுவோம்.

அதுபோன்று நாம் எமக்குக் கிடைத்துள்ள உறுப்பினர்களைக் கொண்டு கிராமிய மட்டத்தில் உயரிய பட்ச சேவைகளை மேற்கொள்ளவும் தயாராகவுள்ளோம். இதுவல்லாமல் நாம் யாருக்கும் ஆதரவு வழங்க மாட்டோம்.

- ***தற்பொழுது உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்துள்ளது. இந்நிலையில் மக்கள் விடுதலை முன்னணியின் அடுத்த கட்ட அரசியல் நகர்வுகளை எவ்வகையில் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளீர்கள்?***

உண்மையில் நாடு தற்பொழுது ஸ்திரமற்றுள்ளது. பொருளாதாரம் சரிவடைந்துள்ளது. எதிர்வரும் காலத்தில் இன்னுமின்னும் நெருக்கடிகள் தோன்ற வாய்ப்புள்ளது. காரணம், கூட்டரசாங்கத்தில் மைத்திரிபால சிறிசேனவும், ரணில் விக்ரமசிங்கவும் அதிகாரப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஜனாதிபதி அவரது தலைமையில் பழைய திருடர்களையும் சேர்த்துக் கொண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கமொன்றை அமைக்கும் முயற்சியில் உள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியும் தனியொரு அரசாங்கத்தை அமைக்கும் பிரயத்தனத்தில் உள்ளது. தற்பொழுது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்கிறோம்.

எமக்கு மத்தியில் பிரச்சினைகள் இல்லை, ஒப்பந்தம் அப்படியே உள்ளது எனக் கூறுகிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. உள்ளால் பனிப்போர் நிலவி வருகிறது. இந்தப் பனிப்போர் இன்னும் அதிகரிக்கும். இன்னுமின்னும் நெருக்கடிகள் தோன்றும். இதனால் மக்கள் அரசாங்கத்தை வெறுக்க ஆரம்பிப்பார்கள். எனவே புதிய அணியினருக்கும் பழைய அணியினருக்கும் இந்த நாட்டை சரிசெய்ய முடியாது என்பதை மக்கள் விடுதலை முன்னணி ஒப்புவித்துள்ளது.

இதனால் நாம் மக்களை விழிப்பூட்டி, அரசாங்கத்திற்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டி, மக்கள் மீது நம்பிக்கை வைத்து முன்னகர்ந்து கொண்டுள்ளோம். எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந்த அரசாங்கத்தை மாற்றியமைக்கும் போராட்டத்தில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். இந்தத் தேர்தல் பெறுபேறு எமக்கு அந்த இலக்கினை அடைந்து கொள்ள மிகப்பெரும் உந்துசக்தியாக அமைந்துள்ளது.

- ***2015 ஜனவரி 08ஆம் திகதி மஹிந்த அணியை வீட்டுக்கு அனுப்பிய மக்கள் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கூடாக மீண்டும் அந்த அணியை மாற்றீடாக தெரிவுசெய்துள்ளது. இதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?***

மக்கள் தவறிழைத்துள்ளனர் என்றே நாங்கள் கருதுகிறோம். மக்களுக்கு ஏற்பட்ட அவசரக் கோபத்தையே தேர்தல் பெறுபேறாக வெளிப்படுத்தினார்கள். மக்கள் மீண்டும் மோசடிக் கும்பலையே தெரிவுசெய்துள்ளார்கள். இன்னும் 3 அல்லது 4 மாதங்களில் உள்ளூராட்சி சபைகளுக்கு எப்படிப்பட்ட நபர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள்? எப்படியான நபர்கள் உள்ளூராட்சி சபைகளின் தலைமைப் பதவிக்கு வருகிறார்கள்? என்பதை மக்கள் தெரிந்துகொள்வார்கள். முன்னைய ராஜபக்ஷ ஆதரவாளர்கள் உள்ளூராட்சி மன்றங்களில் புரிந்த ஊழல்களை மீண்டும் செய்ய முனைகின்றபோது மக்கள் விழித்துக் கொள்வார்கள். நாங்கள் மோசடிக் கும்பலையே மீண்டும் தெரிவுசெய்திருக்கிறோம் என்று அவர்கள் கைசேதப்படுவார்கள்.

இந்த அரசாங்கத்தின் போக்கு சரியில்லை. இந்த அரசாங்கம் பிழையான வழியில் செல்கிறது. ஆனால் இதற்கு மாற்றீடாக பழைய திருடர்களை மீண்டும் தெரிவுசெய்திருப்பது இதை விட மிகப்பெரும் தவறாக உள்ளது. இதனால் இந்தத் தவறை சரிசெய்துகொள்வதற்கு எதிர்வரும் காலப்பகுதியில் மக்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். இன்று தவறிய மக்கள் நாளைய தினம் அந்தத் தவறை சரிசெய்துகொள்ள முயற்சிப்பார்கள் என நாம் நம்புகிறோம்.

- ***இலங்கையிலுள்ள பெரும்பாலான மக்கள் பிரதான இரண்டு கட்சிகளை சூழவே ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அவர்கள் ஏன் இன்னும் மாற்றத்தை விரும்புகிறார்கள் இல்லை? அதற்கான காரணங்கள் என்னவென நீங்கள் கருதுகிறீர்கள்?***

உண்மையில் மக்கள் நீண்டகால செயற்பாடுகளுக்கு விருப்புக்கொள்வதில்லை. அந்தந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு அமையவே பிரதிபலிப்புக்களை காண்பிக்கிறார்கள். வியாபாரம் வீழ்ச்சியடைந்தது என வைத்துக்கொள்வோம், உதாரணமாக மாணிக்கக் கல் விற்பனைக்குக் கூடுதல் வரி விதிக்கப்பட்டமையினால் பேருவலை மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்தார்கள். தூரநோக்குடன் சிந்தித்து மக்கள் வாக்குகளைப் பயன்படுத்துவார்கள் என்றால் இதை விட பெரிய மாற்றங்களை கொண்டு வந்திருக்கலாம். துரதிஷ்டவசமாக எமது நாட்டு மக்கள் 1948 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து இந்த விடயத்தையே செய்து வருகின்றனர்.

ஒரு கட்சியுடன் கோபம் ஏற்பட்டால் மற்றொரு பிரதான கட்சிக்கு என்றவாறே மக்கள் வாக்களித்து வந்துள்ளனர். அணிக்கு அணி தாவி வாக்களிக்கும் முறையை மாற்றுவதற்கு நாம் மேற்கொண்ட தலையீடுகள் போதாமல் உள்ளது. அதற்கு நாம் தலைமைத்துவத்தை வழங்குகின்றோம். ஆனால் மக்கள் அந்த இடத்திற்கு போதிய அளவில் ஒன்று திரளவில்லை. மக்களை அந்த இடத்திற்கு கொண்டு வரும் மிகப் பெரிய பொறுப்பு எமக்குள்ளது. இது மிகப் பெரும் சவாலான விடயம்.

உடனடி மாற்றங்களுக்கு அப்பால் சென்று நாட்டின் அரசியல், பொருளாதாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக வேண்டி மாற்று அரசியல் சக்தியொன்றுக்கு இந்த நாட்டை ஒப்படைப்பதற்கு மக்களை ஒன்றுதிரட்டுவது உண்மையிலேயே ஒரு சவாலான விடயம் தான். இந்த சவாலை நாம் ஏற்கிறோம். ஒரு சில தடைகள் எமக்குள்ளன. அந்தத் தடைகளைத் தாண்டி இம்மிகப்பெரும் சவாலை நாம் வெற்றிகொள்வோம்.

- ***முஸ்லிம் சமூக அரசியல் குறித்த உங்களது பார்வையை சற்று தெளிவுபடுத்த முடியுமா?***

மக்கள் விடுதலை முன்னணியை சூழ பெருமளவிலான முஸ்லிம் மக்கள் அணிதிரண்டார்கள். ஆனால் வாக்களிக்கவில்லை. சிலரே எமக்கு வாக்களித்தார்கள். பெரும்பாலான முஸ்லிம் மக்கள் எமது கட்சிக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள் ஆனால் வாக்களிப்பதில்லை. இத்தகைய மனப்பான்மையை மாற்றிக்கொள்ளுமாறு அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். இன்றேல், மோசடிப் பேர்வழிகள் மீண்டும் அதிகாரத்திற்கு வருவார்கள். முஸ்லிம்கள் முஸ்லிமாக மாத்திரம் நினைப்பது தவறு. நாம் இலங்கையர்கள் என்பதாக நினைத்தால் ஒன்றிணைய முடியும். முஸ்லிம் அரசியல் கட்சிகள் எப்பொழுதும் இனவாதத்தையே தூண்டி வருகின்றன. (பக்.14)



## எழுவாய், பயமில்லை

அபூ ஷாமில்

## தலைமைக்கு இல்லாத தலை

பள்ளிவாசல்களின் சுதந்திர தினம் தொடர்பாக பலரும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர், இதனை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய ரீதியான ஒரு தலைமை நிலையம் இருக்க வேண்டும். அப்போது தான் இது சாத்தியமாகும் என்று தெரிவித்தார்.

இது தான் சமூகத்தின் உண்மையான ஆதங்கம் என்று நினைக்கிறேன். சமூகம் இன்று தான் எதிர்நோக்குகின்ற அன்றாட விடயங்களில் வழிகாட்டுவதற்கான தலைமையொன்று இன்றித் தவிக்கிறது. பெரும்பாலான அதனது விவகாரங்கள் தொடர்பில் பேச்சு வரும் போதெல்லாம் யாரிடம் போய்ச் சொல்ல என்று ஏக்கத்துடன் மௌனித்துப் போகிறது. இந்த விரக்தி நிலை தான் அரசியல் விவகாரங்களிலும் மார்க்க விவகாரங்களிலும் சமூகமாகச் சிந்திக்காமல் தான்தோன்றித்தனமாகச் சிந்திப்பதற்கு மக்களைத் தூண்டியிருக்கிறது.

சமூகத்தின் உடனடி ஆளுகை மையமான பள்ளிவாசல்கள் பல்வேறு ஆக்கிரமிப்புச் சக்திகளினாலும் ஆளப்படுகின்றன. ஒவ்வொரு பள்ளிவாசல் என்று சொல்லப்படுபவை எல்லாம் அரசியல் கட்சிகளின் கிளைக் காரியாலயங்கள் போல ஏதோ ஒரு கொள்கையின் கிளைக் காரியாலயமாகவே தொழிற்படுகின்றன. எப்படி ஒரு கட்சியின் கிளைக் காரியாலயத்தில் இன்னொரு கட்சி செயற்பட முடியாதோ அதேபோலத் தான் கொள்கைகளின் கிளைக் காரியாலயங்களிலும் மாற்றுக் கொள்கை உடையவர்களின் நிலைமை. இதனால் ஒரே ஊரில் அவரவர்க்கென பல கட்சிக் காரியாலயங்கள் இருப்பது போலவே பள்ளிவாசல்கள் என்ற பெயரில் பல கொள்கைக் காரியாலயங்கள் ஊர்களிலே இருக்கின்றன.

இவற்றை சகலரும் சமமாக மதிக்கப்படுகின்ற, சகலருக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுகின்ற இஸ்லாம் காட்டித் தந்த பள்ளிவாசல்களாக உருமாற்றும் வேலை சமூகத்திலே இன்னும் எஞ்சியிருக்கின்றது. இந்த இலக்கை நோக்கி பள்ளிவாசல்களை வழிநடத்துவதற்கான ஒரு தலைமை முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் இருக்க வேண்டும் என்பதைத் தான் சமூகம் ஏக்கத்துடன் எதிர்பார்க்கிறது.

இந்தப் பணியை யார் செய்வது ? இலங்கை முஸ்லிம்களின் தலைமையாகக் கருதப்பட்டு வந்த அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா அதனது 90 வருட கால ஆயுளில் இந்தப் பணியை இதுவரை செய்யவில்லை. ஒற்றுமைப் பிரகடனம் என்றதொரு வெற்றுப் பிரகடனத்தை வெளியிட்டு அதனுடன் தனது கடமை முடிந்து விட்டது என்று அது சுருண்டு படுத்து விட்டது. இத்துப் போன அந்தப் பிரகடனத்துக்கு உயிரூட்டி அதனை நடைமுறைப்படுத்துவற்கு ஆவனவற்றைச் செய்ய வேண்டிய பணியை அது செய்யவில்லை.

பள்ளிவாசல் ஒன்று எப்படி இயங்க வேண்டும், எந்தெந்த நோக்கங்களை அது அடைய வேண்டும், என்னென்ன விடயங்களை அது செய்ய வேண்டும், சமூகத்தின் வளர்ச்சிக்கு அதனுடைய பங்களிப்பு என்ன என எதுவுமே எங்குமே பதியப்பட்டதாக இல்லை. குறிப்பாகச் சொல்லப் போனால் ஒரு பள்ளிவாசலிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்ற எந்தக் கடமைப்பாடும் (Mandate) பள்ளிவாசல்களுக்கு குறித்துக் கொடுக்கப்படவில்லை. இப்படிக் குறித்துக் கொடுக்கப்படாததன் காரணமாகத் தான் ஒவ்வொரு பள்ளிவாசல்களும் குறித்த காலப்பகுதியில் பள்ளிவாசலை ஆட்சி செய்கின்ற குறித்த கொள்கையினரின் தேவைக்கேற்றாற்போல வக்பு சபையின் தேவைக்காக யாப்பினை வரைந்து, பின்னர் அதனை வைத்த இடமும் தெரியாமல் மறந்து, தம்மிஷ்டப்படி பள்ளிவாசலை நடத்திச் செல்கின்றனர்.

இந்த இடத்தில் தான் பள்ளிவாசல்களிடமிருந்து சமூகக் கடமை ஒதுக்கித் தள்ளப்படுகின்றது. இது தான் பள்ளிவாசல்கள் பலவாகப் பெருகியிருந்தும் சமூகத்தின் நிலையில் மாற்றமெதுவும் வராமலிருப்பதற்கு, அல்லது இருக்கின்ற நிலையை விட சமூகம் வீழ்ச்சியடைந்து போவதற்குக் காரணமாக இருக்கின்றது. இந்த நிலையில் இருந்து பள்ளிவாசல்களை தூக்கி விடுவதற்கான ஒரு மத்திய தலைமை ஒன்றைத் தான் சமூகம் எதிர்ப்பார்ப்பது மக்களுடைய கருத்துக்களில் இருந்து தெரிகிறது. 90 வருடங்களிலும் ஜம்மியதுல் உலமா இந்தப் பணியைச் செய்யவில்லை. 90 வருடங்களுக்குப் பிறது அது வேறு பாதையில் பயணிக்கவும் தொடங்கியிருக்கிறது. பாடசாலைகளுக்கு கட்டடம் அமைத்துக் கொடுத்தல், தொண்டர் ஆசிரியர்களை நியமித்தல், ஆசிரியர்களுக்கு குவாட்டர்ஸ் கட்டிக் கொடுத்தல், வெள்ள நிவாரணம் வழங்குதல் என அதனுடைய பணி விஸ்தரித்துச் செல்லும் நிலையில், சமூகத்தின் மார்க்கத் தேவையான பள்ளிவாசல்களை இஸ்லாமிய மயப்படுத்துவது தொடர்பில் சிந்திப்பதற்கு உலமா சபைக்கு நேரம் இருக்குமா என்பது தெரியவில்லை.

இந்த நிலையில் கிளைக் காரியாலங்களாகத் தொழிற்படுகின்ற நிறுவனங்களை ஒருமுகப்படுத்தப்பட்ட நோக்கில் இயங்குகின்ற பள்ளிவாசல்களாக மாற்ற வேண்டிய தேவையை சமூகம் தற்போது பேசத் தொடங்கியிருக்கிறது. இதற்கென ஒரு தலைமை நிலையத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டிய தேவை எழுந்திருக்கிறது. எந்தப் பள்ளிவாசலும் தன்னுடைய பணியைச் செய்யவில்லை என்று விரல் நீட்ட முடியாமல் இருப்பதற்குக் காரணம், அது எந்த வேலையைச் செய்திருக்க வேண்டும் என்ற குறிப்பான விடயங்கள் இல்லாமைதான். ஊர்களிலே கொள்கைகளுக்காக மலிந்திருக் கின்ற இவ்வாறான பள்ளிவாசல்களுக்கு மத்தியில் இஸ்லாத்துக் கென ஒரு பொதுவான பள்ளிவாசலை அமைத்து அவற்றை நாடு முழுவதிலுமுள்ள அதுபோன்ற பள்ளிவாசல்களுடன் ஒருங்கிணைத்து ஒரு நெட்வேர்க்கை உருவாக்கிச் செயற்பட வேண்டியிருக்கிறது. அதற்கு பள்ளிவாசல்களுக்கான மத்திய தலம் ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது.

ஊர்களிலே பள்ளிவாசல்கள் என்ற பெயரில் இருக்கின்றவைகள் தான் ஊருக்கான தலைமையாக இருக்கின்றன. அந்தத் தலைமைகளையெல்லாம் இணைக்கக் கூடிய ஒரு தலை இல்லாமல் தான் சமூகம் எனும் உடம்பு தள்ளாடிக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் முற்றுகையினால் 1000 காஸா மக்கள் உயிரிழப்பு

## சர்வதேசப் பார்வை



தரை, ஆகாய, கடல் வழி முற்றுகைக்கு உட்பட்டுள்ள காஸாவில் இதுவரை பொருளாதாரத் தடையின் காரணமாக 1000 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். 2006 ஆம் ஆண்டு இஸ்ரேல் விதித்த பொருளாதாரத் தடையினால் இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று காஸாவில் இயங்கும் மனிதாபிமான உதவி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அந்நிறுவனங்களின் இணைப்பாளரான அஹமத் அல் குர்த் கருத்து வெளியிடுகையில், ''கடந்த சில நாட்களில் 5 தாய்மார்கள் குறைமாதக் குழந்தைகளைப் பிரசவித்துள்ளனர். மருத்துவ வசதிகளின் போதாமையே இதற்குக் காரணம். இதுவரை உயிரிழந்த 1000 பேரில் சுகாதார மற்றும் மருத்துவ வசதியின்மையால் இறந்தோர் தொகை 450 ஆகும். மின்சாரம், குடிநீர் என்பவற்றுக்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் காஸா மக்கள் தொடர்ந்தும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.''

அறுவைச் சகிச்சைகளை மேற்கொள்வதற்குப் போதிய மருத்துவ வசதிகள் வைத்தியசாலைகளில் இல்லை. இதனால் 100 பேர் அளவில் உயிரிழந்துள்ளனர். மின்சார வசதியின்மையால் குழந்தைகளின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயத் துறையில் பணியாற்றியோர் இஸ்ரேலின் ஆகாயவழித் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

வாழ்வாதாரத்தைப் பெறுவதற்கான சகல வழிகளும் அடைக்கப்பட்டு, 12 ஆண்டுகள் கடந்த நிலையில், காஸா மக்கள் சுத்தமான குடிநீர் தட்டுப்பாட்டையும் போஷாக்கான உணவுத் தட்டுப்பாட்டையும் எதிர்கொண்டிருப்பது அவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள குரூரமான குற்றமாகும். இதற்கு இஸ்ரேலும் சர்வதேச நாடுகளும் பதில் கூற வேண்டும் என அஹ்மத் குர்த் தெரிவித்துள்ளார்.

# சிரியாவின் கூதா பிரதேசத்தில் அரச இராணுவம் கடும் தாக்குதல்
# பல்லாயிரக்கணக்கான மக்கள் பரிதாபமாக உயிரிழப்பு



டமஸ்கஸின் புறநகர்ப் பகுதியான கூதா மீது சிரிய அரச படையினர் மேற்கொண்டு வரும் வான்வழித் தாக்குதல் சர்வதேச சமூகத்திற்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குளோரின் வாயுக் குண்டுகள் சிவிலியன்கள் மீது வீசப்படுவதனால் பாரிய மனித அழிவு அங்கு ஏற்பட்டுள்ளதாகக் கவலை வெளியிடப்படுகின்றது.

நான்கு இலட்சம் மக்களைக் கொண்ட இந்நகர் மீது சிரிய இராணுவம் நடத்திய தாக்குதலில் இதுவரை 650 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் அநேகமானோர் குழந்தைகளும் பெண்களும் என்பது குறிப்பிடத்தக்கது.

சிரியாவின் சிவில் யுத்தத்தைக் கண்காணித்து வரும் சிரியாவுக்கான மனித உரிமை நிறுவனம் இத்தகவலை உறுதி செய்துள்ளது. பெப்ரவரி 24 ஆம் திகதி ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை உடன் நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் முன்வர வேண்டும் என்று ஐ.நா. செயலாளர் அன்டோனியோ கட்டர்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

போரில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்புக்கும் நாம் வேண்டுகோள் விடுக்கின்றேன். சிவிலியன்களையும் அவர்களது அடிப்படைக் கீழ்க்கட்டுமானங்களையும் பாதுகாப்பதற்கு சகல தரப்பும் முன்வர வேண்டும். சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மதித்துச் செயல்பட வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சவூதியில் இராணுவத்துறை பதவிகளில் மாற்றம்



சவூதி மன்னர் சல்மான் நாட்டின் அதியுயர் இராணுவப் பதிவிகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதோடு, சில புதிய பிரதியமைச்சர்களையும் நியமனம் செய்துள்ளார். நாட்டின் முப்படைகளின் தளபதி ஓய்வு வழங்கப்பட்டு, ஜெனரல் பையாத் பின் ஹமீத் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். பொருளாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் புதிய அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதித் தொழில் அமைச்சராக தமாதுர் பின்த் யூஸுப் அல் ரமா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சவூதியில் நியமிக்கப்பட்டுள்ள பெண் அமைச்சராவார். அதேவேளை, சில மாநிலங்களுக்கு புதிய கவர்னர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். 2016 இல் முஹம்மத் பின் சல்மான் பட்டத்துக்குரிய இளவரசராக நியமிக்கப்பட்டதை அடுத்து நாட்டில் அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

மன்னர் சல்மானின் சகோதரர்கள் பலர் புதிய கவர்னர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். 32 வயதான முஹம்மத் பின் சல்மானின் கீழ் நாடு வரலாறு காணாத மாற்றங்களைக் கண்டு வருகின்றது. பொருளாதார மற்றும் சமூக சீர்திருத்தங்கள் பல அறிவிக்கப்பட்டுள்ளன. நவீன இஸ்லாத்தின் கீழ் பெண்களுக்கு முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேலிய பிரதமர் உழல் குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ளார்



இஸ்ரேலிய பிரதமர் நெடன்யாஹு இரு பெரும் ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ளதால் பொலிஸாரின் விசாரைணைக்கு உட்படவுள்ளார். ஜேர்மனின் நீர்மூழ்கிக் கப்பல்களை கொள்வனவு செய்வதில் மிகப் பெருந்தொகைப் பணத்தை லஞ்சமாகப் பெற்றார் என்றும், அதேபோன்று இஸ்ரேலிய தொலைத்தொடர்பு கம்பனியொன்றின் ஊழல் மோசடியோடும் அவர் தொடர்புபட்டுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. விசாணைக்குரிய தினங்கள் அறிவிக்கப்பட்டதை அடுத்து அதனைப் பிற்போடுவதற்கு அனைத்து வகையிலும் நெடன்யாஹு முயற்சிப்பதாக இஸ்ரேலிய பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் எஹுட் பர்ராக் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் சிறைவாசம் அனுபவித்து வருவது குறிப்பிடத்தக்கது. நெடன் யாஹு அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஐபெக் மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதாகவும் விசாரணைத் திகதியை பிற்போடுமாறும் பொலிஸாருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐபெக் என்பது அமெரிக்காவில் இயங்கும் மிகப் பெரும் யூத லொபி என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலுடனான ராஜதந்திர உறவுகளை தென்னாபிரிக்கா துண்டித்துக்கொள்ளும்



தென்னாபிரிக்கா நீண்ட காலமாக பலஸ்தீனர்களுக்கு ஆதரவு தெரிவித்து வரும் நாடு. தற்போது இஸ்ரேல் பலஸ்தீனர்களை நடத்தும் விதத்தினை கருத்திற்கொண்டு இஸ்ரேலுடனான அனைத்து ராஜதந்திர உறவுகளையும் தென்னாபிரிக்க அரசு முறித்துக் கொள்ளும் என்று அந்நாட்டின் விஞ்ஞான, தொழில்நுட்பத் துறை அமைச்சர் நலனி பெண்டோ தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்காவின் புதிய ஜனாதிபதியாக சிரில் ரமபோஷா நியமிக்கப்பட்டதை அடுத்து பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் இக்கருத்தினை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, ''பெரும்பான்மைக் கட்சிகள் இஸ்ரேலுடனான ராஜதந்திர உறவை துண்டித்துக் கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளன. இரு நாட்டுத் தீர்வை இஸ்ரேல் அங்கீகரித்து, பலஸ்தீன மக்களுக்கு ஜனநாயகத்தையும் முழுமையான சுதந்திரத்தையும் வழங்காத பட்சத்தில், தென்னாபிரிக்கா இந்த முடிவை அமுல்படுத்தும்'' என அவர் தெரிவித்தார்.

விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் ரமபோஷாவின் புதிய அமைச்சரவையில் பிரதித் தலைவராக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றார். இதேவேளை, பலஸ்தீன யுவதி இஸ்ரேலிய சிறையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளது குறித்தும் தென்னாபிரிக்க பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. இஸ்ரேலிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வராஜக நடவடிக்கைகளை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

# கட்டாருக்கு எதிரான பொருளாதாரத் தடையை முடிவுக்குக் கொண்டு வாருங்கள்

கட்டாருக்கு எதிராக அறபு நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஐ.நா. மனித உரிமை நிறுவனம் விரைந்து செயல்பட வேண்டும் என கட்டார் வெளிவிவகார அமைச்சர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஒன்பது மாதங்களுக்கு முன்னர் அறபு நாடுகள் பொருளாதாரத் தடை விதித்தன. இது குறித்து கட்டார் வெளிவிவகார அமைச்சர் ஷெய்க் முஹம்மத் பின் அப்துர் ரஹ்மான் அஸ்ஸானி கருத்து வெளியிடுகையில், ''ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவையும் அதன் செயற்பாட்டு நிறுவனங்களையும் ஒரு தலைப்பட்சமாக விதிக்கப்பட்ட கட்டார் மக்களுக்கு எதிரான பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றேன். இதற்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் வகைகூற வேண்டும்.''

ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவின் 37 ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவின் கிழக்கு கூதா: பூமியில் ஒரு நரகம்

• றவூப் ஸெய்ன்

டமஸ்கஸ் புறநகர்ப் பகுதியான கிழக்கு கூதா மீது சிரிய அரச படையினர் ரஷ்ய இராணுவத்துடன் சேர்ந்து மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களால் அந்நகரம் பாரிய மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. நூற்றுக் கணக்கான அப்பாவிக் குழந்தைகள் இத் தாக்குதலில் பலியாகியுள்ளனர். பெண்கள், வயோதிபர்கள், நோயாளிகளின் நிலைமையும் கவலைக்கிடமாக உள்ளது என்று ஐ.நா. செயலாளர் தெரிவித்துள்ளார். 30 நாட்கள் போர் நிறுத்மொன்றுக்கு சிரிய அரசாங்கம் இணக்கம் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.





கூதா நகரை 'பூமியில் உள்ள நரகம்' என்று வர்ணித்துள்ள செயலாளர், கடந்த திங்களன்று ஜெனீவா நகரில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமை சபையில் சிரிய அரசாங்கப் படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் குண்டுத் தாக்குதல்கள் அப்பிரதேசத்தை முற்றாக அழித்து வருகின்றது என்று எச்சரித்துள்ளார்.

சிரிய அரச படையின் தாக்குதல்களை உடன் நிறுத்துவதற்குப் பாதுகாப்புச் சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் சிரியாவின் ஆதரவு நாடான ரஷ்யா தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. கடந்த 08 ஆண்டுகளாக தனது சொந்த மக்கள் மீது சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்டுள்ள ஆயுதங்களைப் பிரயோகித்துவரும் சிரிய அரசாங்கம் குறித்து ஐ.நா வின் மெத்தனம் நீடித்து வரும் நிலையில், பாதுகாப்புச் சபையின் இந்த அதிரடித் தீர்மானம் சம்பிரதாய பூர்வமானது என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஏற்கனவே அலப்போ நகர் மீது குளோரின் வாயுத் தாக்குதலை மேற்கொண்ட சிரிய அரசாங்கம் மற்றும் அதன் ஜனாதிபதி போர்க்குற்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பாதுகாப்புச் சபையோ இவ்விவகாரத்தைக் கையாண்ட விதம் சிரிய அரசாங்கத்திற்குச் சாதகமாகிவிட்டது.

தற்போது கூதா நகர் மீது சிரிய அரச இராணுவம் வெள்ளைப் பொஸ்பரஸ் மற்றும் குளோரின் வாயுக் குண்டுகளைக் கண்மூடித்தனமாக வீசி வருவதனால் குழந்தைகள் மூச்சுத் திணறி உயிரிழக்கின்றனர். இவ்வாறு சர்வதேச ரீதியில் போர்களின்போது பயன்படுத்தப்படக் கூடாது எனத் தடைவிதிக்கப்பட்டுள்ள ஆயுதங்களை சிரிய இராணுவம் பயன்படுத்துவது மிகப் பெரிய போர்க் குற்றமாகும்.

கடந்த காலத்தில் இவ்வாறான போர்க் குற்ற விசாரணைக்கு ஜனாதிபதி பஷார் அல் அஸதோ அவரது பாதுகாப்பு அமைச்சரோ உட்படுத்தப்படவில்லை. தொடர்ந்தும் மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்றொழிப்பதற்கு இத்தகைய காட்டுமிராண்டித் தனமான அணுகுமுறையை சிரிய இராணுவம் சர்வ சாதாரணமாகக் கையாண்டு வருகின்றது.

கிழக்கு கூதாவை அண்டியுள்ள ஷிபாணிய்யா நகரத்தில் பணியாற்றி வரும் வைத்தியர்கள் பலர் அரச படையினர் மேற்கொண்டு வரும் தாக்குதல்களில் குளோரின் வாயுக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதைத் தெட்டத் தெளிவாக அடையாளப்படுத்தியுள்ளனர். இதேபோன்று போரில் காயப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி அளிக்கும் தன்னார்வத் தொண்டர் நிறுவனமான சிரிய சிவில் பாதுகாப்பு எனும் அமைப்பும் அரசாங்கத்தின் இந்தக் கொடூர செயலைத் தகுந்த ஆதாரங்களுடன் சர்வதேச சமூகத்திற்கு முன்வைத்துள்ளது.

நச்சுத் தன்மையுள்ள குளோரின் வாயுக் குண்டுகள் பரவலாகப் பயன்படுத்தப்படுவதனால் குழந்தைகள் மூச்சுத் திணறி பரிதாபமாக உயிரிழப்பதோடு உணவுப் பொருட்கள் மற்றும் குடிபானங்கள் என்பனவும் பாவனைக்குப் பொருத்தமற்றதாக மாறி வருகின்றன என சிரிய சிவில் பாதுகாப்பு அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது. இதற்கிடையில் அரச படையினரின் தாக்குதல் தீவிரமடைந்துள்ளதால் மக்களுக்கு நிவாரண உதவியளிக்கும் சர்வதேச நிறுவனங்களின் பணிகளும் முற்றாக முடக்கப்பட்டுள்ளன.

அலப்போவை அரச படையினர் 2017 இல் கைப்பற்றியதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மிகக் கொடூரமான தாக்குதல் இதுவென்று வர்ணிக்கப்படுகின்றது. கொல்லப்படுபவர்களில் அநேகமானவர்கள் குழந்தைகள் என்பது கவலைக்கிடமானது. ஏற்கனவே நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளதோடு பலர் காயமடைந்துள்ளனர்.

இத்தருணத்தில் சிரியாவின் அரச இராணுவத்திற்கு ரஷ்யா போர் விமானங்களை வழங்கியுள்ளமை நெருக்கடியை மேலும் கூர்மைப்படுத்தியுள்ளது. தாக்குதல் மேலும் சில வாரங்களுக்கு நீடிக்குமானால் அந்நாட்டில் பாரிய மனிதாபிமான நெருக்கடி ஒன்று வெடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது கூதாவில் 04 இலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். பெப்ரவரி 18 இல் அரச படையினர் ஆரம்பித்த வான்வழித் தாக்குதலில் 600 பேர் உயிரிழந்துள்ளனர் என சிரியாவுக்கான மனித உரிமைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட நாடொன்றின் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் சிவில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த துயரம் சமீபத்திய மனித வரலாற்றில் சிரியாவிலேயே நிகழ்ந்துள்ளது. 13 மில்லியன் சிரிய மக்கள் 2011 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர். இது அந்நாட்டு சனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமாகும். அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையகத்தின் அறிக்கையின் படி 5.5 மில்லியன் சிரிய மக்கள் வெளிநாடுகளில் அகதிகளாய் அடைக்கலம் கோரியுள்ளனர்.

லெபனான், ஜோர்டான், துருக்கி ஆகிய எல்லைப்புற நாடுகளிலேயே பெரும்பாலான சிரிய அகதிகள் அடைக்கலம் கோரியுள்ளனர். இதேவேளை 6700 கிலோமீட்டருக்கு அப்பாலுள்ள ஆபிரிக்க நாடுகளிலும் சிரிய அகதிகள் தஞ்சம் கோரியுள்ளனர். வட ஆபிரிக்க நாடுகளான அல்ஜீரியா, தூனீஷியா, மொரோக்கோ போன்றவற்றிலும் ஸன்ஸிபார், தன்ஸானிய்யா, கானா, உகண்டா போன்ற கிழக்காபிரிக்க நாடுகளிலும் கூட சிரிய அகதிகள் வெள்ளமாய்த் திரள்கின்றனர். 32 நாடுகளில் இன்று சிரிய அகதிகள் வாழ்வதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

2011 இல் சிரியாவில் ஆளும் அலவி ஷீஆ வர்க்கத்திற்கெதிராக அறபு வசந்தம் வெடித்துச் சிதறியது. தூனீஷியாவில் ஆரம்பித்த அறபு வசந்தம் எகிப்து, லிபியா, யெமன் ஊடாக சிரியாவை வந்தடைந்தது. எனினும், ஏனைய அறபு நாடுகள் போலல்லாது சிரியாவின் கொடூரமான இரும்புச் சர்வாதிகாரம் அந்நாட்டு மக்கள் மீது கடந்த 08 வருடங்களாக மேற்கொண்டுவரும் கொடூரமான தாக்குதல்களில் இதுவரை 06 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இலட்சக் கணக்கானோர் காயப்பட்டுள்ளனர். மில்லியன் கணக்கானோர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

சிரியாவில் மக்கள் எழுச்சிப் போராட்டம் 08 வருடங்களாக நீடிப்பதற்கும் அரச படையினரின் கை ஓங்கியிருப்பதற்கும் பல்வேறு காரணங்கள் உள்ளன. குறிப்பாக ரஷ்ய வல்லரசு மற்றும் ஈரானிய ஆட்சியாளர்கள் பஷ்ஷார் அல் அஸதின் அரசுக்கு முண்டு கொடுத்து வருகின்றனர். இராணுவ ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் அஸதின் அரசாங்கத்தை வலுப்படுத்தி வரும் ஈரானும் ரஷ்யாவும் சிரியாவின் இன்றைய மனிதப் பேரவலத்திற்கு வகைகூற வேண்டும்.

2011 மார்ச் மாதம் அமைதியாகத் திரண்டெழுந்த மக்கள் மீது கொடூரமான ஆயுதங்கள் திருப்பப்பட்டன. இலட்சக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயினர். சிரியாவின் ஆளும் வர்க்கம் அலவி ஷீஆக்கள் எனப்படுகின்றனர். இவர்கள் நாட்டின் மொத்த சனத்தொகையில் வெறும் 10 வீதமே.

கடந்த 60 ஆண்டு காலமாக 10 வீதமான ஷீஆக்களே 90 வீதமான ஸுன்னி முஸ்லிம்களை அடக்கியாண்டு வருகின்றனர். இந்த அடக்கு முறையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவே அறபு வசந்தத்தில் இறங்கினர். ஆனால் அதற்கு சிரிய மக்கள் கொடுத்த விலையோ ஏனைய அறபு நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகப் பாரியதாகும். இன்று சிரியா வல்லரசுகளின் ஆடுகளமாகவும் சில பயங்கரவாத இயக்கங்களின் அமர்க்களமாகவும் திட்டமிட்டு மாற்றப்பட்டுள்ளதனால் உண்மையான சுதந்திர விடுதலைப் போராட்டத்தையும் பயங்கரவாத இயக்கங்களையும் பிரித்தறிய முடியாதளவுக்கு வல்லரசுகள் நிலைமையை சிக்கலாக்கியுள்ளன.

சிரியாவில் இன்று இடம்பெறும் மனிதப் படுகொலைகளுக்கு பொறுப்புக் கூறவேண்டியது யார் என்பதே முக்கியமான கேள்வியாகும். அஸதின் இராணுவத்திற்கெதிராக இஸ்லாமியப் போராளிகளுக்கு ஆயுதம் தருவதாக மேற்கு நாடுகள் தொடக்கத்தில் உறுதியளித்தன. ஆயினும் அந்த வாக்குறுதியிலிருந்து அவை பின்வாங்கின. அஹ்ராருஷ் ஷாம் எனப்படும் ஆயுத இயக்கமே ஸுன்னி முஸ்லிம்கள் சார்பாகப் போராடும் உண்மையான இயக்கம் எனப்படுகின்றது. சிரிய ஆதரவு நாடான ரஷ்யாவோ இவ்வியக்கத்தைப் பயங்கரவாதிகள் என்று பட்டியலிடுகின்றது.

சவூதி அரேபியா, துருக்கி, கட்டார் ஆகிய நாடுகள் அதிகாரபூர்வமாகவே அரசாங்கத்திற்கெதிரான கிளர்ச்சியை ஆதரிக்கின்றன. ஆனால் பிராந்தியத்தில் பாரசீக வல்லரசுக் கனவில் மிதக்கும் ஈரானும் அதன் கூட்டாளிகளும் அஸதுக்கு ஆதரவளிக்கின்றன. ஒரு ஷீஆ அரசாங்கத்தைப் பாதுகாத்தல் என்பதே அவற்றின் இறுதிக் குறிக்கோள். அதற்காக சிரியாவின் பெருந்தொகை மக்கள் அழிக்கப்படுவது அவற்றுக்கு ஒன்றும் பொருட்டல்ல. இந்தப் பின்னணியிலேயே லெபனானின் அரச படைக்கு வெளியில் பெரும் படைப்பலத்தோடு செயற்படும் ஹிஸ்புல்லாஹ் இயக்கம் சிரியாவில் களமிறக்கப்பட்டுள்ளது.

ஈரானின் கைக்கூலிகளான இந்த ஹிஸ்புல்லாஹ் ஷீஆ இயக்கம் இன்று சிரியாவில் ஸுன்னி முஸ்லிம்களை கூட்டாக் கொன்று குவிப்பதற்கு ஈரானால் பயன்படுத்தப்படு[illegible]

## பொஸ்பரஸ் கரையினிலே...

### துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 27

## துருக்கியின் பிரமிக்கச் செய்யும் பொருளாதார வளர்ச்சி

''2023 இல் அனைத்து வளங்களையும் கொண்ட மகத்தான துருக்கியை 'The Great Turkey' நிர்மாணிப்பதே எமது தொலைநோக்கு (Vision). அதை நோக்கி நாம் செயற்படுகின்றோம்.''

- ஜனாதிபதி ரஜப் தையிப் அர்துகான்

சமகாலத் துருக்கியின் மிகப் பெரிய பேசுபொருள் அதன் பிரமிக்கச் செய்யும் பொருளாதார வளர்ச்சியே. கடந்த தசாப்தத்தில் ஆச்சரியப்படத்தக்க அளவில் துருக்கியின் பொருளாதாரம் வேகமாக முன்னேறிவருகின்றது. 2023 இல் மகத்தான துருக்கியை நிர்மாணிக்கும் நோக்கில் AKP அரசாங்கம் காய்களைக் கவனமாக நகர்த்தி வருகின்றது. துருக்கியின் இன்றைய பொருளாதார வளர்ச்சி நிலைகளை நுணுக்கமாகப் பரிசீலிப்பதற்கு முன்னர் அதன் கடந்தகால நிலையை ஒப்பிட்டுப்பார்ப்பது பொருத்தமாகும்.

உஸ்மானியப் பேரரசின் இறுதிக் கூறுகளில் அதன் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்தது. சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத் ஓர் சிறந்த ஆட்சியாளராக விளங்கியபோதும் அவரது காலத்திலேயே நிர்வாகத் திறனற்ற அதிகாரிகளால் பேரரசின் பொருளாதாரம் நிலைதடுமாறியது. பலஸ்தீனில் குடியேறுவதற்கு அனுமதி கோரிய யூதர்கள் அவ்வாறு அனுமதிக்கும் பட்சத்தில் துருக்கியின் வெளிநாட்டுக் கடனில் பெரும் பகுதியை அடைத்து விடத் தாம் ஆதரவளிப்போம் என்று பேரம்பேசினர். யூதர்களின் அக்கோரிக்கை சுல்தான் அப்துல் ஹமீதினால் நிர்தாட்சண்யமாய் நிராகரிக்கப்பட்டது. இறுதி ஆட்சியாளர் அப்துல் மஜீதின் காலத்தில் பொருளாதாரம் முற்றாகவே வீழ்ச்சி கண்டது. 1923 இல் நடந்த பேரரசின் வீழ்ச்சிக்குப் பிந்திய தசாப்தங்களில் இராணுவமும் பொருளாதாரத்தை முறையாகக் கையாளவில்லை.

துருக்கியின் மதச்சார்பற்ற இராணுவம் எல்லை கடந்த ஊழல்களில் ஈடுபட்டது. வீண்விரயம், முறைகேடான நிதிநிர்வாகம் மற்றும் பொருளாதாரத் திட்டமிடலின்மை என்பவற்றால் துருக்கி ஐரோப்பாவின் நோயாளியாக மாறியது. உஸ்மானிய சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்து 70 ஆண்டுகளுக்குப்பின் அதிகாரத்தைக் கையேற்ற பேராசிரியர் நஜ்முத்தீன் அர்பகான் துருக்கியின் வெளிநாட்டுக் கடன்களை அடைப்பதில் ஆர்வம் காட்டினார். குறிப்பிடத்தக்களவு அம்முயற்சியில் வெற்றியும் பெற்றார். எனினும், இராணுவம் மேற்கொண்ட இரத்தம் சிந்தாப் புரட்சியின் மூலம் அர்பகான் பதவியிலிருந்து விலக நேரிட்டது. துருக்கியின் பொருளாதாரம் தொடர்ந்தும் பின்னடைந்து சென்றது. 1990 களில் லீராவின் பெறுமதி வெகுவாகக் குறைந்தது. பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளான ஜியோஜியா, உக்ரைன், ஆர்மேனியா, போலந்து என்பவற்றோடு ஒப்பிடும்போது அது மிகப்பாரிய பின்னடைவாகும்.

நாணயப் பெறுமதி இறக்கத்தினால் பணவீக்கம் அதிகரித்ததோடு வாழ்க்கைச் செலவீனம் உயர்ந்தது. அதன் சங்கிலித் தொடராக பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை மக்கள் எதிர்கொண்டனர். 2003 இல் 'நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி' அராசாங்கத்தைப் பொறுப்பேற்ற போது டொலருக்கும் லீராவுக்குமிடையிலான இடை வெளி வரலாற்றில் முன்னொரு போதும் இல்லாத அளவு வியாபித்திருந்தது. துருக்கி உலகப் பொருளாதாரத்தில் 160 ஆவது இடத்தில் இருந்தது. உலகின் மொத்த நாடுகளின் எண்ணிக்கை 193 என்பது கவனிக் கத்தக்கது. சில கிழக்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதாரத்தை விட துருக்கி முன்னணியில் இருந்ததே ஒழிய உலகப் பொருளாதாரத்தில் அதன் வீழ்ச்சி மிகப் பாரியதாக இருந்தது.

உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சி கண்டிருந்தது. அந்நியச் செலாவணி வீழ்ச்சியும் இறக்குமதிக்கான செலவீனத்தின் உயர்வும் வேலையில்லாத் திண்டாட்டமும் மக்களை வாட்டி எடுத்தன. துருக்கியின் அப்போதைய இந்நிலைமையை வர்ணித்த பொருளியல் நிபுணர்கள் அதனை மூழ்கும் பொருளாதாரம் (Submerging Economy) என்றும் உருகிக் கரையும் பொருளாதாரம் (Melting Down Economy) என்றும் வர்ணித்தனர். எனினும், AKP ஆட்சியைக் கையேற்றதன் பின்னர் துருக்கியின் பொருளாதாரம் வளர்ச்சி காணத் தொடங்கியது.

வெளிநாட்டுக் கடன்தொகையை அடைக்கும் முயற்சியில் அரசு அதிகூடிய கவனம் செலுத்தியது. 2003 இல் 3383 அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்ட தலாவீத வருமானம் 2013 இல் 14 600 அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. 2013 மே மாதம் சர்வதேச நாணய நிதியத்திற்கு துருக்கி செலுத்த வேண்டிய கடனில் இறுதித் தவணைக் கொடுப்பனவான 5 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் முழுமையாகச் செலுத்தி வெளிநாட்டுக் கடன் பழுவில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டது.

**துருக்கியப் பொருளாதாம் அடிப்படைத் தகவல்கள்:**

| | |
|---|---|
| நாணயம் | : துருக்கிய லீரா |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி GDP | : 2.249 Trillion $ (2018) |
| உலகத் தரவரிசையில் GDP | : 17 ஆவது இடம் |
| GDP வளர்ச்சி | : 6.7% (2010 - 2016) |
| GDP இல் தலாவீத வருமானம் | : 27634 $ (2018) |

**துறை சார் GDP:**

| | |
|---|---|
| விவசாயம் | : 8.6% |
| கைத்தொழில் | : 27.1% |
| சேவைத்துறை | : 64.3% |
| வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்கள் | : 2% (2017) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


• ஜுனைட் நளீமி


கடந்த 05.02.2018 அன்று வாகரைப் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட ஆலங்குளம் கிராமத்தில் முஸ்லிம் நபர் ஒருவருக்குச் சொந்தமான காணியொன்றை எவ்வித முன்னறிவித்தலுமின்றி வாகரைப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும், வாகரைப் பிரதேச சபை உத்தியோகத்தர்களும் பெகோ இயந்திரம் கொண்டு சுற்றுவேலிகளை உடைத்து அத்துமீரி கட்டிடம் ஒன்றினை அமைக்க முற்பட்டதனை அடுத்து இப் பிரதேசத்தில் திட்டமிட்ட அடிப்படையில் இனமுறுகல் நடவடிக்கை ஒன்றிற்கு தூபம் இடப்பட்டுள்ளது.

காணியின் சொந்தக்காரரான முஹம்மது அலியார் அஹமது உசைன் (70) என்பவர் கருத்து வெளியிடுகையில் கடந்த 05.02.2018 ஆம் திகதி எனது மானது போலியானது என பிழையான மூன்று காரணங்களை குறிப்பிட்டிருந்தார். அத்துடன் என்னிடம் எவ்வித விசாரணைகளும் அவர் மேற்கொள்ளாமல் அலட்சியமாக நடந்துகொண்டார் எனக் குறிப்பிட்டார்.

மேற்படி விடயம் தொடர்பில் பல்வேறு சந்தேகங்களும் இனமுருகலை தூண்டும் சம்பவங்களும் காணப்படுவ தனை அவதானிக்க முடிகின்றது.

குறித்த காணி தொடர்பில் கருத்து தெரிவிக்கும் அஹமது லெப்பை (70), மேற்படி காணி உரிமையாளர் யுத்தம் முடிவடைந்த பின்னர் தனது காணியினை அடைத்து செப்பனிட பல தடவை முயற்சி செய்தபோதும் அதிகாரிகள் தடங்களை ஏற்படுத்தி இருந்தனர். பின்னர் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் வாகரை பிரதேச காணி உத்தியோகத்தர் தலைமையிலான அதி


FORMS UNDER THE LAND DEVELOPMENT ORDINANCE



இல்லாமல் மாவட்ட செயலாளர் குறிப்பிடுவது பாதிப்படைந்த மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. புதிய மாவட்ட செயலாளர் பதவி ஏற்ற பின்னரும் இத்தகைய இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை குறித்து தீர்க்கமாக ஆராய்ந்து தீர்வுகள் எட்டப்படாமை முஸ்லிம் சமூகத் தரப்பில் நம்பிக்கையீனத்தை தோற்றுவித்துள்ளது.

காரமுனை முஸ்லிம் பூர்வீக கிராம மக்களின் மீள் குடியேற்றம் பூரணத்துவம் இல்லாத நிலையில், மதுரங்கேணி முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கான வயல் நிலங்களை இழந்து பூரணமாக மீள்குடியேற்றப்படாத நிலையில், காரமுனையில் இருந்து இடம்பெயர்ந்த தமிழர்கள் என்ற போலியான பெயர்ப் பட்டியல் ஒன்றினை குறித்த செயலகத்தினூடாக தயார்ப்படுத்தப்பட்டு வருவதாக வெளியாகும் உத்தியோகபூர்வமற்ற தகவல்

# வாகரைப்பிரதேச இனச்சுத்திகரிப்பு ஒரு அரச பயங்கரவாத நடவடிக்கை

காணியின் சுற்று வேலிகளை உடைத்து சிலர் அத்துமீறுவதாக தகவல் கிடைத்தது எனது இடத்துக்கு சென்று பார்வையிட்டபோது மேற்படி பிரதேச செயலக, மற்றும் சபை அதிகாரிகள் எனது காணியில் எவ்வித முன்னறிவித்தலுமின்றி வேலிகளை உடைத்து காணியில் அத்துமீறி வேலை செய்து கொண்டிருந்தனர்.

உடனடியாக அவ்விடம் சென்ற நான் இது எனது காணி என குறிப்பிட்டபோது, உங்களது காணியென்றால் பிரதேச செயலாளரிடம் உரிய ஆவணங்களை சமர்ப்பியுங்கள் என கூறி மிரட்டினர். எனது மருமகனிடம் உரிய ஆவணங்கள் இருந்ததனால் அவர் பணி நிமித்தம் கொழும்பு சென்றிருப்பதனாலும் இரண்டு நாள் அவகாசம் கேட்டேன். ஆனால் அவர்கள் அதனை செவிமடுப்பதாக இருக்கவில்லை. நான் பொலிசாரிடம் முறையிடு செய்த பின்னர் எவ்வித தீர்வும் இல்லாத நிலையில் தேர்தல் முடிந்த கையோடு 16.02.2018 ஆம் திகதி எனது சட்டத்தரணிகளுடன் வாகரை பிரதேச செயலாளரிடம் எனது ஆவணங்களை எடுத்து சென்றபோது எழுத்து மூல கோரிக்கை விடுக்குமாறு பணித்தார்.

மறுநாள் உரிய ஆவணங்களுடன் எழுத்துமூல கோரிக்கை விடுத்தபோது இன்று பிற்பகல் உங்களுக்கான உரிய தீர்வினை அறிவிப்பதாகக் கூறி எனது தொலைபேசி இலக்கத்தையும் பெற்றுக் கொண்டார். என்றபோதும் அன்றைய நாள் எவ்வித தகவலும் எனக்கு கிடைக்கப்பெறாத நிலையில் நான் மாகாண காணி ஆணையாளரிடம் முறைப்பாடொன்றினை செய்தேன். அவர் தொலைபேசி மூலம் காணி உத்தியோகத்தரை தொடர்புகொண்டு வேலைகளை உடனடியாக நிறுத்துமாறும் காணி அதிகாரம் பிரதேச செயலாளருக்கு இல்லையெனவும், பாதிப்படைந்த எமக்கு உரிய தீர்வினை வழங்குமாறும் கோரினார்.

மாகாண காணி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய மறுநாள் என்னை வாகரை பிரதேச செயலகத்திற்கு வருகை தருமாறு கோரிய காணி உத்தியோகத்தர் அன்று அலுவலகம் வரவில்லை என அதிகாரிகள் அங்கு சென்றதும் குறிப்பிட்டனர். காணி ஆணையாளரது வேலையை இடைநிறுத்தி விசாரணை செய்யுமாறு விடுக்கப்பட்ட கடிதத்தை கையளித்து விட்டு பொலிசாரிடம் சென்று மீண்டும் எமது முறைப்பாட்டினை குறிப்பிட்டோம். அப்போது அவர் மீண்டும் பிரதேச செயலாளரிடம் தொடர்பு கொண்டபோது எமக்கு அன்றைய தினம் எழுத்துமூலம் தீர்வினை தருவதாகக் குறிப்பிட்டார்.

ஆனாலும் அன்றும் எமக்கு எவ்வித தீர்வும் கிடைக்காத நிலையில் மறுநாள் எமது சட்டத்தரணியுடன் பிரதேச செயலாளரை சந்திக்க சென்றபோது அவர் எமக்கு பதில் அனுப்பியதாக பொய் கூறினார். நான் எதுவும் கிடைக்கவில்லை என்றவுடன் பின்னர் எனக்கான கடிதம் ஒன்றை தயாரித்து தந்தார். அவற்றில் எனக்கு வழங்கப்பட்ட காணி ஒப்ப



காரிகள் உசைன் என்பவருக்கு மேற்படி காணியினை அளந்து வழங்கி பின்னர் வேலியிடப்பட்டது.

இதற்கு முன்னரும் இக்காணிக்கு அருகில் உள்ள முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான காணியில் மேற்படி கட்டடம் அமைப்பதற்காக பொருள் பறிக்கப்பட்டு உதவி பிரதேச செயலாளரினால் காணியை விட்டு அப்புறப்படுமாறு அறிவுறுத்தலும் விடுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் காணி உரிமையாளரின் போராட்டத்தினால் அம்முயற்சி வெற்றியளிக்கவில்லை எனக் குறிபிடுகின்றார்.

தற்போது இக்காணியினை பெகோ இயந்திரம் கொண்டு கையகப்படுத்த முயற்சி செய்ய முற்பட்டபோது அயலவர்களான நாங்கள் இக்காணி தனி நபருக்குச் சொந்தமானது அதிகாரிகளே இதனை உத்தியோகபூர்வமாக அடையாளப்படுத்தி அவருக்கு வழங்கினர் எனக் குறிப்பிட்டபோது அவர்கள் அதனை அசட்டை செய்யவில்லை எனக் குறிப்பிடுகிறார். குறித்த காணியில் தேர்தலுக்கு ஓரிரு நாட்கள் இருக்கும்போதே அத்துமீறி வேலிகளை உடைத்து உடமைகளை சேதம் செய்தமை தமிழ் முஸ்லிம்கள் சமாதானமாக வாழும் இப்பகுதியில் இனமுருகலைத் தூண்டும் செயல்பாடு எனக் குறிப்பிடும் ஹயாத்து முஹம்மது ஜெய்னுதீன் (58) உண்மையில் இதுவொரு பயங்கர வாத நடவடிக்கை போன்று உள்ளது என குறிப்பிடுகின்றார்.

**பிரதேச சபைக்கான காணி எங்கு ஒதுக்கப்பட்டது**

பிரதேச சபைக்கான கடைகள் அமைக்க குறித்த காணிக்கு அண்மையில் பல ஏக்கர் அரச காணி உள்ளபோதும் ஏற்கனவே ஒரு முஸ்லிம் நபருக்குச் சொந்தமான காணியே அடையாளப்படுத்தப்பட்டு இனச்சுத்திகரிப்பு செய்வதற்காக பொலிஸ் முறைப்பாடும் அக்காணிக்கு செய்யப்பட்டிருந்தது. என்றபோதும் அம்முயற்சி தோல்வியடைய உசைன் என்பவரது காணியில் பலாத்காரமாக அத்துமீறி கட்டடம் அமைக்கும் முயற்சியில் வாகரை பிரதேச செயலக அதிகாரிகள், பிரதேச சபை செயலாளர் ஆகியோர் ஈடுபட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு இக்காணியை செம்மைப்படுத்த பிரதேச சபையில் பெகோ இயந்திரம், டெக்டர் இயந்திரம், பிரதேச சபையின் எல்லைக்குள் இக்காணிக்கு மிக அண்மையில் கிறவள் காணப்படுகின்றபோதும் சுமார் ஆறு இலட்சம் ரூபா செலவில் புதிய சபைக் கடைகள் அமையப்பெற இருக்கும் இடத்தில் தனியாருக்கு கிறவள் கொட்ட அனுமதியளித்து வேலையை அவசரப்படுத்தியது நிதிப்பிரமானங்கள் அடிப்படையிலும், நிர்வாக ரீதியிலும் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே முன்னைய காணிக்குள் கொட்டப்பட்ட கட்டடப் பொருட்கள் தொடர்பில் எவ்வித நிர்வாக நிதிப் பிரமானங்கள் பின்பற்றப்பட்டன என்ற விடயம் குறித்து ஆராய வேண்டியுள்ளது என பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை வேலியடைக்கப்பட்டு முன்னைய பிரதேச செயலாளரினால் அளிப்புச் செய்யப்பட்ட காணியினுள் பயங்கரவாதிகள் போன்று நிர்வாக நடைமுறைக்கு மாற்றமாக செயற்பட்டமை குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

**இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையில் உதவி பிரதேச செயலாளர்**

வாகரை பிரதேச செயலகப் பிரிவில் முஸ்லிம் சிங்கள மக்களுக்குச் சொந்தமான காணிகளை பலவந்தமாக கையகப்படுத்தி இனச்சுத்திகரிப்பு செய்யும் நடவடிக்கை கச்சிதமாக தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதாக பாதிப்படைந்த மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

தனக்குச் சொந்தமான 24 ஏக்கர் காணியினை விட்டும் அப்புறப்படுமாறு உதவி பிரதேச செயலாளரினால் அறிவித்தல் ஒட்டப்பட்டிருப்பதாகக் குறிப்பிடும் பொலிஸ் சேவையில் பணியாற்றி உபாதைக்குள்ளாகி ஓய்வுபெற்றுள்ள வஹாப் (46) என்பவர் தன்னிடம் காணப்படும் காணி உரித்து ஆவணங்களைக் காண்பிக்கிறார். இதுவொரு திட்டமிட்ட இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை என குறிப்பிடும் இவர், இத்தகைய நடவடிக்கை பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடிய எனக்கு அதிகார பயங்கரவாதம் மூலம் மேற்கொள்ளப்படும் பதில் தாக்குதலாக அமைகின்றது என குறிப்பிடுவதுடன், இதற்குப் பின்னால் புலம்பெயர் புலிகளினதும் அரசியல் வேடம் பூண்ட புலிகளதும் பின்னணியில் அதிகாரிகள் செயற்படுவதாக எண்ணத் தோன்றுகின்றது எனக் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை 1969 ஆம் ஆண்டு மத்திய தர வகுப்பாளர்களுக்கான காணி அனுமதி திட்டத்தின் கீழ் (எம்.சி.சி) மாங்கேணி பகுதியில் நாணயக்கார என்ற சிங்கள சகோதர இனத்தவருக்கு வழங்கப்பட்ட 30 ஏக்கர் குத்தகை காணியினை எவ்வித நிர்வாக நடைமுறையும் பேணாமல் தமிழ் சகோதர சமூகத்தை குடியமர்த்த மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சி தெளிவான இனச்சுத்திகரிப்பு முயற்சி என பாதிப்படைந்தவர்கள் கருதுகின்றனர்.

இதேபோன்று குகணேசபுரம் என யுத்தம் முடிவடைந்த பின்னர் வாகரைப் பிரதேச செயலகப் பிரிவிற்கு வெளியில் வசித்த மக்களை கொண்டு வந்து திட்டமிட்டு குடியேற்றத்தை ஏற்படுத்தியுள்ள போதும் குறித்த பகுதியில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான காணியினை அரச காணியென வழக்குத் தொடர்ந்து வன இலாகாவுக்கான காணியென முத்திரை குத்தி இனச்சுத்திகரிப்பு செய்யும் நடவடிக்கை பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஏனெனில் குறித்த முஸ்லிம் நபருக்குச் சொந்தமான காணியின் மூன்று பக்கங்களும் தமிழ் சகோதரர்கள் காணிகளை எல்லையிட்டு உள்ளனர். குறித்த காணிக்கு பத்து மீற்றர் தூரத்தில் கோவிலுக்கான காணி வழங்கப்பட்டு கோவிலும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தமிழ் சகோதரர்கள் குடியேறுவது, கோவில் கட்டுவதனையோ முஸ்லிம்கள் ஒருபோதும் எதிர்க்கவோ சட்ட சிக்கலுக்குள்ளாக்கவோ இல்லை. ஆனால் அதிகாரிகள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி இத்தகைய மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அப்பாவி தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையில் வீணான இனமுறுகலை ஏற்படுத்த வாய்ப்பாக அமைகின்றது. இவ்வாறு பல நூறு உதாரணங்களை குறிப்பிட்டு கூற முடியும்.

**மாவட்ட செயலாளரின் ஒருதலைப்பட்சமான தீர்மானம்.**

குறித்த பிரதேச சபைக்கென அத்துமீறி பிடிக்கப்பட்ட காணியினை அரச காணியென தீர்மானத்தை 2018.02.26 ஆம் திகதி எவ்வித விசாரணையும் கள் அரச அதிபரின் எதிர்கால அரசியல் பிரவேசத்துக்கான மறைமுக நிகழ்ச்சி நிரல் எனக் குறிப்பிடப்படும் கதையாடல்களுக்கு உண்மை சேர்ப்பதாக அமைந்துவிடக் கூடாது.

எனவே வாகரைப் பிரதேச முஸ்லிம்களது மீள்குடியேற்றம் தொடர்பில் பூரண விசாரணை மேற்கொள்ளப்படுவதுடன் தற்போதைய காணி அத்துமீறல்கள் தொடர்பில் பூரண விசாரணை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

**மாவட்ட முஸ்லீம் அரசியல் வாதிகளின் கையாலாகாத்தனம்**

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முஸ்லிம்களது காணிகள் தொடர்பான ஒரு தலைப்பட்சமான முடிவுகள் எட்டப்படுகின்றபோது முஸ்லிம் அரசியல் பினாமிகள் என மக்கள் கருதும் இவர்கள் கொழும்பில் அமைச்சுப் பதவிகளுக்கும், உயர் பதவிகளுக்கும் பிச்சைப் பாத்திரம் ஏந்தி நின்றமை சமூகத் துரோகமாகும் என மக்கள் கருதுகின்றனர். மாவட்டத்தில் காணப்படும் முஸ்லிம்களது காணிப் பிரச்சினையை வெறுமனே தேர்தல் கால வாக்கு வேட்டை ஆயுதமாக பயன்படுத்திக் கொண்டு நயவஞ்சக அரசியல் மேற்கொள்வது வெட்கிக்க வேண்டியுள்ளது.

குறைந்தது மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைமை, இணைத் தலைமை, எனப் பதவிகளுக்கு சண்டைபோடும் இவர்கள் முஸ்லிம், சிங்கள மக்களது மீள்குடியேற்றம், காணிப் பிரச்சினை தொடர்பில் குறைந்தது ஒரு சுயாதீன் விசாரணைக் குழுவினையாவது தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி அமைக்க முடியவில்லை என்ற கையாலாகாத்தனத்தை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

**நல்லாட்சி அரசு இனச்சுத்திகரிப்பு விடயத்தில் தீர்வைப் பெற்றுத் தருமா?**

தற்போதைய நல்லாட்சி எனக் கூறப்படும் அரசை அமைக்க முஸ்லிம்களது பங்களிப்பு அளப்பரியதே. ஆனால் மாவட்டத்தில் குறிப்பாக வாகரைப் பிரதேச செயலகப் பிரிவில் திட்டமிட்ட அதிகாரப் பயங்கரவாதத்தினால் மேற்கொள்ளப்படும் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை குறித்து விசாரணைக் குழுவாவது அமைக்கப்பட வேண்டும்.

இறுதியாக இது விடயத்தில் முஸ்லிம் சிவில் சமூகம் பலமான கட்டமைப்பினை ஏற்படுத்தி சோரம் போகாத புதிய அரசியல் தலைமைகளை உருவாக்க முனைய வேண்டும். அத்தோடு முஸ்லிம் சமூக நீதித்துறை சார்ந்தவர்கள் சட்ட ரீதியான தீர்வினைப் பெற்றுக்கொள்ள சமூக ஆர்வல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தமிழ் புத்திஜீவிகள் இது விடயத்தில் மனிதாபிமானத்துடன் தீர்மானங்களை எட்ட முயற்சிப்பது வளர்ந்து வரும் தமிழ்-முஸ்லிம் உறவினைப் பலப்படுத்த வாய்ப்பாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைக்கற்களை படிக்கற்களாக்கிய மருத்துவ சாதனையாளர்

# ஸகி லதீப்



• அனஸ் அப்பாஸ்

மருத்துவத் துறையில் மேற்கொண்ட தேசிய மற்றும் சர்வதேச சாதனைகளுக்காக எம்.டீ.எம். ஸகி லதீபுக்கு இரு தேசிய கௌரவ விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இலங்கையின் இளம் மருத்துவ கண்டுபிடிப்பாளனும், பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவ மாணவனுமான எம்.டீ.எம். ஸகி லதீப் 2018 ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஆசிய ஆயுர்வேத மருத்துவ ஆராய்ச்சி விருது வழங்கும் நிகழ்வில் இரு விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

ஆயுர்வித்யா விருது மற்றும் கீர்த்தி ஸ்ரீ தேச சக்தி ஆயுர் வித்யா பிரசாதி வித்யாபிமானி ஆகிய இரு தேசிய கௌரவ விருதுகளை மருத்துவ துறையில் மேற்கொண்ட தேசிய மற்றும் சர்வதேச சாதனைகளுக்காக 2018.02.12 ஆம் திகதி - திங்கட்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விருதுகள் வழங்கும் நிகழ்வில் இவர் விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

உலக மத தினத்தை முன்னிட்டு 32 ஆம் முறையாக இந்த நிகழ்வினை தேசிய சமாதான சங்கம் தலைமையில் பிரஜாதந்திரவாதி ஜனதா சம்மேலனய, ஜாத்தியந்தர சங்கலித வைத்திய வுர்த்தி வேதிங்கே சங்கமய, இந்தியா சர்வதேச ஆராய்ச்சி பல்கலைக்கழகம் ஆகியன ஏற்பாடு செய்திருந்தன.

குருநாகல் மாவட்டத்தின், தேதிலி அங்க, இப்பாகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த ஸகி லதீப் (M.D.M. Zacki Latheef) சர்வதேசத்தில் தனது கண்டுபிடிப்புக்கென ஓரிடத்தை தக்கவைத்துக் கொண்ட எமது நாட்டின் ஒரு இளம் கண்டுபிடிப்பாளராக மிளிர்கின்றார்.

A.L.M. ஸரூக்- S. தீனுன் தம்பதிகளின் மூத்த புதல்வர் ஸகி. இவர் திடீர் விபத்தில் 12 வயதில் தனது தாயை இழந்தவர். இவருக்கு ஒரே ஒரு சகோதரி. தாயின் இழப்பை அடுத்து, மாமி A.L.M ரஸானா (தந்தையின் சகோதரி) சிறப்பாக இவர்கள் இருவரையும் வளர்த்து வந்திருக்கின்றார்.

தற்போது 23 வயதை தொட்டுள்ள இவர், தனது மருத்துவ புத்தாக்க முயற்சியை தனது பதினாறாவது வயதில் தனது உயர்தர வகுப்பிற்கான தனிச் செயற்றிட்ட முயற்சியாக ஆரம்பித்தார். தனது கல்வியினை க.பொ.த சாதாரண தரம் வரை மடிகே முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும், உயர் தரத்தினை பரகஹதெனிய தேசிய பாடசாலையிலும், தற்போது College of health science தனியாள் மருத்துவ நிறுவனமொன்றில் பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவ மாணவனாகவும் கல்வி பயின்று வருகின்றார்.

சரும நோய்களுக்கான நிவாரண பசையை (Arogya Total herbal Skin Paste) இவர் கண்டுபிடித்துள்ளார். இது சித்த, யூனானி மற்றும் ஆயுர்வேத மருத்துவக் கலவை ஆகும். விட்டு விட்டுத் தாக்கும் அல்லது சதா தாக்கும் சரும நோய்களுக்கான சோரியாசிஸ், எக்ஸிமா, முகப்பரு, சொறி சிரங்கு, கால் வெடிப்பு, தழும்புகள் முதலான சகல சரும நோய்களை குறைந்த காலப்பகுதியில் பக்க விளைவுகளின்றி பூரணமாகக் குணப்படுத்தும் ஒரு பசை இது. இது தவிரவும் பரீட்சார்த்த நடவடிக்கையில் சில தயாரிப்புக்கள் இருப்பதாகவும் இவர் கூறுகின்றார்.

எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக அல்லது விஞ்ஞானியாக வரவேண்டும் என்று சிறு வயதிலேயே இலட்சியத்தை தன்னுள் விதைத்தவர் ஸகி. துரதிஷ்டவசமாக உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவுக்கு தகுதி பெறாததால் வணிகப் பிரிவில் பயின்றார். உயர்தர தனி நபர் செயற்றிட்டம் (Individual Project) இற்கு ஆயுர்வேத தயாரிப்பொன்றை உருவாக்கி வணிகமயப்படுத்த ஆசைப்பட்டார் இவர். அதுவரை அவர் தேடிக் கற்ற மூலிகை தொடர்பான அறிவும் இதற்கு உறுதுணையாக அமையவே, சமூகத்தின் தேவையாக இருந்த சரும நோய்க்கான நிவாரணத்தை தனக்குரிய மருத்துவ சூத்திர தூண்டல் கருவியாக்கினார்.

இது வெறும் செயற்றிட்ட புள்ளிகளுக்கப்பால் பதிப்புரிமை பெற்று, மருத்துவ ஆராய்ச்சிக்கு உட்பட வேண்டிய பொக்கிஷம் என்பதை உணர்ந்து, பொறுப்புணர்வுடன் அவரது உயர்தர ஆசிரியர்கள் காட்டிய வழிகாட்டலே இன்று ஒரு இலட்சியவாதியின் கனவை நனவாக்கி இருக்கின்றது.



இவரது கண்டுபிடிப்புக்குக் கிடைத்த அங்கீகாரங்கள்

1. மருத்துவ ஆராய்ச்சி அறிக்கை, தேசிய உள்நாட்டு மருத்துவ நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம், ராஜகிரிய.

2. ITI பரிசோதனை அறிக்கை, இண்டஸ்ட்ரியல் டெக்னோலொஜி இன்ஸ்டிடியூட்

3. ஆயுர்வேத மருந்து தயாரிப்பக அனுமதிச் சான்றிதழ், ஆயுர்வேத திணைக்களம், இலங்கை

4. ஆராய்ச்சி அனுமதிப் பத்திரம், பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகம், நாவின்ன, மகரகம

5. ஏழு வைத்தியர்களின் சிபாரிசு மற்றும் பரிசோதனை சான்றிதழ்கள் (ஐந்துமாவட்டங்கள்)

6. காப்புரிமை சான்றிதழ் (Patent Certificate), தேசிய புலமைச் சொத்து அலுவலகம், இலங்கை.

7. 'சஹஸக் நிமவும்' சான்றிதழ், தேசிய புத்தாக்குனர் கண்காட்சி-2013

8. சிறந்த கண்டுபிடிப்பாளர் விருது- 2014, இப்பாகமுவ கல்வி வலயம், கல்வித் திணைக்களம்

9. சர்வதேச முதலீடு மற்றும் விருது - 2014

10. 2014 இல்- ஸகி ஹெர்பல் (Zacky Herbal products (pvt) Ltd) நிறுவன உருவாக்கம்

11. சர்வதேசஆசிய ஆயுர்வேத மருத்துவ ஆராய்ச்சி விருது- 2016, ஆயுர் வித்யாகீர்த்தி சர்வதேச ஆராய்ச்சி பல்கலைக்கழகம், இந்தியா

12. கீர்த்தி ஸ்ரீ தேசஷக்தி ஆயுர் வித்யா கீர்த்தி தேசிய கௌரவ விருது - 2016, தேசிய சமாதான சங்கம், Intergrated Medical Practisioners Association.

13. ஆயுர்வேத Expo சான்றிதழ்- 2016

14. 2018 ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஆசிய ஆயுர்வேத மருத்துவ ஆராய்ச்சி விருது வழங்கும் நிகழ்வில் இரு விருதுகள்

எல்லாம் வல்ல இறைவனுக்கும், அடுத்து தந்தை, சகோதரி, மாமி, உறவினர்கள், ஆசிரியைகளான பரீஹா, ரிம்சியா ஆகியோருக்கும், பேராசிரியர் ரனவீர, கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக் குழுவின் ஆணையாளர், அதன் உறுப்பினர்கள், நிதி அனுசரணையாளர்கள், பங்குதாரர்கள், ஊடகவியலாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றார் Dr. A.P.J. அப்துல் கலாமை தனக்கான இலட்சியவாத முன்மாதிரியாக கொண்டிருக்கும் ஸகி.

சாதாரண தரம் முதல் உயர்தரம் வரை பாடசாலையில் இருந்த அமைப்புக்களில் தலைவர் அல்லது நிர்வாக உறுப்பினராக இருந்து சேவையாற்றியதில் பாடசாலை சமூகத்தில் நன்மதிப்பை வென்றிருந்தார் ஸகி. இருந்தாலும், ஊரில் சில நண்பர்களின் பொறாமை எனும் வலைக்குள் தான் சிக்கியதில் உடல், உள தாக்கங்களால் சிகிச்சைக்கும் உட்பட்டார். குணம் பெற்றதும் இதற்காகவே சாதிக்க வேண்டும் என்ற வெறி அவரைத் தூண்டியது என்கிறார் அவர்.

தனக்கான அங்கீகாரமாகவும், தேசிய பொருளாதார பங்குதாரராக எண்ணியதாலும், "சரும நோயற்ற இலங்கை" எனும் கனவும் ஒரு தனியார் கம்பெனியாக தனது மருத்துவ தயாரிப்பை சந்தைப்படுத்தும் வாய்ப்பை அவருக்கு பெற்றுக்கொடுத்துள்ளது. இது வெறும் மருத்துவப் பசை அல்ல, அவரது நீண்ட கால மருத்துவப் பசி!

0722 227000 (ஸகி லதீப்)

---

# தலாக்கை வேண்டி நிற்கும் மத்ஹபுகள்



• ஸலாஹுதீன்

முஸ்லிம் தனியார் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை முன்மொழிவதற்கான குழு(க்கள்) த(த்த)மது அறிக்கைகளை முன்வைத்துள்ளனர். இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்தின் அடிப்படையில் இது ஒரு அங்கீகரிக்கப்பட்ட அறிக்கையாக ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. ஏனெனில், குழுவினரில் சரிபாதிப் பேர் அறிக்கையை மறுத்திருக்கிறார்கள் அல்லது ஏற்றிருக்கிறார்கள். இங்கு எந்தத் தரப்பினதும் பெரும்பான்மையைப் பெற்றெடுப்பது சாத்தியமாகவில்லை.

பெரும்பான்மையினரின் ஒப்புதலுடன் கைச்சாத்தானதாக முன்னர் சொல்லப்பட்ட அறிக்கையில், சிப்லி அஸீஸ் PC, பாயிஸ் முஸ்தபா PC, முன்னாள் நீதிபதி அப்துஸ் ஸலாம், நீதிபதி மக்கி மொஹமட், சட்டத்தரணி பஸ்லத் சஹாப்தீன், அஷ். ரிஸ்வி முப்தி, அஷ். முபாரக் மதனி, கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, சட்டத்தரணி நத்வி பஹாஉதீன் ஆகியோர் அடங்குகின்றனர்.

மறுபுறத்தில் முன்னாள் நீதியரசர் ஸலீம் மர்சூப் (குழுவின் தலைவர்), தில்ஹார அமரசிங்ஹ (செயலாளர்), சுகந்த கம்லத் PC., தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில், பேராசிரியர் ஷாரியா செருங்கோவில், பளீழா பீ ஜுரன்பதி, ரஸ்மாரா ஆப்தீன், சபானா குல் பேகம், ஷர்மீளா ரஸூல் ஆகியோர் அடங்குகின்றனர்.

முஸ்லிம் தனியார் சட்டத்திலும் காதிகள் நடைமுறையிலும் கொண்டுவரப்பட வேண்டிய சீர்திருத்தங்களை முன்வைப்பதற்காக இந்தக் குழுவினர் 2009 ஆம் ஆண்டு முதல் கடந்த 09 வருடங்களாக அமர்ந்து அறிக்கை தயாரித்து ஈற்றில் ஒரு கருத்துக்கு வர முடியாமல் இரண்டு தரப்புகளாகப் பிரிந்து இரண்டு அறிக்கைகளை நீதி அமைச்சர் தலதா அதுகோரலவிடம் முன்வைத்துள்ளனர்.

முஸ்லிம்களின் விவகாரத்தில் முஸ்லிம்களே ஒரு கருத்தில் இல்லை என்பதனை இது நாட்டுக்கு உணர்த்தியிருக்கிறது.

குறித்த அறிக்கையில் இரண்டு தரப்பும் இணங்காத பல விடயங்கள் இருக்கின்றன. அவற்றில் முஸ்லிம் தனியார் சட்டத்தின் 16 ஆவது ஷரத்தில் உள்ள திருமணமோ, மணமுறிவோ தத்தமது மத்ஹபுகளின் (Sect) அடிப்படையிலேயே அமைய வேண்டும் எனும் பகுதியில் இரண்டு தரப்புக்கும் இடையில் இணக்கப்பாடின்மைகள் காணப்படுகின்றன. நீதியரசர் ஸலீம் மர்சூப் சார்பான குழுவினருடைய நிலைப்பாட்டில் அல்லாஹ்தஆலாவுடைய ஏற்பாட்டில் பிரிந்து செயற்படுவதனை விட சேர்த்து வைப்பதில் தான் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே மத்ஹபுகளாகப் பிரித்து நோக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தை முன்வைக்கின்றனர்.

திருமணம், மணமுறிவு மட்டுமன்றி மார்க்கத்தின் ஏனைய விவகாரங்களும் மத்ஹபுகளுக்கு அப்பாற்பட்டு நோக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கருத்துக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கருத்துக்குச் சார்பாக அவர்கள், பெண்களைத் தொட்டால் வுளு முறியும் என்று ஷாபி மத்ஹப் சொல்லும் சட்டத்தை ஹஜ்ஜின் போது இலகுபடுத்துவதற்காக ஹனபி மத்ஹபின்படி தீர்ப்பளிப்பதை உதாரணமாகச் சொல்கின்றனர். ஆகவே சட்டத்தை மத்ஹபுகளின் அடிப்படையில் இறுக்கி வைப்பதைவிட மக்களுக்கு இலகுவான முறையில் வளைந்து கொடுக்கும் வகையில் மத்ஹபுகளுடைய வரையறைகளைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்ற கருத்தில் அவர்கள் உ[illegible]

இலங்கையின் முஸ்லிம் தனியார் சட்டம் ஷாபி மத்ஹபை அடிப்படையாக வைத்தே வரையப்பட்டுள்ளது. இதனுடைய 16 ஆவது ஷரத்தின்படி திருமணம் முடிக்கின்ற இருவருமே ஒரே மத்ஹபாக இருந்தால் தான் அவர்களுடைய திருமணம் குறித்த மத்ஹபின் அடிப்படையில் செல்லுபடியாகும். கணவன் ஷாபியாக இருந்து மனைவி ஹனபியாக இருந்தால் அல்லது மாறி நடந்தால், வேறு வேறு மத்ஹபுகளுக்கிடையில் நடைபெறும் திருமணம் செல்லுபடியாகாது என்றொரு வாதத்தையும் ஸலீம் மர்சூப் தலைமையிலான குழுவினர் முன்வைக்கின்றனர். எனவே ஒரு மத்ஹபையும் சார்ந்து நிற்க வேண்டிய அவசியம் இன்றி, மொத்தமான இஸ்லாமிய ஷரீஅத்தில் நின்று இஸ்லாத்தின் விவாக, விவாகரத்துச் சட்டம் கையாளப்பட வேண்டும் என்று இவர்கள் கருதுகின்றனர்.

ஆகவே மார்க்க ரீதியான ஒரு சட்டம் அணுகப்படும் போது, மத்ஹபுகளின் கண்ணோட்டத்தில் நோக்குவதை விட குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் போன்ற இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களின் அடிப்படையில் இஜ்திஹாத் செய்து தீர்வுகள் பெறப்படுவது தான் முறையானது. இஜ்திஹாதின் வாயில் இன்னும் மூடப்படவில்லை. ஆகவே [illegible]

மண்ணில் திறந்து விட வேண்டும் என நீதியரசர் ஸலீம் மர்சூப் சார்பான குழுவினர் கருதுகின்றனர். இதனால் சட்டத்தில் வருகின்ற Sect என்ற பதம் நீக்கப்பட வேண்டும் என அவர்களது தரப்பு அறிக்கையில் சுட்டிக் காட்டுகின்றனர்.

குறித்த குழுவினர் முன்வைக்கின்ற வாதங்களில் இஸ்லாம் பிரிவினையை ஏற்படுத்தவில்லை என மத்ஹபுகளுடைய கருத்து வேறுபாட்டை பிரிவினையாகச் சுட்டுவது ஏற்கத்தக்கதல்ல. கருத்து வேறுபாடுகளைப் பிரிவினைகளாக நோக்கியதனால் சமூகம் பிளவுபட்டுப் போயிருப்பது யாருக்கும் தெரியாததுமல்ல. எனவே கருத்து வேறுபாடுகளை பிரிவுகளாகவன்றி இணைக்கின்ற பாலமாக நோக்குவது பிரச்சினைகள் வளராமல் செய்வதற்கான வழியாக அமைய முடியும்.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் வருகின்ற Sect என்ற இந்த மத்ஹபுகள் விடயத்தில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சார்ந்த தரப்பினர் விட்டுக் கொடுக்க முடியாத ஒரு நிலைப்பாட்டில் இருப்பதாகத் தெரிகிறது. Sect என்பதை நீக்கினால் அது ஷீஆக்கள் போன்ற பிரிவினரையும் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்துக்குள்ளால் உள்ளீர்த்து விடும் என்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

குறித்த மணவாளனின் அல்லது மங்கையின் மத்ஹப் என்ற பொருள் கோடலை எடுத்து விட்டால் அந்த இடத்தில் ஷீஆ அல்லது ஸுன்னி பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றே பொருள் கோடல் செய்யப்படுவதற்கு வாய்ப்பிருப்பதாகவும் அவர்கள் கருதுகின்றனர். இதனூடாக ஷீஆ என்ற பிரிவினரும் முஸ்லிம் தனியார் சட்டத்துக்குள்ளால் கொண்டுவரப்படக் கூடிய அபாயத்தினை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஷாபிஈ மத்ஹபுதான் இலங்கையின் சட்டபூர்வமான மத்ஹபாக இருக்க வேண்டும் என்பது தான் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவுடைய எதிர்பார்ப்பு. இதற்கு அப்பால் எந்தக் கருத்துக்களும் வர முடியாது என்பது அவர்களது தர்க்கமாக உள்ளது. இருந்த போதிலும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவில் அங்கத்துவம் வகிக்கும் பலரும், அதனுடைய நிர்வாகக் குழுவில் உள்ள சிலரும் மத்ஹபுகளுக்கு அப்பால் நின்று செயற்படக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

இங்கு தமக்குள்ளேயே ஒரு மத்ஹப் சார்ந்து நின்று செயற்பட முடியாது என்பதற்கு உலமா சபையே நாட்டுக்கான முன்னுதாரணமாக இருக்கின்றது. பல்வேறு கருத்துள்ளவர்களும் தம்முடன் இணைந்து செயற்படுகின்றார்கள் என்று ஜம்மியதுல் உலமாவே இதனைப் பெருமையாகவும் சொல்லிக் கொள்கின்றது. இந்த நிலையில் முஸ்லிம் தனியார் சட்டத்தில் மாத்திரம் அது விடாப்பிடியாக மத்ஹபுகளைத் தூக்கிப் பிடிப்பது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

முஸ்லிம் தனியார் சட்டம் 1956 முதல் நமது முன்னோடிகளால் உருவாக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்ற ஒரு சட்டம். இது அவர்களால் ஆழமாக ஆராயப்பட்டே முன்வைக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டிருக்கிறது. இதில் நாங்கள் கை வைக்கக் கூடாது. அப்படிக் கைவைத்தால் படிப்படியாக அது திரிபடைந்து நம்மை விட்டுக் கைநழுவி விடவும் முடியும் என்றொரு நியாயம் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா தரப்பினரால் முன்வைக்கப்படுகிறது.

முஸ்லிம் பெண்ணிலைவாதிகளதும் முஸ்லிமல்லாத தரப்பினரதும் உள்நாட்டு, வெளிநாட்டு அழுத்தங்களையும் பார்க்கும் போது, கற்பிக்கப்படுகின்ற இந்த நியாயத்தை மறுப்பதற்குமில்லை.

(பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஸித் தேடல்கள் (9)

# சூழலைப் பாதுகாத்தல்

## இஸ்லாமிய ஷரீஆவின் மகாஸிதுகளில் ஒன்று



ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்

ஐக்கிய நாடுகள் சபையின் சூழல் பாதுகாப்பு பற்றிய முதலாவது மாநாடு, 1972 ம் ஆண்டு, சுவீடன் நாட்டின் ஸ்டாக் ஹோம் நகரில் நடைபெற்றது முதல் உலகில் சூழல் பற்றிய கரிசனை பெரிய முக்கியத்துவத்தைப் பெற்று வருகிறது. அதனைத் தொடர்ந்து இது தொடர்பில் உலகளவில் பல்வேறு மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு 1992 ஆம் ஆண்டு பிரேஸிலில் நடைபெற்ற பூமி உச்சி மாநாடு. இதில் சுமார் 178 நாடுகள் பங்கு கொண்டு சுற்றுச் சூழல் மற்றும் அபிவிருத்திக்கான ரியோ பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சூழல் பாதுகாப்பு குறித்து இன்றைய உலகின் கவனம் இந்தளவு குவிக்கப்படுவதற்குக் காரணம், மனிதனே தனது கரங்களால் தான் வாழும் பூமியை நாசம் செய்து கொண்டமை என்பது தெளிவானது.

அல்குர்ஆன் கூறுகிறது, ''மனிதர்கள் தமது கரங்களாலேயே செய்து கொண்ட அநியாயங்களால் கடலிலும் தரையிலும் நாசம் ஏற்பட்டுவிட்டது, அவர்கள் தாம் செய்தவற்றின் பிரதிபலனை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக, சில சமயம் அவர்கள் தமது சுயநிலைக்கு மீண்டு வருவார்கள்'' (ரூம்-41).

இந்த வசனம் மனித நடத்தைகளில் ஏற்படும் சீர்குலைவுகளை மாத்திரமன்றி பௌதிக சூழலில் ஏற்படும் பாதிப்புகளையும் இணைத்தே பேசுகிறது. ஏனெனில் இமாரதுல் அர்ழ் எனும் பூமியை அபிவிருத்தி செய்தல், மனிதனது அடிப்படைப் பணி. அந்தப் பணியில் நடைபெறும் அத்துமீறல்கள், தவறுகள் என்பன பூமியில் மனித வாழ்வை நிச்சயமற்றதாக்கிவிடவல்லன. அத்தகைய ஒரு அத்துமீறல்தான் தற்போது நடைபெற்றுள்ளது. எனவே மனிதன் மீண்டும் சுயநிலைக்கு திரும்பும் வகையில் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறான்.

கலாநிதி அப்துல் மஜீத் நஜ்ஜார் அவர்கள் குறிப்பிடுவது போல்[1] அடிப்படையில் இஸ்லாமிய போதனைகள் அனைத்தும் சூழலைப் பாதுகாக்கும் பணியை மனிதனுக்கு வெகுவாக வலியுறுத்துகின்றன. அதனை ஷரீஆவின் மகாஸிதுகளில் ஒன்றாகவே முன்வைக்கின்றது. ஆனாலும் ஆரம்ப கால மகாஸித் அறிஞர்களது கவனத்திற்கு அது பெரிதும் வரவில்லை. காரணம் இன்று போல் அன்று சூழலுக்கு பெரியளவு பாதிப்பு நிகழ்ந்திருக்கவில்லை.

அந்த பெரிய பூமிக்கு இந்தச் சிறிய மனிதன் பெரிதாக என்ன பாதிப்பை ஏற்படுத்தி விடப் போகிறான்? என்று சிந்தித்திருப்பார்கள். ஆனால் பூமியில் மனித வாழ்வே பாதிக்கப்படும் அளவுக்கு சூழலில் பாதிப்பு ஏற்பட்டு வருவது நவீன காலத்தின் அவதானம் என்ற வகையில் இதன் ஷரீஆ முக்கியத்துவம் அன்றைய நாளை விடவும் இன்றுதான் மிகவும் முக்கியம் பெறுகிறது.

எனவே சூழலைப் பாதுகாத்தல் என்பது இஸ்லாமிய ஷரீஆவின் முக்கிய மகாஸிதுகளில் ஒன்று என்ற கருத்தை நவீன அறிஞர்கள் முன்வைத்திருக்கிறார்கள். அது குறித்த ஒரு எளிமையான விளக்கத்தை முன்வைப்பதே இந்தப் பத்தியின் நோக்கம்.

### சூழல் என்பதன் பொருள்[2]

சூழல் என்பது, எளிமையாகச் சொன்னால் - மனிதன் வாழ்வதற்குரிய இடத்தைக் குறிக்கிறது. அது காடுகள், மலைகள், மரம் செடி கொடிகள், காற்று, நீர், வானம், பறவைகள், மிருகங்கள் போன்ற இயற்கைச் சூழலையும் உள்ளடக்கியிருக்கிறது. மனிதனால் உருவாக்கப்படும் கட்டடங்கள், வீதிகள், தோட்டங்கள், நீர்நிலைகள் போன்றனவற்றையும் உள்ளடக்கியிருக்கிறது. அதுபோல் உயிருள்ளவற்றையும் உயிரற்றவற்றையும் உள்ளடக்கியிருக்கிறது.

மனிதனைச் சூழ்ந்திருக்கும் இந்த ஒவ்வொன்றும் மனிதனில் நேர்மைய தாக்கத்தையும் எதிர்மைய தாக்கத்தையும் ஏற்படுத்தக் கூடியன. மனிதனில் மாத்திரமன்றி இவை ஒவ்வொன்றும் பிறவற்றில் தாக்கம் செலுத்தக் கூடியதாகவே அல்லாஹ் படைத்திருக்கிறான். அந்த வகையில் சூழல் என்பது இவை ஒவ்வொன்றினதும் நேர் எதிர் தாக்கங்களின் வலையமைப்பு. அது மனித வாழ்வில் நன்மை தீமை, முன்னேற்றம் பின்னடைவு, எழுச்சி வீழ்ச்சி, நோய் ஆரோக்கியம் போன்ற எல்லா வகையான தாக்கங்களையும் விளைவிக்கும்.

மேற்சொன்ன விளக்கத்திலிருந்து நாம் புரிந்து கொள்வது, எம்மைச் சுற்றியிருக்கும் அல்லாஹ்வின் படைப்புக்களும் மனிதனின் உருவாக்கங்களும் மாத்திரமன்றி அவை ஏற்படுத்தும் தாக்கங்களையும் இணைத்துத்தான் சூழல் என்ற சொல் பொருள் கொள்ளப்படுகிறது.

### பாதுகாப்பு என்பதன் பொருள்[3]

இமாம் ஷாதிபி அவர்கள், மார்க்கத்தைப் பாதுகாத்தல், உயிரைப் பாதுகாத்தல், அறிவைப் பாதுகாத்தல், பரம்பரையைப் பாதுகாத்தல், செல்வத்தைப் பாதுகாத்தல் என்ற ஷரீஆவின் அத்தியவசிய ஐந்து மகாஸிதுகள் பற்றிப் பேசும் பொழுது, பாதுகாத்தல் என்பதன் பொருள் என்ன என்பது பற்றியும் விளக்குகிறார்.

பாதுகாத்தல் என்பது இரண்டு வகையில் நிகழ முடியும். முதலாவது, நேர்மையப் பக்கம். அதனை வளர்ச்சியடையச் செய்தல். அதாவது அதன் அடிப்படைகளைப் பலப்படுத்தி அதனை அபிவிருத்தி செய்தல். இரண்டாவது, எதிர்மையப் பக்கம். அதனை அழிவுகளில் இருந்து பாதுகாத்தல், அதாவது அதற்கு ஏற்படக் கூடிய அல்லது ஏற்படும் என்று எதிர்பார்க்கக் கூடிய பாதிப்புக்களிலிருந்து பாதுகாத்தல்.

அந்தவகையில் பாதுகாத்தல் என்பது, ஒரு விடயத்திற்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளைத் தவிர்த்தல் என்பது மாத்திரமன்றி குறித்து விடயத்தை உரிய முறையில் வளர்ச்சியடையச் செய்தல் என்பதும் உள்ளடங்குகிறது என்பதைப் புரியலாம்.

### சூழல் பாதுகாப்பு ஒரு மக்ஸத்

சூழல் பாதுகாப்பு, இஸ்லாமிய ஷரீஆ,வின் மகாஸிதுகளில் ஒன்று என்பது, ஏலவே குறிப்பிடப்பட்டது போல், அல்குர்ஆனிலும் சுன்னாவிலும் இவ்விடயம் மிகுந்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஏனெனில் இஸ்லாம் மனித வாழ்வை சூழலுடன் இணைத்துத்தான் நோக்கியிருக்கிறது. சூழலைத் தவிர்த்து மனித வாழ்வு தனித்துப் பயணிக்க முடியாது. உலகில் மனித வாழ்வு நிலைத்திருக்க வேண்டும் எனின் சூழலும் நிலைத்திருக்க வேண்டியது கட்டாயமாகிறது. அந்தவகையில் மனித வாழ்வின் இருப்புக்காக உலகில் பாதுகாக்கப்பட வேண்டிய அம்சங்களை இஸ்லாம் அதன் இயல்பான ஓட்டத்திலேயே பேசிச் சென்றிருக்கிறது. சூழல் பாதுகாப்பும் அதில் ஒன்று.

சூழல் பாதுகாப்பு என்பது ஷரீஆ,வின் மகாஸிதுகளில் ஒன்று என்பது எவ்வாறு வலியுறுத்தப்படுகிறது என்பதை பின்வரும் நான்கு அடிப்படைகள் மீது நின்று விளக்கலாம் என்று நினைக்கிறேன்.

**1. சூழல் அல்லாஹ்வை வணங்குகிறது:**

இது அல்குர்ஆனும் ஸுன்னாவும் முன்வைக்கின்ற ஒரு அடிப்படையான சிந்தனை. வானங்கள் பூமியில் உள்ள அனைத்தும் அல்லாஹ்வுக்கு சுஜூது செய்வதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. ''அல்லாஹ் படைத்துள்ளவற்றை அவர்கள் பார்க்கவில்லையா? அவற்றின் நிழல்கள் வலமும் இடமும் சாய்ந்து, அல்லாஹ்வுக்கு சுஜூது செய்து, அடிபணிகின்றன. வானங்கள் பூமியிலுள்ள அனைத்து ஜீவராசிகளும் மலக்குகளும் அல்லாஹ்வுக்கு சுஜூது செய்கின்றன, அவர்கள் பெருமையடிப்பதில்லை'' (நஹ்ல் - 48,49).

மனிதர்களைப் போல் அனைத்துப் படைப்புக்களும் அல்லாஹ்வுக்கு தஸ்பீஹ் செய்வதாகவும் அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. ''வானங்கள் பூமியில் உள்ள அனைத்தும் அல்லாஹ்வுக்கு தஸ்பீஹ் செய்கின்றன, அவன் அறிந்தவன், கண்ணியமானவன்'' (ஹஷ்ர் 01).

இந்த வசனங்கள் சூழலுக்கும் படைப்பாளனுக்கும் உள்ள உறவை விளங்கப்படுத்துகிறது. சூழலும் அல்லாஹ்வை வணங்குகிறது. ஆனால் அந்த வணக்கம் எவ்வாறு அமைகிறது என்பதைத்தான் மனிதனால் உணர்ந்து கொள்ள முடியாதிருக்கிறது. மனிதனும் சூழலும் அல்லாஹ்வின் படைப்புக்கள் என்றவகையில் ஒன்றுபடுவது மாத்திரமன்றி, அல்லாஹ்வை வணங்குவதிலும் ஒன்றுபடுகிறார்கள். அந்தவகையில் மனிதனுக்கும் சூழலுக்கும் இடையில் ஒரு நட்புறவே கட்டியெழுப்பப்படுகிறது. சூழல் மனிதனின் எதிரியல்ல, நண்பன். அதனால் சூழலை வளப்படுத்துவதும் பாதுகாப்பதும் மனிதனது கடமையாகிறது.

**2. சூழல் மனித நலனுக்காகவே அமைக்கப்பட்டிருக்கிறது:**

இந்த சூழல் மனித நலனுக்காகவும் அவனது தேவைகளை நிறைவு செய்யும் வகையிலேயே படைக்கப்பட்டிருக்கிறது என்பது, அல்குர்ஆன் சூழல் குறித்து முன்வைக்கும் மற்றொரு முக்கிய சிந்தனையாகும்[4]. அல்குர்ஆன் கூறுகிறது, ''உங்களுக்கு பூமியில் அதிகாரத்தைத் தந்தோம், அதில் உங்களுக்கு வாழ்வதற்கான எல்லா வழிவகைகளையும் செய்தோம், நீங்கள் குறைவாகவே நன்றி தெரிவிக்கிறீர்கள்'' (அஃராப் - 10).

மற்றோர் இடத்தில் வருகிறது ''நீங்கள் விரும்பியவாறு வளைந்து கொடுக்கும் வகையில் பூமியை நாங்கள்தான் வடிவமைத்தோம், அதன் பல்திசைகளிலும் பரந்து சென்று அல்லாஹ்வின் ரிஸ்க்கைப் பெற்றுக் கொள்ளுங்கள், இறுதியில் அவனிடமே மீண்டு வர வேண்டும்'' (முல்க் - 15).

மனிதன் வாழும் சூழல், மனிதன் பயன்படும் வகையில்தான் அல்லாஹ்வால் அமைக்கப்பட்டிருக்கிறது. மனிதனது தேவைகளை நிவர்த்திக்கும் வகையிலேயே காணப்படுகிறது. இதனால்தான் பூமி மனிதனுக்கு வசப்படுத்தித் தரப்பட்டுள்ளது என்று அல்குர்ஆன் கூறுகிறது. இதுதான் பூமிக்கும் மனிதனுக்கும் இடையிலான பிரதானமான தொடர்பு வடிவம். இதனால்தான் பூமியை வளப்படுத்துதல் அல்லது அபிவிருத்தி செய்தல் என்பது மனிதனது பிரதான பணிகளுள் ஒன்றாக அமைகிறது.

அல்குர்ஆன் கூறுகிறது, ''அவன் தான் உங்களை பூமியில் இருந்து படைத்து அதனை வளப்படுத்துமாறு கேட்டுக் கொண்டான்'' (ஹூத் - 61).

இமாரதுல் அர்ழ் என்று அல்குர்ஆன் குறிப்பிட்ட, பூமியை அபிவிருத்தி செய்தல் எனும் சிந்தனை, சூழலைப் பாதுகாத்தல் எனும் கருத்தில் பிரதான ஒரு இடத்தைப் பெறுகிறது. ஏனெனில் ஏலவே குறிப்பிடப்பட்டது போல் சூழல் பாதுகாப்பு என்பது வெறுமனே பாதிப்புகளில் இருந்து பாதுகாத்தலை மாத்திரம் குறிக்க மாட்டாது. மாற்றமாக சூழலை அபிவிருத்தி செய்தலையும் உள்ளடக்கியிருக்கிறது. அந்தவகையில் மனிதப் படைப்பின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக காணப்படும் இமாரதுல் அர்ழ் சிந்தனை, சூழல் பாதுகாப்புக் குறித்த சார்பு சிந்தனையை வலியுறுத்துகிறது.

இந்தப் பின்புலத்தில்தான் நபியவர்கள் மரம் நடுதலையும் விவசாய அபிவிருத்தியையும் முக்கியமாய்ப் பேசியிருக்கிறார்கள். உதாரணமாக ''ஒரு முஸ்லிம் ஒரு பயிரை நாட்டுகிறான், அதிலிருந்து யாரேனும் சாப்பிட்டாலும் சரி, திருடினாலும் சரி, ஒரு பறவையோ மிருகமோ சாப்பிட்டாலும் சரி, யாரேனும் அதிலிருந்து எடுத்துக் கொண்டாலும் சரி அனைத்துமே அவனுக்கு ஸதகாவாக அமைந்து விடும்'' என்றார்கள் (முஸ்லிம்).

அது போல் மற்றொரு தடவை, ''தரிசு நிலம் ஒன்றை யார் அபிவிருத்தி செய்கிறாரோ அது அவருக்கே சொந்தமாகும்'' என்றார்கள் (திர்மிதி). இங்கு சூழல் அபிவிருத்தியை நபியவர்கள் தூண்டியிருப்பதைக் காணலாம்.

**3. சூழல் ஒரு சமநிலை வலையமைப்பில் கட்டப்பட்டிருக்கிறது:**

இந்தச் சூழலின் ஒவ்வொரு உறுப்பும், ஒன்று மற்றொன்றுடன் இயைந்து செல்லக் கூடியதாகவும் ஒன்று மற்றொன்றை முழுமைப்படுத்தக் கூடியதாகவும் பரஸ்பரம் ஒத்துழைக்கக் கூடியதாகவுமே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இது அனைவரும் அறிந்திருக்கக் கூடிய ஒரு எளிய உண்மை.

அதுபோல் சூழலின் ஒவ்வொரு உறுப்பும் அதற்கேயுரிய பருமனும் அளவும் வேகமும் கொண்டதாகவே காணப்படுகிறது. உரிய அளவை விடவும் அதிகரிக்கவோ குறையவோ மாட்டாது. அவ்வாறு நடைபெறும் எனின் அது மனித வாழ்வின் அழிவுக்கே காரணமாக அமைந்து விடும். இதுவும் அல்குர்ஆன் சூழல் குறித்து முன்வைக்கும் மற்றொரு அடிப்படையான உண்மை.

அல்குர்ஆன் கூறுகிறது, ''பூமியை நாம் விரித்து வைத்திருக்கிறோம், அதில் மலைகளை அமைத்திருக்கிறோம், அதில் ஒவ்வொன்றையும் சமநிலையில் முளைக்கச் செய்திருக்கிறோம், பூமியில் உங்களுக்கு வாழ்க்கைக்கான எல்லா வசதிகளையும் செய்துள்ளோம், நீங்கள் அவனுக்கு ஒருபோதும் உணவளிக்க முடியாது, ஒவ்வொரு விடயமும் எமது களஞ்சியத்தில் இருக்கிறது, அதிலிருந்து தேவையான அளவில் மாத்திரமே நாம் இறக்கிவைக்கிறோம்.'' (ஹிஜ்ர்: 19,20,21)

இந்த அல்குர்ஆன் வசனம், பூமியில் எதுவும் தேவையின்றி, ஒரு ஒழுங்கின்றி மேலதிகமாகப் படைக்கப்படவில்லை. அனைத்தும் உரிய அளவுடன் உரிய நோக்கத்திற்காகவே படைக்கப்பட்டுள்ளன என்பதை மிகவும் தெளிவாகச் சொல்கின்றது.

இதனால்தான் சூழலின் சமநிலையைப் பேணுமாறும், அதில் குளறுபடிகளை ஏற்படுத்தக் கூடாது எனவும் அல்குர்ஆன் கூறுகிறது: ''வானத்தை உயர்த்தி சமநிலையில் வைத்தான், அந்த சமநிலையை மீறிவிட வேண்டாம், சமநிலையை நீதியாகப் பேணுங்கள், அதில் குறைபாடு செய்யாதீர்கள்'' (ரஹ்மான்: 7,8,9).

**4. சூழலை சீர்குலைக்கும் எந்த நடவடிக்கையிலும் மனிதன் ஈடுபடக் கூடாது:**

பூமியில் பஸாது செய்யக் கூடாது என்பது அல்குர்ஆன் மிகுந்து வலியுறுத்தும் ஒரு உண்மை. இங்கு பஸாது என்பது, கலாநிதி அப்துல் மஜீத் நஜ்ஜார் அவர்கள் கூறுவது போல்[5] தனித்து ஒழுக்க ரீதியான சீரழிவுகளை மாத்திரம் சுட்டவில்லை. மாற்றமாக மனிதன் வாழும் சூழலுக்கு விளைவிக்கும் பாதிப்புக்களையும் முக்கியமாகக் குறித்து நிற்கின்றது.

அல்குர்ஆன் முனாபிக்குகளுடைய செயற்பாடுகள் பற்றிப் பேசும் பொழுது; ''அவர்கள் நபியவர்கள் சபையிலிருந்து திரும்பிச் சென்றால் பூமியில் நாசங்களை ஏற்படுத்துவர், விளைநிலங்களையும் கால்நடைகளையும் அழித்து விடுவர், அல்லாஹ் நாசம் செய்வோரை விரும்புவதில்லை'' (பகரா - 205). இந்த வசனத்தில் பஸாது என்பது குறிப்பாக சூழலுக்கு ஏற்படுத்தப்படும் சேதத்தையே குறித்து நிற்கின்றது.

மற்றோர் வசனத்தில் ''பூமியில் அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட்டு விட்டு அதில் நாசம் செய்யாதீர்கள்'' (அஃராப்: 56) என்கிறது. இந்த வசனத்தில் சூழலை அபிவிருத்தி செய்வதுதான் மனிதனது அடிப்படைக் கடமை. அதனை செய்ய முற்படுகின்றபோது கூட சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாமல் அபிவிருத்தியில் ஈடுபட வேண்டும் என்பது குறித்துக் காட்டப்படுகிறது.

சூழலை சீர்குலைக்கும் அனைத்து வகையான நடவடிக்கைகளையும் இஸ்லாம் தடுத்துள்ளது[6]. அதனை பின்வருமாறு விளக்க முடியும்.

முதலாவது, சூழலின் உறுப்புக்களை அழித்தலை இஸ்லாம் தடுத்துள்ளது. இங்கு அழித்தல் என்பதன் பொருள், ஒரு விடயத்தை மனிதனுக்கு எந்தப் பயனையும் கொண்டு வராத வகையில் அழிவுக்குட்படுத்துவதையே குறிக்கின்றது.

மனிதனது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் சூழலின் உறுப்புக்கள் பயன்படுத்தப்படுவதை இஸ்லாம் தடுக்கவில்லை. தாவரங்கள், நீர்நிலைகள், உயிரினங்கள் போன்ற எந்த உறுப்பைப் பொறுத்தவரையும் இதே விதியையே இஸ்லாம் பின்பற்றுகின்றது.


இதனால் தான் நபியவர்கள் ஒரு தடவை இவ்வாறு கூறினார்கள், ''ஒருவர் எந்தப் பயனுமின்றி ஒரு குருவியைக் கொலை செய்தாலும் மறுமையில் அந்தக் குருவி அல்லாஹ்விடம் முறையிடும், இவன் என்னை பயனின்றிக் கொலை செய்தான், தனது தேவைக்காகக் கொல்லவில்லை என்று கூறும்'' என்றார்கள் (நஸாஇ).

இரண்டாவது, சூழலின் ஒரு உறுப்பை மனித நலனுக்காகப் பயன்படுத்துகின்ற போதிலும், அதில் எல்லை மீறி நடந்து கொள்வதையும் இஸ்லாம் தடுத்துள்ளது. இங்கு எல்லை மீறுதல் என்பதன் பொருள் சூழலின் சுயமான மீள்சூழற்சியும் சாத்தியமற்றுப் போகும் வகையில் பயன்படுத்துதல், அதாவது ஒரு பொருளின் நிர்ணய அளவை விடவும் அதிகமான பயன்பாட்டிற்கு அதனை உட்படுத்துதல் என்பதாகும்.

இதனால்தான் இஸ்லாம் வீண்விரயத்தைத் தடுத்தமையைக் காணலாம். அல்குர்ஆன் கூறுகிறது ''வீண்விரயம் செய்யாதீர்கள், ஏனெனில் அவர்கள்தான் ஷெய்த்தானின் சகோதரர்கள்'' (இஸ்ரா: 26,27). என்கிறது. அதுபோல் அளவுக்கு மீறிய ஆடம்பரத்தை இஸ்லாம் தடைசெய்தமையும் இந்தப் பின்புலத்திலாகும். நபியவர்கள் கூறினார்கள், ''கால்நடை மேய்ப்பாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு உயர்மாடிகளைக் கட்டுவது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்று'' என்றார்கள் (புகாரி).

மூன்றாவது, சூழலை மாசுபடுத்துவதை இஸ்லாம் தடைசெய்துள்ளது. மனிதப் பயன்பாட்டை தடை செய்யும் வகையில் அல்லது மனிதனுக்குப் பாதகங்களைக் கொண்டுவரும் வகையில் சூழலின் எந்த உறுப்பும் மாசுபடுத்தப்படுவதை இஸ்லாம் விரும்பவில்லை. நபியவர்கள் வாழ்ந்த காலத்திலேயே மிக எளிமையாக இந்த உண்மைகள் மக்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளன.

(பக்.14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச உயர்கல்வித் துறையும் தனியார் உயர் கல்வித் துறையும்



தொழிற் கல்வி மற்றும் தொழில் நுட்ப கல்வித் துறையில் 2015 இன் கணிப்பீட்டின் படி 718 அரச சார்பற்ற கல்வி நிறுவனங்கள் நாட்டில் செயல்படுகின்றன. இத்துறையில் உள்ள அரச கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை 635 ஆகும். 718 கல்வி நிறுவனங்களிலும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் கீழ் 39 வீதமானவையே பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஏனையவை ஆணைக்குழுவின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவை.

26 வீதமான அரச சார்பற்ற கல்வி நிறுவனங்களே தேசிய தொழிற் தகைமையை (NVQ) வழங்குகின்றன. எனவே, தனியார் கல்வி நிறுவனங்களின் தர மேம்பாட்டை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும். தொழில் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் அரசாங்க அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனங்களாக அவை மாற்றப்பட வேண்டும். இலங்கையில் தனியார் கல்வித் துறையை எதிர்க்கின்றவர்களின் நிலைப்பாடு முற்றிலும் சரியானது என்று கூறுவதற்கில்லை.

இலங்கை அரசு உயர் கல்விக்கு ஒதுக்கும் நிதி போதுமானதாய் இல்லை என்ற உண்மையிலிருந்தே தனியார் கல்வித் துறையின் தேவை வெகுவாக உணரப்படுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கல்விக்கான ஒதுக்கீடு 1.2 வீதமாகும். இது மலேசியாவில் 6.3 வீதமாகவும் இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸில் 3.4 வீதமாகவும் சிங்கப்பூரில் 3 வீதமாகவும் நேபாளத்தில் 4.1 வீதமாகவும் இந்தியாவில் 3.8 வீதமாகவும் உள்ளது.

கல்விக்கான நிதியை அதிகரிப்பது தற்போதைய இலங்கைச் சூழலில் சாத்தியமில்லை. பாதீட்டில் கல்விக்கான தொகையை அதிகரிக்குமாறு கல்விமான்கள் விடுக்கும் கோரிக்கைக்கு மாறி மாறி வரும் அரசாங்கங்கள் சாதகமாய்ப் பதிலளிக்கவில்லை. இதனால், உயர் கல்வி வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கு மாற்று யோசனைகள் பல முன்வைக்கப்படுகின்றன. பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர் தொகையை அதிகரிப்பதற்கு இரவு நேரப் பாடநெறிகள், தொலைக் கல்வித் திட்டம் என்பன பரிந்துரைக்கப்பட்ட ஆலோசனைகளில் சில. ஆயினும் அவை வெற்றியளிக்கவில்லை.

இச்சூழ்நிலையிலேயே தனியார் கல்வித் துறையின் தேவை வலுத்து வருகின்றது. குறிப்பாக பல்கலைக்கழக கல்வியில் தனியார்த் துறையின் பங்கு இன்றியமையாதது. இலங்கையில் இயங்கும் அரச பல்கலைக்கழகங்களின் தற்போதைய நிலைமைகளைக் கவனத்திற் கொள்ளும்போது, தனியார் உயர் கல்வி நிறுவனங்கள் உருவாவது தவிர்க்க முடியாதது. எடுத்துக் காட்டாக, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலுள்ள முகாமைத்துறை முதுகலைமாணி பிரிவைப் பொறுத்தவரையில் அது சுய நிதி மூலத்தோடு இயங்குகின்றது. அரசாங்க நிதியில் அந்நிறுவனம் தங்கியிருக்கவில்லை. சுயாதீனமாகச் செயல்படுவதோடு, ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது வினைத்திறனுடன் செயலாற்றுகின்றது. எனவே அரச பல்கலைக்கழகங்களின் சில துறைகள் சுயாதீனமாகச் செயல்படுவதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும். அதன் மூலம் அவற்றின் தரமும் வினைத்திறனும் அதிகரிக்கும்.

கடந்த சில ஆண்டுகளாக இலங்கைப் பல்கலைக்கழகங்களின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது. 2018 இல் உலக வங்கி வெளியிட்ட சர்வதேச நாடுகளின் மதிப்பீட்டு அறிக்கையில் இவ்வுண்மை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி, உலகத்தின் முதல் தர 500 பல்கலைக்கழகங்களில் இலங்கையின் எந்தவொரு பல்கலைக்கழகமும் இடம்பெறவில்லை. உலகத் தரம் வாய்ந்த 2000 பல்கலைக்கழகங்களின் வரிசையிலேனும் இலங்கையின் எந்தப் பல்கலைக்கழகமும் இடம்பெறவில்லை. கொழும்பு பல்கலைக்கழகம் 2171 ஆவது பல்கலைக்கழகமாகத் தரப்படுத்தப்பட்டுள்ளது.

ஆசியாவின் ஏனைய பல்கலைக்கழகங்களோடு ஒப்பிடும்போது இது மிகப் பெரிய பின்னடைவாகும். ஏனெனில், சிங்கப்பூர் பல்கலைக்கழகம் 24 ஆவது இடத்திலும் டோக்கியோ பல்கலைக்கழகம் 39 ஆவது இடத்திலும் உள்ளது.

சமீபத்தில் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்ற பேராசிரியர் சுனேத்ரா வீரகோண், இலங்கை பல்கலைக்கழகங்களின் போதாமைகள் குறித்து கருத்து வெளியிட்டுள்ளார். அதன்படி, சில பொதுவான குறைபாடுகளை அவர் அடையாளம் கண்டுள்ளார்.

1. முகாமைத்துவத்திற்கும் கல்விசார் ஊழியர்களுக்கும் இடையிலான முரண்பாடு.
2. பல்கலைக்கழக நிருவாகம் மற்றும் மூலோபாய முகாமைத்துவத்திலுள்ள குறைபாடு.
3. கல்விசார் அடைவுகளுக்கு போதுமானளவு ஊக்கம் வழங்கப்படாமை.
4. பல்கலைக்கழக நிருவாகம் அரசியல் மயமாக்கப்படுவது.

இவற்றிலிருந்து மீள்வதற்கும் அரச பல்கலைக்கழகங்களைக் கண்காணிப்பதற்கும் ஒரு சுதந்திரமான அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என அவர் பரிந்துரை செய்துள்ளார். இதிலிருந்து நாம் புரிந்து கொள்வது என்னவெனில், தனியார் துறை கல்வி நிறுவனங்களை மாத்திரமன்றி, அரச சார் உயர் கல்வி நிறுவனங்களையும் மேற்பார்வை செய்வதற்கும் அங்கீகாரமளிப்பதற்கும் ஒரு சுயாதீன நிறுவனம் உருவாக்கப்பட வேண்டும் என்பதையே.

இது தவிரவும் இந்நாட்டு மக்களின் மனோ நிலையை நாம் மாற்ற வேண்டியுள்ளது. இலங்கை பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றபோது மக்கள் நல அரசாகவே பிறந்தது. அதன் விளைவாகவே இலங்கையில் ஒவ்வொருவருக்கும் இலவசக் கல்வி உரிமையளிக்கப்பட்டது. ஆயினும், உயர் கல்வியில் இந்த இலவச வாய்ப்பை வழங்குவதில் அரசு தோல்வி கண்டுள்ளது. இப்போது விவாதம் இலவசக் கல்வியிலிருந்து கல்வியின் சுதந்திரத்திற்கு இடம் மாறியுள்ளது.


கல்வியின் சுயாதீனம் அரசியலமைப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதோடு அது நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் அடிப்படை உரிமையாகவுமுள்ளது. இந்தப் பின்னணியில் ஒவ்வொரு பிரஜையும் கல்விக்கான உரிமையைப் பெற்றுள்ளார். ஆனால், இந்நாட்டில் கல்வித்துறை சார்ந்தோர் கல்வியின் சுதந்திரத்தையும் கல்விக்குள்ள உரிமையையும் வழங்கத் தவறுகின்றனர்.

இன்று தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சி உலகம் முழுவதும் அசையும் கற்கை நிறுவனங்களையும் பாடநெறிகளையும் சாத்தியப்படுத்தியுள்ளது. நூலகங்கள் செல்வாக்கிழந்து இணையங்கள் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன. தனியார் கல்வித் துறை ஒரு தவிர்க்க முடியாத வரவாகும். அவற்றைக் கவனமாக உள்ளீர்ப்பதே புத்திசாலித்தனமான அணுகுமுறையாகும்.

இலங்கையில் தனியார்த்துறையின் ஈடுபாட்டை அரசாங்கம் சாதகமாகவே பார்க்க வேண்டும். அரச மற்றும் தனியார் உயர் கல்வித் துறையின் தரம் கண்டிப்பாகப் பேணப்பட வேண்டும். இதற்கு அரசியல் மற்றும் அறிவார்ந்த உரையாடல் அவசியம். அபிவிருத்தி அடைந்து வரும் பிற நாடுகளிலும் இதுபோன்ற சவால்கள் எதிர்கொள்ளப்படுகின்றன. இந்த சவாலுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்து இலங்கை உயர் கல்வித் துறையில் பல சாதனைகளை அடைந்து பொருளாதார அபிவிருத்தியையும் சாத்தியப்படுத்தலாம்.

# உளக் கோளாறுகளும் உள ஆரோக்கியமும்



எமது அன்றாட வாழ்வில் பொருத்தமற்ற நடத்தைகளில் ஈடுபடுவோரை நாம் பல்வேறு வார்த்தைகளால் குறிக்கின்றோம். புத்தி கெட்டவன், மூளை சரியில்லாதவன், மூடன், புத்தி பேதலித்தவன், மடையன், பைத்தியக்காரன் என்று அந்த வார்த்தைகள் பல. இவற்றின் மூலம் நாம் எதனைக் கருதுகின்றோம் என்பது பொதுவாக அறியப்பட்ட ஒன்றுதான். எனினும், அறிவியல் பூர்வமாக இந்தச் சொற்களுக்கு நுணுக்கமான அர்த்தங்கள் உள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

மனிதன் நான்கு பரிமாணங்களைக் கொண்டவன். உடல், பகுத்தறிவு, உள்ளம், ஆன்மா ஆகிய நான்கினதும் இணைவே மனிதன். இதில் மனித உடல் அவ்வப்போது நோய்க்குள்ளாவது போன்று மனித உள்ளமும் நோய்க்குள்ளாகின்றது. உடல் ஒரு வன்பொருள் (Hardware), பார்வைக்குப் புலப்படக்கூடியது, தொடுகை உணர்வுக்கு உட்பட்டது. உள்ளமோ ஒரு மென்பொருள் (Software) போன்றது. புலன்களுக்கு அப்பாற்பட்டது. குறிப்பிட்ட ஒரு பொருள்வடிவம் அற்றது. எனினும், அதன் இருப்பு ஆன்மீகவாதிகள், ஒழுக்கவியலாளர்கள், அறிவியலாளர்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உடலும் உள்ளமும் எவ்வாறு இணைந்து செயற்படுகின்றன என்பது குறித்து இன்றுவரை ஆய்வுகள் நடந்த வண்ணம் உள்ளன.

உடல் நோய்கள் பற்றிய நவீன மனித ஆராய்ச்சிகள் நம்மைப் புருவமுயர்த்தச் செய்யும் அளவு வியப்பில் ஆழத்துபவை. அந்நோய்களுக்கான மருந்துகளும் பெருமளவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மருந்து கண்டுபிடிக்கப்படாத நோய்கள் மிகச் சொற்பம். மருத்துவத் தொழில்நுட்பமும் பிரமிப்பூட்டும் வகையில் வளர்ச்சியடைந்துள்ளது. தற்போது உடல், உள தொடர்புகள் பற்றிய (Psycho -somatic) ஆராய்ச்சிகள் வளர்ச்சியடைந்து வருகின்றன. உடல் நோய்கள் போன்று உள நோய்கள் பற்றிய ஆராய்ச்சிகளும் பாரியளவு வளர்ச்சியடைந்து வருகின்றன. உள மருத்துவம் (psychiatry) எனும் துறை இது தொடர்பில் மனிதகுலம் கண்டடைந்த மாபெரும் கொடையாகும்.

'Mental Illness' என்ற சொல் நேரடியாக மனநோய் என்பதைக் குறித்து நின்றாலும் இன்றைய உள மருத்துவத் துறையில் இச்சொல் பெருமளவு புழக்கத்தில் இல்லை. அதற்கு ஈடான 'Psychosis, Mental Diseases' போன்ற சொற்களையும் உள மருத்துவர்கள் தற்காலத்தில் பெரிதும் பயன்படுத்துவதில்லை. மாற்றமாக 'Mental Disorder' எனும் பதத்தையே கையாள்கின்றனர். இதனைத் தமிழில் 'உளக்கோளாறு' அல்லது 'ஒழுங்கீனம்' எனப் பெயர்க்கலாம். 'Mental Disorder' என்பதற்குச் சமாந்தரமாக 'Psychiatric Disorders' எனும் சொல்லையும் இன்றைய உள மருத்துவர்கள் பயன்படுத்துகின்றனர்.

தன்னியல்பாகவும் சுயமாகவும் சுயாதீனமாகவும் இயங்குவதற்கான ஆற்றல் குறைபாட்டை அல்லது நடத்தைகளில் ஏற்படும் கோளாறைப் பொதுவாக 'உளக்கோளாறு' அல்லது 'உளவியல் கோளாறு' எனலாம். இத்தகைய உளக்கோளாறு மனிதனிடம் பிறழ்வான நடத்தைகளை (Abnormal Behaviors) தோற்றுவிக்கின்றன. இன்னொரு வகையில் மனிதனில் ஏற்படும் பிறழ்வான நடத்தைகளே உளக் கோளாறின் நோய்க்குறியாகக் (Symptom) கருதப்படுகின்றன.

இங்கு நோய்க்குறி என்பது பல்வேறு வெளிப்பாடுகள் அல்லது அடையாளங்களின் (Syndromes) தொகுப்பாகும். நோய்க்குறிகளை வைத்து ஒருவரது மனக்கோளாறை இனங்காண்பவரைத் தொழில் ரீதியில் உள மருத்துவர் (Psychiatrist) என்பர். எனினும், ஆரம்ப நிலை மனக்கோளாறுகளை உளவள ஆலோசகரும் அடையாளம் காணலாம்.

பொதுவாக மனக்கோளாறுகளால் ஏற்படும் நடத்தை மாற்றங்களை அசாதாரண நடத்தைகள் (Abnormal Behaviors) என்பர். ஒரு மனிதனின் நடத்தைகள் மனவெழுச்சிகள், புலக்காட்சிகள், சிந்தனை என்பவற்றில் இத்தகைய பிறழ்நிலை ஏற்படலாம். இப்பிறழ்வு நிலைகளின் தொகுப்பே உளக்கோளாறு எனப்படுகின்றது. உளக் கோளாறுகளால் விளையும் அசாதாரண அல்லது பிறழ்வான நடத்தைகளை ஆராயும் பிரிவு உளவியலில் 'பிறழ்நிலை உளவியல்' (Abnormal Psychology) எனும் தனித்துறையாக வளர்ந்துள்ளது. உள மருத்துவத்துறையின் பிரதான ஆய்வுப்பரப்பாகவும் அதுவே விளங்குகின்றது.

ஒருவர் மனக்கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ளாரா என்பதைத் [illegible] அல்லது அசாதாரண நடத்தையை வரையறை செய்வதில் உளவியலாளர்களிடையே மாறுபட்ட அணுகுமுறைகள் நிலவுகின்றன. பிறழ்நிலை (Abnormality) என்பதற்கு உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு வரையறை இல்லை. பிறழ்நிலை என்பது பண்பாட்டு ரீதியில் மிகவும் அகவயத்தன்மை வாய்ந்த (Subjective) ஒரு பதமாகும். ஏனெனில், பிறழ்நிலையை ஆங்கிலத்தில் (Abnormality) என்கிறோம். தமிழில் இதனை 'நியமமற்ற', 'அசாதாரண' முதலிய சொற்களால் பகரமாக்கலாம். எனவே, பிறழ்நிலை நடத்தையை அசாதாரண நடத்தை எனவும் அழைக்கலாம். எவ்வாறாயினும் பண்பாட்டு வேறுபாடுகளைக் கடந்த ஒரு பொதுத்தன்மை வாய்ந்த விலகல் நடத்தைகளையே (Deviated Behaviors) இங்கு நாம் பிறழ்வான நடத்தை என்கிறோம்.

கலாசார, பண்பாட்டு வேற்றுமைகளைத் தாண்டி பொதுவாக உலகம் முழுவதிலும் மனிதர்களுக்கிடையில் நிலவும் அசாதாரண நடத்தைகளே [illegible]களின் கவனத்தில் குவிகின்றன. தீவிர உளப் பாதிப்பினால் மனித நடத்தைகள் யதார்த்த நிலையிலிருந்து விலகிக் காணப்படுவதை விலகல் நடத்தை அல்லது அசாதாரண நடத்தை என வரையறுக்கலாம். உளக் கோளாறுகளினால் பாதிக்கப்பட்டவர்களே இத்தகைய அசாதாரண நடத்தைகளை வெளிப்படுத்துவர். அதாவது நியம நடத்தையிலிருந்து முற்றிலும் விலகிய நடத்தையையே பிறழ்நடத்தை என்கிறோம்.

பிறழ்நிலை தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்தவர்கள் சாதாரண நடத்தை கொண்டவர்களிலிருந்தே தமது ஆய்வுகளைத் தொடங்கினர். சாதாரண நடத்தை கொண்ட ஐவர் உள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு அவர்களது நடத்தைகள் உற்று நோக்கப்பட்டன. அவர்களது நடத்தைகளில் சில அசாதாரணமானவை எனக் கண்டறியப்பட்டன.

இத்தகையோரின் சிந்தனைப் போக்கு, மனவெழுச்சி, சமூகத் தொடர்புகள், உள இயக்கம் ஆகியவற்றினால் இவர்களை இலகுவாக இனங்காணலாம். இவர்களின் சிந்தனைக் கோலங்கள், உணர்ச்சிகள், புலக் காட்சிகள் என்பவற்றில் குழப்ப நிலை காணப்படும். யதார்த்தத்தோடு தொடர்பற்ற நிலை, சமூக உறவுகளிலிருந்து விலகல், ஆளுமை விருத்திக் குறைபாடு, பேச்சிலும் எழுத்திலும் குறைபாடு, சுய உணர்விலும் நித்திரையிலும் குறிப்பிடத்தக்க குழப்பமான மாற்றங்கள் போன்றனவும் உளக்கோளாறின் அடையாளங்களாகக் கொள்ளப்படுகின்றன.

மிகத் தெளிவாகக் குறிப்பிடுவதாயின் ஒருவரது அறிகைத்திறன் (Cognition), நடத்தைகள் (Conation), மனவெழுச்சிகள் (Emotions) இவை ஏதேனுமொன்றிலோ அல்லது மூன்றிலுமோ ஏற்படும் இடையூறு அல்லது கோளாறு உளக்கோளாறு (Mental Disorder) எனப்படுகின்றது. உளவியலாளர்கள் இம்மூன்றிலும் ஏற்படும் சமநிலையின்மையே (Disequilibrium) பிறழ்நிலை எனக் கூறுகின்றனர்.

யதார்த்தத்தில் அசாதாரணம் என்பது ஒரு சார்பு எண்ணக்கருவாகும். ஏனெனில், எல்லா அசாதாரண நடத்தைகளும் பிறழ்நடத்தை எனக் கருதப்படுவதில்லை. அவை குழப்பமான, எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத, பொருத்தப்பாடற்ற நடத்தைகள் என்று கருதப்படும்போதே பிறழ் நடத்தை எனப்படுகின்றது. சாதாரண நடத்தை எது? அசாதாரண நடத்தை எது? என்பது ஒருவரின் வயது, கலாசாரம், சந்தர்ப்பம், சமூக நியமங்கள் ஆகியவற்றுக்கேற்ப வேறுபட்டுக் காணப்படும். ஒருவரின் அசாதாரண நடத்தை அவருக்கும் மற்றவர்களுக்கும் தீங்கும் ஆபத்தும் ஏற்படுத்துமெனில் அது கண்டிப்பாகப் பிறழ்நடத்தை என்றே கருதப்படும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழும்பத்... (03 ஆம் பக்கத் தொடர்)

மொத்தமாகப் பார்க்கும் போது நாட்டு மக்கள் அனைவரும் தெளிவான தொரு செய்தியை வழங்கும் நோக்கிலேயே இந்த முறை தேர்தலைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் முஸ்லிம்கள் எந்தச் செய்தியைச் சொல்வதற்காக இந்தத் தேர்தலைப் பயன்படுத்தியிருப்பார்கள்? சாய்ந்தமருது சுயேச்சைக் குழுவின் தேர்தல் நிலைப்பாடு தவிர்ந்த வேறெந்த நோக்கமும் முஸ்லிம் வாக்காளனுக்கு இருந்திருக்குமா? அல்லது ''ஒக்கொம யன்னே தேவாலே, மமத் யன்னே ஏவாலே''' என கூட்டத்தோடு ஆமீன் சொல்லிவிட்டு வந்திருப்பானா?

கடந்த தேர்தலில் முஸ்லிம்கள் வாக்களிக்காததனால் தோல்வியுற்ற மஹிந்த ராஜபக்ஷ, இம்முறை வெல்வதற்கும் அதே முஸ்லிம் வாக்குகள் தான் காரணமாகியிருக்கின்றன. முஸ்லிம்களின் கணிசமான வாக்குகள் மொட்டுச் சின்னத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலும் விஷேடமாக அளுத்கமவில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டதற்காக நாட்டின் கிழக்கு முதல் அனைத்துத் தரப்பினரும் திரண்டு மஹிந்தவுக்கு எதிராக வாக்களித்த போதிலும் இம்முறை பாதிக்கப்பட்ட பேருவல பிரதேசத்தில் மஹிந்த சார்பில் முஸ்லிம்கள் போட்டியிட்டு மஹிந்தவை வெல்ல வைத்திருக்கிறார்கள்.

வடக்குடன் கிழக்கு இணைக்கப்படக் கூடாது என்ற கருத்தில் உள்ள கிழக்கு மாகாண மக்கள், வடக்குடன் கிழக்கு இணைவதில் சார்பு நிலைப்பாட்டையுடைய முஸ்லிம் காங்கிரஸுக்கு பெருவாரியான வாக்குகளை அள்ளி வழங்கியிருக்கிறார்கள். வர்த்தமானி அறிவித்தல் மூலம் தமது நிலங்கள் அரசாங்கத்தால் பறித்தெடுக்கப்பட்டபோது அதனை மீட்டுத் தர முடியாமல் மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை வழங்கி அவர்களின் போரா




ட்டத்தை மழுங்கடிக்கச் செய்த அமைச்சர் ரிஷாதின் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு ஆதரவாக மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் பெருமளவு வாக்குகளை அள்ளி வழங்கியிருக்கிறார்கள்.

முஸ்லிம் வாக்காளர்கள் இந்தத் தேர்தலின் ஊடாகச் சொல்ல வருவது என்ன? கிழக்கு மாகாணம் வடக்குடன் இணைய வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்களா? முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து வாக்குக் கேட்ட ஐக்கிய தேசியக் கட்சி சிறப்பானது என்று சொல்ல வருகிறார்களா? கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் காணிகள் சூறையாடப்பட்ட போதும், மாயக்கல்லி மலையில் சிலை வைத்து அடாவடித்தனம் புரிந்த போதும், வனஜீவராசிகளுக்கென முஸ்லிம்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்ட போதும் எதுவுமே பேசாது அமைதியாய் இருந்தது தான் கிழக்கின் அரசியல் கட்சிகள் தமக்குச் செய்த மெத்தப் பெரிய உபகாரம் என்று சொல்ல வருகிறார்களா?

மன்னார் முசலிப் பிரதேச சபையின் மறிச்சுக்கட்டிப் பிரதேச மக்களின் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலத்தை வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசு சுருட்டிக் கொண்டபோது தமது அமைச்சர் மெத்தனமாக இருந்தது தான் சரி, எங்களுடைய காணிகள் எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்ல வருகிறார்களா? முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் இன்னும் கேள்விக்குறியாக இருக்கும் நிலையில் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் மீள்குடியேற்றம் தொடர்பாக எதுவுமே செய்யாமல் விட்டது எவ்வளவு பெரிய நன்மை என்று மக்கள் நினைத்துவிட்டார்களா?

முஸ்லிம் சமூகத்தின் வாக்குகள் வழங்கப்பட்டதை வைத்துப் பார்க்கின்ற போது இந்த முடிவுகளுக்குத் தான் வர வேண்டியிருக்கிறது. தேர்தலில் ஆசனங்கள் குறைந்த கையோடு, அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்தத் தேர்தல் முறையால் தமது கட்சிக்குப் பாதிப்பிருக்கிறது என்று ஜனாதிபதியிடம் முறையிட்டாரே தவிர அப்போதாவது அவரைச் சமூகத்தின் பக்கம் நினைக்கத் தேவையில்லை என்ற நிலைக்கு ஆளாக்கி விட்டது முஸ்லிம் சமூகத்தின் வாக்காளர்கள்தான்.

வட்டாரப் பிரிப்பினால் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்படப் போகிறது என்று தெரிந்தும், கலப்புத் தேர்தல் முறையின் விகிதாசாரத்தினால் முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறையப் போகிறது என்று தெரிந்தும் அவர்கள் பாராளுமன்றத்தில் தேர்தல் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தது, சாரத்தைத் தான் அவிழ்த்து விட்டாலும் இந்த மானங்கெட்டவர்கள் தமக்கு வாக்களிக்காமல் இருக்கப் போவதில்லை என்ற நம்பிக்கையில்தான்.

மொத்தத்தில் இந்தக் கருத்தைத்தான் முஸ்லிம் வாக்காளர்கள் தேர்தல் செய்தியாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சமூகம் எக்கேடு கெட்டாலும் தனக்குக் கிடைக்கின்ற மூவாயிரமோ, ஆயிரமோ நோட்டுக்களுக்கு வாலாட்ட வேண்டிய நன்றியுள்ள பிராணியாக அவர்கள் தம்மை இனம் காட்டியிருக்கிறார்கள்.

வெள்ளத்தில் அள்ளிச் செல்லப்படும் இந்தச் சருகுகளை குறைந்த பட்சம் நாணல்களாகவாவது மாற்ற வேண்டும். வாக்காளன் மாறாத வரை வாக்குறுதி அளித்து ஏமாற்றுபவர்கள் மாறப் போவதில்லை.

## ரணில்-மைத்திரி... (03 ஆம் பக்கத் தொடர்)

ஐக்கிய தேசியக் கட்சி நடந்து முடிந்த தேர்தலில் கைப்பற்றியுள்ள சபைகளின் எண்ணிக்கையைப் பார்க்கின்ற போது அந்தக் கட்சி அதன் தற்போதைய தலைமையின் கீழ் இனி ஒருபோதும் சொந்தமாக ஆட்சி அமைக்க முடியாது என்ற நிலையே காணப்படுகின்றது. சுமார் 24 இற்கும் மேற்பட்ட தொடர் தேர்தல் தோல்விகளைச் சந்தித்த பின் அந்தக் கட்சிக்கு ஆட்சி செய்வதற்கு கிடைத்த அருமையான ஒரு சந்தர்ப்பத்தையும் இப்போது இழந்து நிற்கின்றது.

சிறுபான்மையினருக்கு எதிரான குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்துவோம் என அந்தக் கட்சி உறுதியளித்தது.

அதனை நம்பி முஸ்லிம்கள் பாரிய அளவில் தமது வாக்குகளை அந்தக் கட்சிக்கு வழங்கினர். ஆனால் காலப் போக்கில் தாங்கள் பாதுகாக்கப்படுவதற்கு பதிலாகக் கைவிடப்பட்டுள்ளோம் என்பதை முஸ்லிம் சமூகம் நன்கு உணரத் தொடங்கியது. முஸ்லிம்களுக்கு எதிராககிந் தோட்டை பிரதேசத்தில் நடத்தப்பட்ட மோசமான இனவாத தாக்குதல் இந்த நாட்டில் இனவாதம் இன்னும் மரணிக்கவில்லை அல்லது ஓயவில்லை என்பதைப் புலப்படுத்தியது.

மிக அண்மையில் லண்டனில் உள்ள எமது உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் பாதுகாப்பு பிரிவு பிரதானி அங்கு ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழர்களைப் பார்த்து கழுத்தை வெட்டுவேன் என சைகை காட்டினார். அதற்காக அவரை வெளிவிவகார அமைச்சு தற்காலிக பதவி நீக்கம் செய்த போதும் ஜனாதிபதி தலையிட்டு அந்த முடிவை ரத்துச் செய்து அவரை உடனடியாக மீண்டும் பதவியில் அமர்த்தினார். இது அரசாங்கம் கூறி வரும் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்குப் பேரிடியாக அமைந்தது.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை எந்தத் திசையில் செல்கின்றது என்பதே புரியவில்லை. அண்மையில் மியன்மாரில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டமையை முழு உலகும் கண்டித்தது. ஆனால் ஐக்கிய நாடுகள் சபையில் இது சம்பந்தமாக இரண்டு தடவைகள் விவாதிக்கப்பட்ட போதிலும் இலங்கை மௌனம் காத்தது. இன்று வரை இலங்கை இந்த இடத்தில் வாயே திறக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதம மந்திரி என்னதான் சொன்னாலும் நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதிகம் பேசப்பட்ட வெளிநாட்டு மூலதனம் இன்னும் யதார்த்த நிலைக்கு வரவில்லை. சாதாரண சிறிய வர்த்தகர்கள் கூட தமது எதிர்பார்ப்புகள் பாதிக்கப்பட்ட நிலையில் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டின் பொருளாதார சுகவீனத்துக்கு காரணம் பிரதம மந்திரியே என்று ஜனாதிபதி பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகின்றார். பொருளாதார விடயங்கள் பற்றியும் மத்திய வங்கி பிணை முறி ஊழல் பற்றியும் தேர்தல் மேடைகளில் ஜனாதிபதி தெரிவித்த பகிரங்க கருத்துக்கள் கூட்டணி அரசை மிக மோசமாகப் பாதித்துள்ளதை தேர்தல் முடிவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

ஆளும் தரப்பு வேட்பாளர்கள் ஒருவரை ஒருவர் கள்வர்கள் என்று குற்றம் சாட்டிக் கொண்டமையும் இந்த வெட்கக்கேடான தோல்விக்கு ஒரு முக்கிய காரணம் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டியுள்ளார். மக்களின் மனநிலையையும் தேவைகளையும் உணர்ந்து கொள்ளத் தவறியமையே இந்தப் படுதோல்விக்கு பிரதான காரணமாகத் திகழ்கின்றது.

இந்தத் தோல்வியைத் தொடர்ந்து நாட்டில் அடுத்தடுத்து இடம்பெறவுள்ள அரசியல் நெருக்கடிகள் மற்றும் சூழ்நிலை மாற்றங்கள் என்பனவற்றுக்கு ஜனாதிபதியும் பிரதமருமே முழுப் பொறுப்பேற்க வேண்டும். பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவை உடனடியாக அந்தப் பதவியில் இருந்து நீக்குமாறு பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊழலுக்கு எதிராக அரசுக்கு மக்கள் வழங்கிய ஆணையை அரசு முறையாக நிறைவேற்றத் தவறிவிட்டது. மக்களின் பிரச்சினைகளிலும் கவனம் செலுத்த அரசு தவறிவிட்டது. எனவே மக்கள் இந்த அரசுக்கு வழங்கிய ஆணையை மக்கள் மீளப் பெற்றுள்ளனர் என்று ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடன் வலையில் இருந்தும் பொருளாதார கொந்தளிப்பில் இருந்தும் நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க அரசாங்கம் தவறிவிட்டது. 2015 இல் மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்கள் மீண்டும் தலைதூக்க இதுவே காரணம் என்று அவர் மேலும் விளக்கமளித்துள்ளார். 2015 இல் தோற்கடிக்கப்பட்ட ஊழல் மோசடியில் மூழ்கி பழக்கப்பட்ட குழுவினரின் கரங்களில் இப்போது உள்ளூராட்சி மன்றங்கள் சிக்கியுள்ளன.

ஜாதிக்க ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க 'அரசாங்கம் என்ற வகையில் 2015 ஜனாதிபதி தேர்தலின் பின் நாம் வாக்களித்த நல்லாட்சியை மக்களுக்கு வழங்கத் தவறிவிட்டோம்' என்று ஒப்புக் கொண்டுள்ளார்.

## சூழலைப் பாதுகாத்தல்... (12 ஆம் பக்கத் தொடர்)

உதாரணமாக ஒரு தடவை பொது இடங்களில் மலம் கழிப்பது தொடர்பாக கூறும்போது, ''சாபத்தைக் கொண்டு வரக் கூடிய மூன்று விடயங்களைத் தவிர்ந்து கொள்ளுங்கள், அவை நீர் நிலைகளில் மலம் கழித்தல், பொது வீதிகளில் மலம் கழித்தல், நிழல்களில் மலம் கழித்தல்'' என்றார்கள் (அபூ தாவூத்). மலம் சூழலை பெரிதும் மாசுபடுத்தக் கூடிய ஒரு காரணி என்பது தெளிவானது.

மேற்கூறப்பட்ட நான்கு அடிப்படைகளும், சூழல் என்பது உலகில் மனித வாழ்வுடன் எந்தளவுக்குப் பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதையும், ஒன்றில் ஏற்படும் பாதிப்பு மற்றையதையும் பாரியளவில் பாதிக்கிறது என்பதையும் உணர்த்துகிறது. அந்தவகையில் இது இருப்பு சம்பந்தப்பட்ட ஒரு விடயம், மனிதவாழ்வின் நீடித்த இருப்பு சூழலின் இயல்பு நிலை பேணப்படுவதிலும் தங்கியிருக்கிறது. அந்தக் கண்ணோட்டத்தில்தான் இது மகாஸித்களில் ஒன்றாக மாறுகிறது. மனித வாழ்வில் நிலையாகப் பேணப்பட வேண்டிய ஒரு பண்பையே நாம் மகாஸித் என்கிறோம்.


(1). நஜ்ஜார், அப்துல் மஜீத். (2012). மகாஸிதுஷ் ஷரீஆ பிஅப்ஆத் ஜதீதா. டியூனிஸியா: தாருல் கர்ப் அல் இஸ்லாமி. பக்கம் 207-212.

(2). அல்மன்ஸீ, முகம்மத் அல்காஸிம். (2013). மகாஸிதுஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா வல் இஃலானுல் ஆலமி லிஹிமாயதில் பீஆ. மகாஸிதுஷ் ஷரீஆ வல் இத்திபாகிய்யாதுத் துவலிய்யா, மஜ்மூஅது புஹூஸ். லண்டன்: முஅஸ்ஸஸதுல் புர்கான் லித்துராஸ் அல் இஸ்லாமி, மர்கஸு திராஸாத் மகாஸிதிஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா. பக்கம் 280,281.

(3). அஷ்ஷாதிபி, அபூ இஸ்ஹாக் இப்ராகீம் இப்னு மூஸா. (2015). மகாஸிதுஷ் ஷரீஆ. செம்மையாக்கல் : அஸ்ஸஹ்மராணி, அஸ்அத். பெய்ருத்: தாருன் நபாஇஸ். பக்கம் 15.

(4). அல்கர்ளாவி, யூசுப் அப்துல்லாஹ். (2001). ரிஆயதுல் பீஆ பீ ஷரீஅதில் இஸ்லாம். கெய்ரோ: தாருஸ் ஷுரூக். பக்கம் 12-14.

(5). நஜ்ஜார், அப்துல் மஜீத். (2012). மகாஸிதுஷ் ஷரீஆ பிஅப்ஆத் ஜதீதா. டியு+னிஸியா: தாருல் கர்ப் அல் இஸ்லாமி. பக்கம் 209 - 2011.

(6). மேலது. பக்கம் 212 - 230.


## சிரியாவின்... (11 ஆம் பக்கத் தொடர்)

லெபனானின் அரசியல் ஸ்திரப்பாட்டிற்குக் குறுக்கே நிற்கும் ஹிஸ்புல்லாஹ், சிரியாவின் அலவி வர்க்கத்தின் அதிகார பீடத்தைக் காப்பாற்ற களமிறங்கியுள்ளது. அறபுகளின் வாசற்படியில் அனைத்து அறங்களையும் மீறி உருவாக்கப்பட்டுள்ள இஸ்ரேல், சிரியாவை இத்தகைய போர்க்களமாகக் காண்பதற்கே விரும்புகின்றது.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட நலன்களைக் கொண்ட ரஷ்யாவும் அமெரிக்காவும் சிரிய விவகாரத்தில் கொண்டுள்ள தலையீடு, சிரிய மக்களுக்கு எந்த வகையிலும் நலன் பயப்பதாய் இல்லை. அமெரிக்கா கண்டன அறிக்கை விடுவதோடு களத்திலிருந்து ஒதுங்கி விட்டது. ஆட்சி பீடத்தைக் காப்பாற்றும் முனைப்பில் ரஷ்யா வழங்கிவரும் ஆதரவு அஸதின் போர்க் குற்றங்களுக்கும் இனப்படுகொலைகளுக்கும் உரமூட்டி வருகின்றது.

அரசாங்கம் மக்கள் அபிலாஷைகளுக்கேற்ப மாற வேண்டும் எனக் கோரி வரும் மக்களை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தும் ரஷ்யாவும் ஈரான், ஈராக்கிய ஷீஆ அரசும் லெபனானிய ஹிஸ்புல்லாஹ்வுமே இன்றைய மனிதப் படுகொலைக்குப் பின்னாலுள்ள சக்திகளாகும். சிரியாவின் உண்மையான விடுதலைப் போராட்டத்தைக் குழப்பியடிக்கும் விதத்தில் ரஷ்யாவும் அதன் நட்பு நாடுகளும் அங்கு சில பயங்கரவாதக் குழுக்களை களமிறக்கியுள்ளன. அதன் மூலம் விடுதலைப் போராட்டத்திற்கான நியாயங்கள் திட்டமிட்டு மழுங்கடிக்கப்பட்டுள்ளன.

கிளர்ச்சியாளர்கள் இப்போது கிழக்கு கூதாவில் நிலைகொண்டுள்ளதாக வாதிக்கும் அரசாங்கம் ரஷ்யாவுடன் இணைந்து 400,000 மக்கள் மீது கொத்தணிக் குண்டுகளை அள்ளி எறிகின்றது. நச்சுத் தன்மை வாய்ந்த இத்தகைய குளோரின் வாயுக் குண்டுகள் அப்பாவி உயிர்களைப் பலி கொண்டு வருகின்றன. ஐ.நா. பாதுகாப்புச் சபையோ கண்டன அறிக்கையோடு அமைதியடைகின்றது.

அறிக்கை விடுவதில் ஐ.நா. செயலாளர் அசகாயசூரர் என்பதை மீண்டும் ஒருமுறை நிறுவியுள்ளார். வார்த்தைகளின் மாயாஜாலங்களால் மனங்களைக் கவரும் மாபெரும் மனிதர் அவர். ஏற்கனவே ''இப்புவிப் பரப்பிலேயே மிகவும் சோதிக்கப்படும் சிறுபான்மை மக்கள் ரோஹிங்கியர்கள்'' என்று அறிக்கை விட்டதோடு காணாமல் போனவர் அவர். இப்போது பூமியில் ஒரு நரகம் என்று கூதாவை மிக அற்புதமாக வர்ணித்துள்ளார் அவர்.

வல்லரசுகளின் அதிகாரப் பசிக்கு இரையாக்கப்பட்டுள்ள ஒரு தேசத்தில் அலறித்துடிக்கும் பச்சிளம் பாலகர்களின் அவலக் குரல்களையோ குளோரின் வாயுக் குண்டுகளால் உயிர் பிரியும் பெண்களின் மரண ஓலங்களையோ கேட்கும் நிலையில் இவர்களின் எந்த செவிட்டுச் செவிகளும் இல்லை. களநிலவரம் மிகவும் சோகமானது. சட்டங்களால் சர்வதேசப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது என்பதையே நேற்றைய அலப்போவும் இன்றைய கூதாவும் பறைசாற்றுகின்றன.

## முஸ்லிம்கள்... (07 ஆம் பக்கத் தொடர்)

இதனால் சிங்கள முஸ்லிம் பிரச்சினைகளே மேலோங்குகிறது. மக்கள் விடுதலை முன்னணியிடம் அவ்வாறான கொள்கைகள் இல்லை. இதனை முஸ்லிம்கள் படிப்படியாக உணர்ந்து வருகிறார்கள். தேசிய அரசியலில் முஸ்லிம்களையும் ஒன்றாக கருதுகின்ற அரசியல் தலைமையுடனேயே முஸ்லிம்கள் அணிதிரள வேண்டும். இதனையே நாம் வேண்டுகிறோம்.

நாட்டில் முஸ்லிம் கட்சி, சிங்களக் கட்சி, தமிழ் கட்சி என்பதாக பிரிந்திருந்தால் நாட்டில் மோசமான நிலைமைகளே உருப்பெரும். ஒவ்வொரு தரப்புக்கும் இனவாதத்தை பயன்படுத்த முடியும். இனவாத சிந்தனையிலிருந்து விலகி தேசிய ரீதியிலான சிந்தனையுடன் கூடிய கட்சியுடன் அணிதிரளுமாறு நாம் முஸ்லிம் மக்களிடம் வேண்டுகிறோம்.

முஸ்லிம் பாடசாலை மாணவிகளுக்கு ஹிஜாபை பெற்றுக்கொடுப்பதில் நாமே தலையிட்டோம். பதியுதீன் மஹ்மூத் முதல் கபீர் ஹாசிம் வரையில் முஸ்லிம் கல்வியமைச்சர்கள் இருந்தார்கள். ஒருவரும் அதைச் செய்யவில்லை. அளுத்கம கலவரம், கிந்தோட்டை விவகாரம் போன்ற சம்பவங்களின் போது நாம் அவற்றை கண்டித்து அதற்கெதிராக பாராளுமன்றிலும் அதற்கு வெளியிலும் குரல் எழுப்பினோம். வடக்கிலிருந்து கிழக்கை பிரிக்கும் விடயத்திலும் நாமே தலையிட்டு அதனை செய்து வைத்தோம்.

அண்மையில் பேரீச்சம் பழத்திற்கு வரி விதிக்கப்பட்ட போது அந்த வரியை குறைக்குமாறு நாமே குரலெழுப்பினோம். கடந்த காலப்பகுதியில் ஹராம், ஹலால் பிரச்சினை ஏற்பட்ட போது அந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்குக் கருத்தியல் ரீதியான போராட்டங்களை நாமே முன்னெடுத்தோம். உண்மையில் நாம் முஸ்லிம்களின் உரிமைகளுக்காக வேண்டி தொடர்ந்தேர்ச்சியாக குரல் எழுப்பி வந்துள்ளோம்.

இன்றும் குரல் எழுப்பிக் கொண்டே உள்ளோம். சிலபோது ரவூப் ஹக்கீம் போன்ற முஸ்லிம் அரசியல் தலைமைகள் செய்யாத விடயங்களை கூட நாம் செய்துள்ளோம். வடக்கிலிருந்து கிழக்கை பிரிப்பதற்கு ரவூப் ஹக்கீம் தலையிடவில்லை. அதை நாமே செய்துவைத்தோம். ஆனால் இந்த விடயங்களையெல்லாம் முஸ்லிம் மக்கள் இன்னும் நன்றாக புரிந்துகொள்ளவில்லை. இதனை தெளிவுபடுத்துவது எங்கள் பொறுப்பு. புரிந்துகொள்வது அவர்களிடமே உள்ளது.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | |
|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் - 5500.00 |
| 12 இதழ்கள் - ரூபா 600.00 | தனிப் பிரதி - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா - 6500.00 |
| 24 இதழ்கள் - ரூபா 1200.00 | ஒரு வருடம் - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா - 4700.00 |
| | | | சீனா - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 066100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைகள் சொன்ன கதை..!!!?



சந்தானம் ராமசாமி
இன் முகநூல் பதிவிலிருந்து

சில வருடங்களுக்கு முன்பு, வெலிங்டனில் உள்ள இராணுவ அதிகாரி ஒருவரின் வீட்டுக்குச் சென்று இருந்தேன். அவரது வரவேற்பறையில் இரண்டு கைகளின் புகைப்படம்.

யாரோ ஒரு புனிதரின் கைகளாக இருக்கக்கூடும் என்று நினைத்து, அதைப் பற்றிக் கேட்கவே இல்லை. அவரோடு காரில் பயணம் செய்யும்போது, அதே போன்ற கைகளின் புகைப்படத்தை மறுபடியும் பார்த்தேன். ஆவலில் அது யாருடைய கைகள் என்று கேட்டேன்.

அவர் புகைப்படத்தைக் கையில் எடுத்துப் பார்க்கும் படியாகச் சொன்னார். புகைப்படத்தை அருகில் தொட்டுப் பார்த்தபோது, அது வயதான ஒரு பெண்ணின் கைகள் என்பதைக் கண்டுகொண்டேன்.

முதுமையின் ரேகை படிந்த நீண்ட விரல்கள். நகங்கள் சுத்தமாக வெட்டப் பட்டு இருக்கின்றன. நரம்புகள் புடைத்துத் தெரிகின்றன. யாராக இருக்கும் என்று மனது ஏதேதோ துறவிகளை, ஞானிகளை நினைவுபடுத்திக் கொண்டே இருந்தது.

அவர் அந்தக் கைகளைப் பெருமூச்சு டன் பார்த்து ஆதங்கமான குரலில் அது என் அம்மாவின் கைகள் என்று சொன் னார். ஆச்சர்யமாக இருந்தது. 'எதற்காக அம்மாவின் கைகளை மட்டும் புகைப் படமாக வைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

'அந்தக் கைகள்தான் என்னை வளர்த்தன. என் நினைவில் எப்போதுமே அம்மாவின் கைகள்தான் இருக்கின்றன. அம்மாவின் முகத்தைவிட, அந்தக் கைகளைக் காணும்போதுதான் நான் அதிகம் நெகிழ்ந்துபோகிறேன்.

அம்மா இறப்பதற்குச் சில மணி நேரம் முன்பாக இந்தப் புகைப்படத்தை எடுத் தேன். இந்தக் கைகள் இப்போது உலகில் இல்லை. ஆனால், இதே கைகளால் வளர்க்கப்பட்டவன் உங்கள் முன்னால் உட்கார்ந்திருக்கிறேன். என் அம்மா எனக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்து ஓய்வு எடுத்ததே இல்லை.

அப்பா பொறுப்பற்ற முறையில், குடித்து, குடும்ப வருமானத்தை அழித்து 32 வயதில் செத்துப் போனார். அம்மா தான் எங்களை வளர்த்தார். நாங்கள் மூன்று பிள்ளைகள். அம்மா படிக்காதவர். ஒரு டாக்டரின் வீட்டில் பணிப் பெண்ணாக வேலைக்குச் சேர்ந்தார். பகல் முழுவதும் அவர்கள் வீட்டினைச் சுத்தம் செய்வது, பாத்திரம் கழுவுவது, துணி துவைப்பது, நாய்களைப் பராமரிப்பது போன்ற வேலைகள். மாலையில் இன்னும் இரண்டு வீடுகள். அங்கும் அதேபோல் சுத்தம் செய்யும் வேலைதான். எத்தனை ஆயிரம் பாத்திரங்களை அம்மாவின் கைகள் விளக்கிச் சுத்தம் செய்து இருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே மனது கஷ்டமாக இருக்கிறது.

இரவு வீடு திரும்பிய பிறகு, சமைத்து எங்களைச் சாப்பிடவைத்து உறங்கச் செய்து விட்டு அதன் பின்னும் அம்மா இருட்டிலேயே கிணற்றில் தண்ணீர் இறைத் துக் கொண்டு இருப்பார்கள். சமையல் அறையில்தான் உறக்கம். அப்போதும் கைகள் அசைந்தபடியேதான் இருக்கும். எங்கள் மூவரையும் பள்ளிக் கூடம் அழைத்துப் போகையில் யார் அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு நடப்பது என்பதில் போட்டியே இருக்கும்.

அந்தக் கைகளைப் பிடித்துக்கொள் வதில் அப்படி ஒரு நெருக்கம், நம்பிக்கை கிடைக்கும். அதுபோலவே உடல் நலம் இல்லாத நாட்களில் அம்மாவின் கைகள் மாறி மாறி நெற்றியைத் தடவியபடியே இருக்கும். அம்மா நிதானமாகச் சாப்பிட்டு நான் பார்த்ததே இல்லை. தனது சகலச் சிரமங்களையும் அம்மா தன் கைகளின் வழியே முறியடித்து எங்களை வளர்த்த படியே இருந்தார். மருத்துவரின் வீட்டில் அம்மா ஒருநாள் ஊறுகாய் ஜாடியை உடைத்துவிட்டார் என்று அடி வாங்கு வதைப் பார்த்தேன். அம்மாவின் கன்னத்தில் மருத்துவரின் மனைவி மாறி மாறி அறைந்துகொண்டு இருந்தார். அம்மா அழவே இல்லை.

ஆனால், நாங்கள் பார்த்துக் கொண்டு இருப்பதைத் தாங்க முடியாமல், விடுவிடு வென எங்களை இழுத்துக் கொண்டு அந்த வீட்டில் இருந்து வெளியேறினாள். வழியில் பேசவே இல்லை. அம்மாவை எந்தக் கைகளும் ஆறுதல்படுத்தவோ, அணைத்துக்கொள்ளவோ இல்லை. அவள் கடவுள் மீதுகூட அதிக நம்பிக்கை கொண்டு இருந்தாள் என்று தோன்ற வில்லை. வீட்டில் சாமி கும்பிடவோ, கோயிலுக்குப் போய் வழிபடவோ, அதிக ஈடுபாடு காட்டியதே இல்லை. வேலை... வேலை... அது மட்டுமே தன் பிள்ளை களை முன்னேற்றும் என்று அலுப்பின்றி இயங்கிக் கொண்டு இருந்தார்.

சிறு வயதில் அந்தக் கைகளின் முக்கி யத்துவத்தை நான் புரிந்து கொள்ளவே இல்லை. ஆசையாகச் சமைத்துத் தந்த உணவைப் பிடிக்கவில்லை என்று தூக்கி வீசி இருக்கிறேன். கஷ்டப்பட்டுப் பள்ளியில் இடம் வாங்கித் தந்தபோது படிக்கப் பிடிக்கவில்லை என்று போகாமல் இருந்திருக்கிறேன். கைச் செலவுக்குத் தந்த காசு போதவில்லை என்று அம்மாவுக்குத் தெரியாமல் வீட்டில் திருடி இருக்கிறேன். மற்ற சிறுவர்களைப் போல சைக்கிள் வாங்கித் தர மாட்டேன் என்கிறாள் என்று கடுமையான வசைகளால் திட்டி இருக்கி றேன். அம்மா எதற்கும் கோபித்துக் கொண்டதே இல்லை. அம்மா கஷ்டப்படு கிறாள் என்று தெரிந்தபோதும் யார் அவளை இப்படிக் கஷ்டப்படச் சொன்னது என்றுதான் அந்த நாளில் தோன்றியது.

கல்லூரி வயதில் நண்பர்களோடு சேர்ந்து சுற்றவும், புதுப் புது ஆடைகள் வாங்கவும் குடிக்கவும் எத்தனையோ பொய்கள் சொல்லி இருக்கிறேன். என் அண்ணனும் தங்கையும்கூட இப்படித்தான் செய்திருக்கிறார்கள். ஆனால், அம்மா அதற்காக எவரையும் கோபித்துக் கொள்ளவே இல்லை.

கல்லூரி இறுதி ஆண்டில் மஞ்சள் காமாலை வந்து, நோயாளியாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார் அம்மா. அப்போதுதான் அவர் எங்களை எவ்வளவு அக்கறையோடு, ஆதரவோடு காப்பாற்றி வந்திருக்கிறார் என்று புரிந்தது. அதன் பிறகு, என்னைத் திருத்திக் கொண்டு தீவிரமாகப் படிக்கத் துவங்கி, இராணுவத்தில் வேலைக்குச் சேர்ந்து கடுமையாக உழைத்துப் பதவி உயர்வு பெற்றேன். அம்மாவை என்னுடனே வைத்துக் கொண்டேன். நான் சம்பாதிக்கத் துவங்கியபோதும், அம்மா ஒருபோதும் எதையும் என்னிடம் கேட்டதே இல்லை. நானாக அவருக்கு எதையாவது வாங்கித் தர வேண்டும் என்று நினைத்து, தங்க வளையல் வாங்கித் தருகிறேன் என்று அழைத்துப் போனேன்.

முதிய வயதில் அம்மா மிகுந்த கூச்சத் துடன், 'எனக்கு ஒரே ஒரு வாட்ச் வேண்டும். சின்ன வயதில் வாட்ச் கட்டிக் கொண்டு வேலைக்குப் போக வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால், அது நடக்கவே இல்லை. அதன் பிறகு, எனக்குள் இருந்த கடிகாரம் ஓடு... ஓடு... என்று என்னை விரட்டத் துவங்கியது. அலாரம் இல்லாமலே எழுந்துகொள்ளப் பழகிவிட்டேன். இப்போது வயதாகி விட்டது. சில நாட்கள் என்னை அறியா மல் ஆறு மணி வரை உறங்கிவிடுகிறேன். இரவு உணவை ஏழு மணிக்குச் சாப்பிட்டு விடுகிறேன். ஒரு வாட்ச் வாங்கித் தருவாயா?' என்று கேட்டார்.

'அம்மா விரும்பியபடி ஒரு வாட்ச் வாங்கித் தந்தேன். ஒரு பள்ளிச் சிறுமி யைப்போல அதை ஆசையாக அம்மா எல்லோரிடமும் காட்டினாள். அதை அணிந்துகொள்வதில் அம்மா காட்டிய ஆர்வம் என்னை நெகிழ்வூட்டியது. அதன் பிறகு அம்மா, நான் திருமணம் செய்து டெல்லி, பெங்களூரு என்று வேலையாக அலைந்தபோது கூடவே இருந்தார். டெல்லியில் எதிர்பாராத நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டு இருந்தார். நான் கூடவே இருந்தேன்.

'நாங்கள் ஏமாற்றியபோது எல்லாம் ஏன் அம்மா எங்களை ஒரு வார்த்தைகூடத் திட்டவே இல்லை?' என்று கேட்டேன். அம்மா, 'அதற்காக நான் எவ்வளவு அழுதிருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது. ஆனால், அன்று நான் கோபப்பட்டிருந்தால், என் பிள்ளைகள் என்னை விட்டுப் போயிருப்பார்கள்' என்று சொல்லி, தன் கையை என்னுடன் சேர்த்து வைத்துக்கொண்டார்.

அப்போதுதான் அந்த முதிய கைகளைப் பார்த்தேன். அது எவ்வளவு உழைத்திருக்கிறது. எவ்வளவு தூய்மைப் படுத்தி இருக்கிறது. எவ்வளவு அன்பைப் பகிர்ந்து தந்திருக்கிறது. அதை ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது. பிறகு ஒருநாள், எனது கேமராவை எடுத்து வந்து, புகைப்படம் எடுத்துக்கொண்டேன். இன்று அம்மா என்னோடு இல்லை. ஆனால், இந்தக் கைகள் என்னை வழி நடத்துகின்றன. ஒவ்வொரு நாளும் நான் எப்படி வளர்க்கப்பட்டேன் என்பதை இந்தக் கைகள் நினைவுபடுத்துகின்றன. இதை வணங்குவதைத் தவிர, வேறு நான் என்ன செய்துவிட முடியும்?' என்றார்.

இராணுவ அதிகாரியினுடைய முகம் தெரியாத அந்தத் தாயின் கைகளை நானும் தொட்டு வணங்கினேன். அந்தக் கைகள் யாரோ ஒருவரின் தாயின் கைகள் மட்டும் இல்லை. உலகெங்கும் உழைத்து ஓய்ந்துபோன தாயின் கைகள் யாவும் ஒன்றுபோலத்தான் இருக்கின்றன. அவை எதையும் யாசிக்கவில்லை. அணைத்துக் கொள்ளவும், ஆதரவு தரவும், அன்பு காட்டவுமே நீளுகின்றன. அதை நாம் புறந்தள்ளிப் போயிருக்கிறோம். அலட்சியமாகத் தவிர்த்து இருக்கிறோம்.

இலக்கு இல்லாத எனது பயணத்தில் யார் யார் வீடுகளிலோ தங்கியிருக்கிறேன். சாப்பிட்டு இருக்கிறேன். எனது உடை களைத் துவைத்து வாங்கி அணிந்து இருக்கிறேன். அந்தக் கைகளுக்கு நான் என்ன நன்றி செய்து இருக்கிறேன். ஒரு நிமிடம் என் மனம் அத்தனை கைகளை யும் வணங்கி, தீராத நன்றி சொன்னது.

'கை விரல்களுக்கு இடையில் இடைவெளி இருப்பது இன்னொரு கைகள் நம்மோடு சேர்ந்துகொள்ளத்தான்' என்று எங்கோ படித்தேன். அதை நிறைய நேரங்களில் நாம் உணர்வதே இல்லை. நம் மீது அன்பு காட்டும் கைகளுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம்?

முடிவு நம்மிடமே இருக்கிறது!

# நீங்கள் புத்திசாலி ஆக வேண்டுமா?



உலகில் எந்த ஒரு பொருளும் இயங் கரமலோ அல்லது பயன்படுத்தப்படா மலோ இருந்தால், நிச்சயம் கெட்டு விடும் அல்லது செயலற்றுவிடும். நாம் நம்து உடம்பை ஆரோக்கியமாகவும், புத்துணர்ச்சியுடனும் வைத்துக்கொள்ள பலவிதமான பயிற்சிகளை மேற்கொள் கிறோம். சீரிய இயக்கத்தையும், முறை யான ஓய்வையும் உடம்பிற்கு அளித்து, அதை சமச்சீர் நிலையில் வைத்துக் கொள்ள முயல்கிறோம்.

புத்திசாலி ஆக வேண்டுமெனில், உடம்பிற்கு கொடுக்கப்படும் இந்த முக் கியத்துவமானது, சிந்தனை மற்றும் பரிணாமத்தின் மையமாய் இருக்கும் மூளைக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

மூளைக்கு பயிற்சியே கொடுக்காமல் இருந்தால், அது ஆற்றல் இழந்து, சோர் ந்து போய்விடும். மூளை சோர்ந்து போனால், நினைவாற்றல், கடினமா னதை படித்து புரிந்துகொள்ளும் திறன், பகுப்பாய்வு திறன், படைப்பாற்றல், கணக்கிடும் திறன், முடிவெடுக்கும் திறன், சாமர்த்தியம் உள்ளிட்ட பலவித முக்கிய திறன்கள் மங்கி போய்விடும். எனவே மூளையை பட்டைத் தீட்டி வைத்திருக்க வேண்டியது இன்றைய வாழ்க்கை சூழலில் மிகவும் முக்கியத் துவம் வாய்ந்ததாக உள்ளது. இல்லை யெனில், நாம் முக்கியத்துவம் அற்ற மனிதராய் கருதப்பட்டு நமது சமூக மதிப்பை இழந்துவிடுவோம். மூளையை சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும் வைத் திருப்பதற்கான சில வழிமுறைகளை இங்கே தருகிறோம்.

**தரமான புத்தகங்களை படித்தல்:**

படிப்பதில் பொதுவாக பலருக்கும் ஆர்வம் உண்டு. படித்து புரிந்துகொள் ளும் நடவடிக்கையால் மூளை சுறுசுறுப் படைகிறது. ஆனால் நாம் படிக்கும் புத்தகங்கள் எந்த மாதிரியாக இருக்க வேண்டும் என்பது இங்கே முக்கியம். சாதாரண பொழுதுபோக்கு நாவல்கள், ஜனரஞ்சக பத்திரிகைகள், மிக சாதாரண விஷயங்களைப் பற்றி மேலோட்டமாக எழுதப்பட்ட புத்தகங்கள் போன்றவை கள் மூளையின் வளர்ச்சிக்கும், முதிர்ச் சிக்கும் துணைபுரியாதவை. அவற்றை சிறிதுநேரம் பொழுதுபோக்காக வேண்டு மானால் படிக்கலாம்.

மாறாக, உங்களுக்கு பிடித்த துறை யிலிருந்து எழுதப்பட்டிருக்கும் ஆராய் ச்சிப் புத்தகங்களையோ, அல்லது வேறு துறைகளை சேர்ந்த பகுப்பாய்வு புத்தகங் களையோ படிக்கலாம். படிப்பதோடு இல்லாமல், ஏதாவது பத்திரிக்கைகளுக்கு தரமுள்ள கட்டுரைகளும் எழுதி அனுப்ப லாம். படித்த விஷயங்களை யாரிடமா வது விவாதிக்கலாம். பொது அறிவுப் புத்தகங்களை படித்து விஷயங்களை மனனம் செய்து பழகலாம். பள்ளி மாண வர்களுடன் அது சம்பந்தமான வினாடி-வினா போட்டியில் ஈடுபடலாம். ஆங் கில மொழியின் வார்த்தைகளையும் அதன் அர்த்தங்களையும் படித்து மனனம் செய்யலாம். இதுபோன்று பலவித பயன் மிகுந்த செயல்பாடுகளால் மூளையானது சுறுசுறுப்பாகவும், திறன் மிக்கதாகவும் மாறும்.

**டி.வி. பார்ப்பதைத் தவிர்த்தல்:**

பொதுவாக நம்மை சாந்தப்படுத்திக் கொள்ள டி.வி. பார்ப்பதை ஒரு வழக்க மாகக் கொண்டுள்ளோம். அதை ஒரு பொழுதுபோக்காகவோ அல்லது வேறு காரணத்திற்காகவோ எடுத்துக்கொண்டா லும், டி.வி. பார்ப்பதால் உங்களின் மூளைத்திறன் மேம்பாடு அடையாது. டி.வி. பார்ப்பதில் உங்களின் சக்தி பெருமளவு செலவழிக்கப்படுகிறது என் பதை கவனத்தில் கொள்ள வேண்டும். டி.வி. பார்ப்பதற்கு பதிலாக ஏதாவது முக்கிய பத்திரிக்கைகளை படிக்கலாம் அல்லது நல்ல நண்பர்களுடன் அமர்ந்து பயனுள்ள விவாதங்களில் ஈடுபடலாம்.

**ஒரு புதிய மொழியை கற்றல்:**

மொழியை கற்கும் செயலானது மூளையின் திறனை அதிகரிப்பதிலும், அதை சுறுசுறுப்பாக வைத்துக்கொள் வதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே பயனுள்ள வகையில் ஒரு வெளிநாட்டு மொழியை தேர்வுசெய்து அதை கற்க தொடங்க வேண்டும். அதன் மூலம் நமக்கு இரட்டை நன்மை கிடைக்கிறது.

மேற்கூறிய பயிற்சிகளையும், வழி முறைகளையும் தொடர்ந்து பின்பற்றும் போது, நமது மூளை புதிய சக்தி பெற்று, நாம் புத்திசாலி என்ற பெயரை [illegible]

## தலாக்கை... (11 ஆம் பக்கத் தொடர்)

09 வருடங்களின் பின்னரும் முஸ்லிம் தனியார் சட்ட சீர்திருத்த முன்மொழி வுக்கான குழுவினரிடத்தில் இந்த விட யம் தொடர்பாக இணக்கமானதொரு நிலைப்பாடு எட்டப்படவில்லை. இந்த நிலையிலேயே சமமாகப் பங்கிடப்படு வதற்காக அப்பம் குரங்கிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. இந்த இரண்டு தரப்பி னரதும் நிலைப்பாடுகள் தொடர்பில், சமூகத்தின் ஷரீஆ அறிஞர்கள் அமைதி யாக இருப்பார்களானால் அப்பத்தை குரங்கு சாப்பிடுவதைப் பார்த்துக் கொண் டிருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

எமக்கு முன்னிருந்த சமூகம், சமூ கத்துக்காக எதையாவது செய்து விட்டுப் போவதில் ஆர்வமாக இருந்தார்கள். இன்றிருக்கும் சமூகம் எதையுமே செய் யாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா கவனிக்க வேண்டிய சில விட யங்கள் இருக்கின்றன.

உலமாக்கள் என்றால் இந்த ஐயா யிரத்துச் சொச்சம் பேரும் மட்டும்தான், அடுத்தவர்களுக்கெல்லாம் தீனுடைய விஷயத்தில் பேசுகின்ற அருகதை கிடையாது என்று நினைப்பது, ஏதோ ஒரு சாக்குப் போக்குக்காக அடுத்தவர் களை கருத்துக்களைப் பெற்றுக் கொள் வது, ஏனையவர்கள் முன்வந்தார்கள் அவர்களை மட்டந்தட்டி மிதித்துப் போடுவது போன்ற பண்பாடுகளால் பலரும் ஜம்மியதுல் உலமா விடயத்தில் தூரமாகியிருப்பதாகச் சொல்லிக் கொள் கிறார்கள்.

அத்தோடு, நாட்டில் ஷரீஆத் துறைக் கான தீர்வுகளைச் சொல்ல வேண்டிய ஜாமிஆ நளீமிய்யாவின் நழுவல் போக்கு. இலங்கையில் இஸ்லாமிய சிந்தனையின் முன்னோடிகளான இவர் கள், இஜ்திஹாத் தொடர்பிலான மாநா டொன்றையே அதனுடைய பொற் காலங்களில் நடத்தியுள்ளனர். இன்று இது போன்ற முக்கியமான ஒரு தரு ணத்தில் அவர்களுடைய பங்களிப்பு அதிகமாகவே இருந்திருக்க வேண்டும். ஆனாலும் முஸ்லிம் தனியார் சட்ட சீர்திருத்தக் குழுவில் ஜாமிஆ நளீமியா சார்பில் நியமிக்கப்பட்ட கலாநிதி சுக்ரி யினால் எந்தக் கூட்டத்துக்குமே சமூக மளிக்க முடியவில்லை. இதற்கு அவரது தேகாரோக்கிய நிலை காரணமாக இருக்கலாம்.

ஆனால் இதுபோன்ற வேளைகளில் ஜாமிஆ நளீமியா சார்பாக பிறிதொரு வரும் நியமிக்கப்பட்டு அவருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கலாம். இந்த விடயத்தில் இரண்டு தரப்புமே பிழை விட்டிருக்கிறார்கள். முடிவில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சார் பான அறிக்கையில் கலாநிதி சுக்ரி அவர்களும் கையெழுத்திட்டிருக்கிறார் கள் என்பதை நீதியரசர் ஸலீம் மர்சூப் சார்பு தரப்பினர் சுட்டிக் காட்டுகிறார்கள்.

முஸ்லிம் தனியார் சட்டம் தவறாகப் புரியப்பட்டு நடைமுறைப்படுத்தப்படு வதற்கும் எதிர்காலங்களில் அது நம்மை விட்டே கைநழுவிச் செல்வதற்கும் ஸலீம் மர்சூபையோ ரிஸ்வி முப்தி யையோ எதிர்காலச் சமூகம் குறை சொல் வார்களோ இல்லையோ, அப்போது இந்த ஷரீஆ படித்த சமூகம் எங்கே இருந்தது என்ற கேள்வியை மட்டும் நிச்சயமாகக் கேட்கப் போகிறார்கள். அப்போது அவர்களும் எங்களது அரசி யல்வாதிகள் போலத் தான் இருந்தார் கள் என்று சொல்வதற்கு நாங்களோ நீங்களோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை. வரலாறு அதனை எழுதி வைத்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீள்பார்வை விளையாட்டு

## 2017ம் ஆண்டுக்கான உலகின் தலைசிறந்த விளையாட்டு வீரர் விருதை வென்றார் பெடரர்



சுவிஸ்லாந்தின் முன்னணி டென்னிஸ் வீரர் ரொஜர் பெடரர் 2017ம் ஆண்டுக்கான உலகின் சிறந்த விளையாட்டு வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் அதிசிறந்த விருது வழங்கல் விழாக்களில் ஒன்றான லோரியஸ் விருது விழா பெப்ரவரி 27ஆம் திகதி பிரான்சின் மொனாகோவில் நடைபெற்றது.

இந்த விழாவில் 2017ம் ஆண்டுக்கான சிறந்த விளை யாட்டு வீரருக்கான விருது ரொஜர் பெடரருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், 23 கிரான்ஸ் ஸலாம் பட்டங்களை வென்ற அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கான விருதினை வென்றார். பெடரர் கடந்த ஆண்டு நடைபெற்ற விம்பில்டன் மற்றும் அவுஸ்திரேலிய ஓபன் சம்பியன் பட்டங்களை வென்றதுடன், மொத்தமாக 20 கிரான்ஸ் ஸலாம் பட்டங்களை வென்றிருந்தார். இதேவேளை இதற்கு முன்னர் நடைபெற்ற விருது விழாவில் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதினை தடகள வீரர் உசைன் போல்ட் வென்றிருந்தார் என்பதுடன், இந்த விருதினை பெடரர் மொத்தமாக 6 தடவைகள் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## தேசிய கால்பந்து அணிக்கான வீரர்கள் தெரிவு ஆரம்பம்

### மார்ச் 24இல் அணி விபரம் அறிவிப்பு

இலங்கை தேசிய கால்பந்து அணிக்கு புதிய பயிற்றுவிப்பாளராக பகீர் அலி தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அடுத்துவரும் சர்வதேச போட்டிகளுக்கான தேசிய அணியைத் தெரிவு செய்வதற்கான வீரர்கள் தெரிவு ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இலங்கை கால்பந்து சம்மேளனம் (FFSL) தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் சர்வதேசப் போட்டிகள் எதிலும் பங்கு கொள்ளாத இலங்கை கால்பந்து அணி, FIFA தரவரிசையில் வரலாற்றில் மிகவும் மோசமான பதிவாக 200 ஆவது இடத்தில் உள்ளது.

இவ்வாறான ஒரு நிலையில், கடந்த ஆண்டு நடுப்பகுதியில் இடம்பெற்ற இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கான தேர்தலின் பின்னர் தெரிவாகியுள்ள புதிய நிர்வாகம், இலங்கை கால்பந்தில் பல முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கான திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அதன் முதல் கட்டமாக தேசிய அணியை முன்னேற்றும் திட்டத்தில் கவனம் செலுத்தியுள்ளது.

குறித்த திட்டத்திற்கு அமைவாக, இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், சர்வதேச மட்டத்தில் அதிக அனுபவத்தை பெற்றவருமான நிசாம் பகீர் அலி தேசிய அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதே போன்று தேசிய அணியின் முகாமையாளராக சர்வதேச மட்டத்தில் நடுவராகவும், போட்டி மத்தியஸ்தராகவும் கடமை யாற்றிய அனுபவங்களைக் கொண்ட சுனில் சேன வீர தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், பகீர் அலியின் பயிற்றுவிப்பின் கீழ் இடம்பெறவுள்ள முதலாவது தொடராக எதிர்வரும் செப்டம்பர் மாதம் 4ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை பங்களாதேஷில் இடம்பெறவுள்ள தெற்காசிய கால்பந்து சம்மேளன சம்பியன்ஷிப் (SAFF Championship) தொடருக்கான அணியைத் தெரிவு செய்வதற்கான வீரர்கள் தெரிவு கடந்த மாதம் 26 ஆம் திகதி முதல் பல கட்டங்களாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த தேர்வுக்கு டயலொக் சம்பியன்ஸ் லீக்கில் விளையாடும் ஒவ்வொரு கழகங்களிலும் இருந்து தலா 5 வீரர்களையும், பிரிவு ஒன்று (டிவிஷன்) தொடரில் விளையாடும் கழகங்களில் இருந்து தலா 2 வீரர்களையும் பரிந்துரை செய்ய முடியும்.

மேலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த திறமையான வீரர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் குறித்த பகுதிகளிலிருந்தும் தங்களது லீக்குகளினால் பரிந்துரை செய்யப்படும் வீரர்களுக்கென்று தனியான தேர்வொன்றும் இடம்பெறவுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக, முன்னணி அணிகளில் விளையாடாத திறமையான வீரர்களை தேசிய அணிக்கு உள்வாங்கும் நோக்கில் நாடு பூராகவும் உள்ள கால்பந்து லீக்குகளுக்கும் சிறந்த வீரர்களை பரிந்துரை செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்படும் குழாமை தேர்வுக் குழுவினர் மார்ச் மாதம் 24ஆம் திகதி வெளியிடுவர்.


## வெளிவந்துவிட்டது



இதழ் - 46 விலை: 60.00

- பச்சை நிறக் கனவு
- குடும்ப வாழ்வைப் பாதிக்கும் இரண்டு விடயங்கள்...
- மன நிம்மதியுடன் வாழ சில உபதேசங்கள்
- கீழ்த்தரமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தல்
- சொத்துப் பங்கீட்டில் சமத்துவம்






மாணவர்களிடம் ஊடக அறிவை கட்டியெழுப்பும் நோக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நடாத்திய ஒருநாள் ஊடக செயலமர்வு கடந்த மாதம் 24 ஆம் திகதி மாதம்பை அல் - மிஸ்பா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன், விடிவெள்ளி நாளிதழின் பிரதம ஆசிரியர் எம்.பி.எம். பைரூஸ், கலைவாதி கலீல், லேக் ஹவுஸ் தமிழ் வெளியீடுகளுக்கான ஆலோசகர் எம்.ஏ.எம். நிலாம் மற்றும் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.




எழுத்தாளர் அஷ்ஷெய்க். ஏ.சீ.எம். நஸீர் எழுதிய 'இந்த சில நாட்களாய்' என்ற சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா கம்பளை ஜாதிக உறுமய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராக அஷ்ஷெய்க். சீ.எம்.எம். சுபைர் (நளீமி)கலந்துகொண்டார். இதில் முஸ்லிம் பெண் எழுத்தாளர் நயீமா சிந்தீக் உட்பட இலக்கிய ஆவர்வலர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.







''இயற்கையை நேசிப்போம் உயிர்களை காப்போம்'' எனும் தொனிப்பொருளிலான தேசிய ஸலாமா தின நிகழ்வு கடந்த 25.02.2018 அன்று ஹெம்மாதகம அல்- அஸ்ஹர் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கேகாலை மாவட்ட அரச அதிபர் L.J.M.G சந்திரசிரி பண்டார கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதிகளாக ஜமாஅதுஸ் ஸலாமாவின் தலைவர் அஷ்ஷெய்க். ஆசாத் அப்துல் முூத், மாவனெல்ல பிரதேச செயலாளர் எம்.எம்.பி. பிரியாங்கனி பெதன்கொட, அரநாயக்க பிரதேச செயலாளர் இஸட்.ஏ.எம். பைசல், ஹெம்மாதகம மஸ்ஜித் சம்மேளனத் தலைவர் எம்.எச்.எம்.யூசுப் ஆகியோர் கலந்துகொண்டனர். சிறப்புப் பேச்சாளராக இலங்கை சூழலியலாளர் சங்கத்தின் தலைவர் திரு. வஜிர சிறிமான்ன கலந்துகொண்டு உரைநிகழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.